Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 16 | வெள்ளி - 09 | 22 - 28 - ஏப்பிரல் - 2005



## படித்ததில் பிடித்தது

# தெரிந்த முகம்

எங்களுக்காக
காலி செய்யப்பட்டு
ஒதுக்கப்படுகிறது
ஒரு சிறை.
உருவம் திருடிய குற்றத்திற்காக
நமக்குக் கிடைக்கிறது
இந்த ஆயுள் தண்டனை.

இடம் போதாததாகவே
இருக்கிறது பெயர்
நம்முடைய எல்லாவற்றையும்
ஒடுக்கிக் கொண்டு
இருக்க முடியவதில்லை அதற்குள்.

காற்றோ வெளிச்சமோ
உள்ளே வரச் சாளரங்கள் இல்லை
இருந்தாலும்
மூச்சுவாங்க
வெளியில் வரமுடிவதில்லை.

பெயரில் நாம்
முகம் மறைத்துக் கொள்கிறோம்
இருந்தாலும் அதன் மீது
வலிந்து வரையப்படுகிறது
நம் முடையதைப் போன்ற
ஒரு முகம்.

பிறகு
அந்த முகத்தின் மீது
நாம் மோகம் கொள்கிறோம்
அதற்கு ஒப்பனை செய்து
முத்தமிடுகிறோம்.

தெய்வங்களின்
உணர்வு அழுக்கேறிய
பழைய சட்டைகளை
அல்லது
போலிச் சரிகையால்
நெய்யப்பட்டதை
அணிய நேரிடுகிறது
அளவு பொருந்தவில்லை யென்றாலும்.

பெயரிலிருந்து தப்பித்து
ஓட முடிவதில்லை எங்களால்
பிறகு
காட்டிக் கொடுக்கப்பட்டு
பெயரிலேயே
சிலுவை அறையப்படுகிறோம்.

பிறகு
எங்களை புதைத்து விட்டு
சிலுவையை வைத்திருக்கிறது
உலகம்.
சிலுவையின் மீது
வரையப்படுகிறது நம்முடைய
தெரிந்த முகம் ஒன்று.

ஆங்கிலத்தில்:~விட்டல் ஜோன்
தமிழில்:~ இ.றஜித்

# கார சாரம்

## விளம்பரங்கள் படுத்தும் பாடு

விற்பனைக்கு விளம்பரம் வேண்டும். விளம்பரமில்லாத வியாபாரம் பருப்பில்லாத கலியாணம் போல என்பார்கள். அந்த வகையில் உலகின் பலபாகங்களிலும் இந்த விளம்பரங்களுக்காக ஏராளமாகச் செலவிடும வழக்கம் உள்ளது. விளம்பரங்கள் பலவிதம். ஊடகங்களாக வானொலி, பத்திரிகை, ஒலிபெருக்கி, தொலைக்காட்சி, வாய்மொழி,சுவரொட்டி, சினிமா என ஏராளமான முறைகள் கையாளப்படுகின்றன. இதனடிப்படையில் விளம்பரங்களுக்காகப் பயன்படுத்தப்படும் படங்களில்தான் ஒரு பிரச்சினை எழுகிறது. "மளமளப்பான சவரத்துக்கு குரங்குமார்க் பிளேடுகள்"

இதற்காக ஒரு படம் போட்டால்தானே கவர்ச்சியாக இருக்கும். இடையில் அரையடி தோலையே மறைத்து வளவளப்பான கால்களை ஒன்றின் மேலொன்றாக வைத்து ஒரு பெண் உட்கார்ந்திருக்கிறாள். அந்தப் பெண்ணுக்கும் சவரப்பிளேடுக்கும் என்ன சம்பந்தம்.

புடைவைக் கடை,நகைக்கடை, கூந்தல்தைலம், அழகுசாதனப் பொருட்களுடன், இன்று ஆண்களின் படங்கள் ஓரளவு வருகின்றன. "இந்தச் சேலையை எந்தக்கடையில் வாங்கினாய்" "இதனால் தான் நீ ராணிகளுக்கெல்லாம் ராணி" என்று ஒரு ஆண் ஒரு பெண்ணை வியப்பதாக வந்த விளம்பரங்களைவிட ஒரு ஆண் தன்னைத் திரும்பிப்பார்ப்பது பெருமைக்குரியதாகக்காட்டும் வசனங்கள் ஏக்கப்பார்வைகள் பெண்களுக்கே உரியவையாகச் சித்தரிக்கப்படுகின்றன.

ஒரு ஆணின் முழு உடலையும் மறைத்து உடையணிவிக்கும் சினிமாப் படத்தயாரிப்பாளர்கள் பெண்ணுக்கு பெரும் பொருட்செலவில் சிக்கனமாக?! உடையணிவிக்கவே விரும்புகிறார்கள்.

பெண்களை இழிவுபடுத்தும் மடமைக் கருத்துக்களுக்கெதிராக உலகெங்கும் பெண்கள் போராடி வந்தாலும், பெண்கள் தங்கள் அங்கங்களைக் காட்டிப் பொருள் சேர்ப்பது ஒன்றும் குறைந்துபோய் விடவில்லை.

விளம்பரத்தட்டிகளில் இன்றெல்லாம் பாடசாலைச் சிறுவர்களைக் கவரும் வாசகங்களும் அவர்களுக்குச் சம்பந்தமில்லாத வகையில் வருகின்றன. இவற்றைவிட சினிமாவில் அவர்கள் பெரிய மனிதர்களின் காதலுணர்வுகளை வெளிப்படுத்தும் கருவிகளாகக் காட்டப்படுகின்றனர். அந்தக் காட்சிகள் திரையில் காட்டப்படும்போது வியந்து கொள்வதற்குப்பதில் எரிச்சலே வருகிறது.

விளம்பரப்பலகைகளை எங்கெங்கு வைக்கலாம், எவ்வளவு பெரிதாக வைக்கலாம், இரவில் அவற்றுக்கு எவ்வளவு ஒளி வைக்கலாம் எவ்வகையான படங்கள் பயன்படுத்தலாம். என்பதற்கெல்லாம் சட்ட விதிகள் உண்டு. எவரும் தமது இஷ்டப்படி எவரொருவரையும் இழிவுபடுத்தும், துன்புறுத்தும், அவதூறு செய்யும் விதத்தில் விளம்பரங்களை வைக்க முடியாது. பாதிக்கப்படுவோர் இதற்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்ற போதும், யாரும் தமக்கிழைக்கப்படும் இவ்வகைச் செயல்களுக்காக முறைப்பாடு செய்ய முன்வருவதில்லை.

உந்துருளிகளின் வாணிபத்தின் உச்சத்தில் உள்ளவர்கள்- கவர்ச்சிகரமான சவாரிக்கென ஒரு விளம்பரப்பலகையை வைத்துள்ளனர். நடன மாதரின் பின்புறத்தோற்றம் அதில் போடப்பட்டுள்ள படம் நடன மாதர்களுக்கும் மோட்டார் சைக்கிளுக்கும் என்ன தொடர்பு விளங்கவில்லை.

புகைப்படக்கலைக் கடைகளில் இன்னுமொருபடி மேலாக நடக்கிறது. ஐம்பத்தைந்தாம் ஆம் கட்டையருகே ஒரு புகைப்படக்கலையகம் வருக வருக என வரவேற்கிறது. உள்ளே அரைஅடி ஆடையுடன் இரு பெண்கள் வாசலில் நின்று வரவேற்கின்றனர். புதுக்குடியிருப்பில் ஒரு கடை வாசல் நீச்சல் உடையில் டென்னிஸ் மட்டையுடன் ஒரு பெண் கால்களைப் பின்னியவாறு நிற்கும் படம் ஆளுயரச்சிற்பமாக முன்னிற்கிறது. கடையிலும் பெருமளவு பெண்களே வேலைசெய்வதுதான் வெட்கக்கேடு. பெண்கள், அவர்களுடைய விடுதலைப் பெண்களின் மென்மை என்றெல்லாம் பேசும் போது, பொதுவாகக்கேட்பவர்கள் அது யாரோ அடுத்தவீட்டுப் பெண்களைப்பற்றி பேசுவதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ என நினைக்கிறேன். நான் பேசுகிற பெண்ணியல் நோக்கு உங்கள் சகோதரி பற்றியது தான். உங்கள் மனைவிபற்றித்தான்.

ஏன் வித்தியாசமாகப் பார்க்க வேண்டும். விளம்பரத் தட்டிகளில் பெரும்பாலும் புதிய மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன. உலகின் காலடியில் குவிந்துகொண்டிருக்கும் பண்டங்களுக்கான சந்தையை பெண்களை மட்டும் வைத்துத் தேடமுடியாது. நீங்களே பாருங்கள். வளர்ந்த நாடுகளின் விளம்பரங்களில் பறவைகள், பூக்கள், மான்கள், வண்டுகளென நுட்பமான விடயங்கள் புகுந்து கொண்டிருப்பதை. அழகிய கலை நுட்பமான இயற்கை அற்புதங்களை படமாக்கி விளம்பரங்களில் பயன்படுத்துகின்றனர். இன்னும் நாங்கள் உள்ளாடை விளம்பரத்திற்கும் உழுந்தரைக்க மாவிடிக்க எண்டும் பெண்களையே அனைத்திற்கும் இழுக்கிறோம். இவற்றை எதிர்க்கும் மனத்துணிவுகூட எம் குலப் பெண்களுக்கில்லை.

மாயா

---

# ஏன்... மாறக்கூடாது?

இவ்வுலகம் பலதரப்பட்ட மக்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. இங்கு வாழும் இனத்தவர்கள் யாவரும் அவரவர் கலாச்சார முறைகளைப் பின்பற்றியே வாழ்கின்றனர். பழக்க வழக்கங்களிலும் சரி, உடைகளிலும் சரி சகல இன மக்களும் வேறுபட்டே வாழ்கின்றனர். வேறுபாடுகள் என்பது நாம் என்ன இனம் என்று காட்டவே அன்றி ஆபாசத்தைக் காட்ட அல்ல. எந்த இனத்தவர் எப்படி ஆடை அணிந்தாலும் எமக்கு அதனால் பிரச்சினையில்லை. எம் தமிழினம் எம் பண்பாடுகளைப் பின்பற்றி நடந்தால் எம்முடைய பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படும் என்பது மறைக்க முடியாத உண்மை.

இன்றைய எம் தமிழினம் அதுவும் குறிப்பாக பெண்கள் அணியும் ஆடைகளைப் பார்க்கும் போது இந்த ஆடையை எப்படி அணிந்தார்கள் என்றே நினைக்கும் அளவுக்கு மிகவும் இறுக்கமாக இருக்கிறது.

அத்தோடு மட்டுமல்ல, அவர்கள் அணியும் ஆடைகளில் பெரியதொரு வெட்டு, இவ்வாடைகளை கட்டிக்கொண்டு அலைவதிலும் பார்க்க ஒரு ஜீன்ஸ் சேட்டு என்பவற்றைப் போட்டால் கொஞ்சம் கூட பெண்களின் அங்கங்கள் தெரியாது.

நாகரிகம் எமக்குத் தேவை தான் அது அநாகரிகமாக ஆபாசத்தை தூண்டுதல்தான் தவறு.

இன்று எம் தமிழ் பெண்கள் இப்படியான அரை குறை ஆடைகளை அணிவதால் ஒட்டுமொத்தமாக எல்லாப் பெண்களுக்கும் கூடாத பெயர் கிடைக்கிறது. பெண்களுக்கும் அழகு என்பது அரை குறை ஆடைகளில் அல்ல அடக்கமான ஆடைகளில்தான்.

சில பெண்கள் அது தமக்கு பெரிய மதிப்பெனக் கருதி தலைகீழாக நடக்கின்றனர். எம் பெண்கள் இந்திய திரைப்படங்களைப் பார்த்தே பாழாகிக் கிடக்கின்றனர். தங்களை படங்களில் வரும் கதாநாயகிகள் போல் ஆக்கிவிட முயற்சிக்கின்றனர். ஆடைகளை நாம் அணிவது மானம்காக்கவே. அதனை விற்க அல்ல என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்.

நாகரிகத்திற்கேற்ப ஆடைகளை நாம் அணியலாம் அதில் தப்பில்லை. எம்முடைய பெண்மைக்கே இழிவான முறையில் எம் ஆடைத் தெரிவு இருப்பதுதான் அலங்கோலம். ஆடைத் தெரிவின் போது அடக்கமான நாகரிகத்தை நாம் கருத்தில் கொண்டு அணியலாம்.

பெண்கள் இப்படி அரை குறையாக அலைவதால்தான் பெண்ணினம் இன்று கைதட்டிக் கூப்பிடும் நிலை வந்துவிட்டது.

காலம் போற போக்கைப் பார்த்தால் தமிழரின் பண்பாடுகளே காணாமல் போய்விடும் போல் உள்ளது. எம்பண்பாடுகள் பாழடையாமல் பாதுகாப்பாய் இருப்பது எம் நடைமுறைகளில் தான் உள்ளது.

திரைப்படங்களைப் பார்க்கும் நாமும் அதில் வரும் ஆடைக் குறைப்பை மட்டும் ஏன் பழக வேண்டும். எத்தனையோ நல்ல விடயங்களையும் திரைப்படங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன அதனை நாம் வாழ்வில் கடைப்பிடிக்கலாம் அல்லவா? நாம் எப்பவும் நல்லவற்றை நாடிச் சென்று அடைய முயற்சிக்க வேண்டும்.

அவர்கள் அப்படி ஆடை போடுகினம் இப்படி ஆடை போடுகினம் என்ற நினைப்பில் நாம் எம்மை அலங்கோலப் படுத்தும் அளவுக்கு ஆடைகளை அணிதல் கூடாது.

சிவாஜினி

# நறுக்கென...

## பழகிய 'நா' படிய மறுக்கிறது..!



புதினம் தெரியுமே!

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தனது ஆலோசகரும் விசுவாசியும் கோயபல்ஸ் ரக பிரசாரகருமான கதிர்காமரின் வாயை கொஞ்சம் கட்டிப் போட்டுள்ளாராம்.

அவருக்குக் கொடுத்த பேச்சுச் சுதந்திரத்தை அவர் சற்று அதிகமாகவே அத்துமீறியே பாவிக்கத்தொடங்கியதால் வந்த வினையென்று கொழும்பு வட்டாரங்கள் குசுகுசுக்கின்றன.

உலகெல்லாம் பறந்து பறந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரசாரம் செய்வதையே தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரே வழியென தீர்மானித்து அக்கடமையை சிரமேற் கொண்டு செய்து சிங்களப் பேரினவாதிகளின் பாராட்டைப் பெற்ற கதிர்காமர் அண்மைக் காலங்களில் ஜே.வி.பி யினருடன் கொஞ்சம் நெருக்கமாகவும், அதிகம் பணிவாகவும், இன்னும் கூறுவதானால் அவர்களைச் சமாளித்து திருப்திப்படுத்தி ஆட்சிக்குள் குழப்பம் வராமல் காப்பதற்காக சனாதிபதியின் அனுமதியின்றி அவர்களுடன் பேச்சுக்களை நடத்தி வாக்குறுதிகளை வழங்கியதில் சனாதிபதி எரிச்சலடைந்துள்ளார்.

ஐந்து சதத்திற்கும் பெறுமதியற்ற ஒருவராக சனாதிபதி அம்மையாரை ஜே.வி.பி யினர் மிகத் துல்லியமாக இனங்காட்டி வர்ணித்ததன் பின்னர் அம்மணியார் ஆடித்தான் போய்விட்டார்.

தன் கணவரைக் கொன்றவர்கள் எனத் தான் ஜே.வி.பி யினரை விரல் சுட்டிக்காட்டி முன்னொருமுறை குற்றம் சாட்டியமைக்கு இப்போது அவரை அவர்கள் விரல் சுட்டிக்காட்டி பெறுமதியற்ற ஒருவர் எனக் கூறி பழிவாங்கிவிட்டனர் என்றே அம்மணியார் வெதும்புகிறார்.

ஜே.வி.பி யினர் தனது தலைக்கு மேலே போய் நின்று கூத்தாட தான் அனுமதித்ததன் பலனை அம்மணியார் அனுபவிக்கத் தொடங்கிவிட்டார். ஜே.வி.பி யினர் மீது அம்மணியார் கொண்டிருக்கும் கடுப்பை அறியாது அவர்களிடம் போய் கதிர்காமர் சமரசம் பேசியதில் எரிச்சல் கொண்டுள்ள அம்மணியார் 'சொன்னதைச் செய்யுங்கள்' என்று கறாராகக் கூறிவிட்டாராம்.

அதாவது தீர்மானிப்பது நான் தெரிவிப்பது 'மட்டும் நீங்கள்' என்ற பாணியில் அம்மணியார் கதிர்காமரை அடக்கியுள்ளார்.

இதனையடுத்து கதிர்காமர் 'கப்சிப்' ஆகி நிரந்தரமாக ஒரு ஒலிபெருக்கியாக செயற்பட முடிவெடுத்து விட்டதாகக் கேள்வி.

இப்போதெல்லாம் வீரவன்ச-சோமவன்ச அண்ட் கொம்பனியினரைக் கண்டால் வாய் மூடி மௌனியாகும் கதிர்காமர், அடுத்த தேர்தலில் உருவாகும் வலுவான கூட்டணியில் ஒட்டிக் கொள்ளும் உத்தியுடன் 'நா' காக்க தொடங்கியுள்ள போதும், பழகிய 'நா' படியமறுக்கிறதே!

அது சரி இன்னொரு சேதி தெரியுமே!

அம்மணியாருக்கு கதிர்காமர் மீது மட்டுமல்ல தன்னுடைய அடுத்த ஆலோசகர் அநுராத்தம்பி மீதும் கடுப்பாம்...

ஆலோசகர்களின் கருத்துக்களை கவனிப்பதே இல்லையாம்!

## புதிய புலம்பல்..!



இது ஒரு புதுச் செய்தி பாருங்கோ...!

-விடுதலைப்புலிகள் புதிதாக ஒரு படையணியை ஆரம்பித்துள்ளார்களாம். அதுவும் நீர்மூழ்கிப் படையணியாம்.

-கொழும்பு பேரினவாதப்பத்திரிகையின் புதிய கண்டுபிடிப்பு இதுவாகும். கொஞ்சநாட்களின் முன்னர் அரசாங்கமும் இந்த வகையிலான சிங்கள இனவாத ஊடகங்களும் தேசிய மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் கூட விடுதலைப்புலிகளின் வான்படையணி குறித்து பெருமளவில் மனதிற்கு வந்தபடி செய்திகளை உருவாக்கி தொடர் பிரசுரப்புலம்பல் ஒன்றினை நடத்தி அதனால் எந்தவிதமான தாக்கமும் ஏற்படாததால் ஓய்ந்து முடங்கிப்போன நிலையில், இப்போது இந்தக் கண்டுபிடிப்பை அந்தச் சிங்கள பத்திரிகை செய்தியாகக் கக்கியுள்ளது.

-இத்தகைய செய்திகள் அந்தக் கதிர்காமருக்கு பெரும் உற்சாகத்தைக்கொடுத்திருக்கும்... ஆஹா அடுத்த உலகப் பிரசாரச் சுற்றுலாவுக்கான கருப்பொருள் கிடைத்துவிட்டது எனத் துள்ளியிருப்பார். கச்சதீவுமுதல் ஹவாய்தீவுவரை பறந்து பறந்து புலிகளின் நீர்மூழ்கிப் படையணியால் 'சுனாமி' ஏற்பட்டது என்று தனது கண்டுபிடிப்பை வெளியிட்டு உலகை கிறுகிறுக்க வைக்கும் திட்டத்திலும் இறங்கியிருப்பார்.

-முன்னர் வான்படையின் இலகுரக இரு சின்னஞ்சிறு விமானங்களால் புலிகள் கொழும்பின் அரைப்பகுதியை அழிந்துவிடுவார்கள் என்று அலறிக்கொண்டிருந்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறிவிக்கிரமநாயக்க... ஐயையோ புலிகளின் சின்னஞ் சிறு நீர்மூழ்கிக் கப்பல்களால் கொழும்புத்துறைமுகமே நிர்மூலமாகப்போகிறது என்று அலறவும் கூடும்.

-எதுவோ கொஞ்சக் காலத்திற்கு உலகையும், தென்பகுதிச் சிங்கள மக்களையும் அச்சுறுத்தி புலிகள் பேரால் கிலியேற்படுத்த ஒரு புதிய செய்தியை பேரினவாதப் பத்திரிகையொன்று உருவாக்கிவிட்டது.

- இனி இக்பால்அத்தாஸ் போன்றவர்கள் பழைய கதைகள் சிலவற்றைத் தேடி எடுத்து (தாய்லாந்து-புகெற் பகுதியில் முன்னர் கைப்பற்றப்பட்ட சிறியரக நீர்மூழ்கிக்கான உதிரிப்பாகங்கள் குறித்த செய்தி) புதுவடிவம் கொடுத்து கதை எழுதி காசு பண்ணிக்கொள்வார்கள்.

- கொஞ்ச நாளில இதுவும் புஸ்வாணமாகிப் போய்விடும்! பிறகு? கற்பனை பண்ணி செய்திக்கதை எழுத சிங்களப் பத்திரிகைகளுக்கு ஆட்களா இல்லை! விடயங்களுமா இல்லை!

- விடுதலைப்புலிகளின் பறக்கும்தட்டு படையணியின் நடமாட்டம் என்ற ஒரு செய்தியை அவர்கள் உருவாக்கினாலும் ஆச்சரியமில்லை...

பொய் எழுத சிலரும், பரப்ப அரசியல் வாதிகளும் இருக்கும்போது கேட்பதற்கும் படிப்பதற்கும் நம்புவதற்கும் சில மடையர்களும் இல்லாமலா போவார்கள்?

## ஜெயலலிதாவின் புலம்பல்



விசயம் தெரியுமே உங்களுக்கு!

தமிழக முதல்வர் டாக்டர் பொன்மனச்செல்வி, புரட்சித்தலைவி இதயதெய்வம் என அவரது காலில்விழும் தன்மானமற்றவர்களால் பூஜிக்கப்படும் ஜெயலலிதா அமையார் மீண்டும் விடுதலைப்புலிகள் குறித்து புலம்பத் தொடங்கி யுள்ளார்.

அதாவது இந்த அம்மணியார் இந்த விடயத்தில் அந்த கோமாளி அரசியல்வாதி சுப்பிரமணிய (ஆ) சாமியின் உடன்பிறவா உயிர்ச்சகோதரியாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறார்.

ஆட்சியிலோ, அரசியலிலோ தங்கள் நிலை பலவீன மடையும் வேளைகளில் விடுதலைப்புலிகளின் பெயரைப்பயன்படுத்தி பிரபலம் தேடி பிழைத்துக் கொள்வதில் இருவருமே கில்லாடிகள்.

சுப்பிரமணிய ஆசாமி ராஜீவ்காந்தியின் கொலையை வைத்தே ஆயுள்பூரா அரசியல் செய்வார். ஜெயலலிதாவோ அப்பப்ப கனவுகண்டு அறிக்கைவிட்டு விடுதலைப்புலிகளின் பெயரால் பிழைத்துக்கொள்வார். அண்மையில் யாரோ ஒரு பெண் இ.மெயில் மூலம் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அந்தப் பெண் ஒரு விடுதலைப்புலி என்றும் மத்தாப்பு அறிக்கை ஒன்றை விடுத்தார்.

ஆனால் அது புஷ்வாணமாகிவிட்டது. இப்போது அவர் ஒரு புலனாய்வுத்துறை உயர் அதிகாரி லெவலுக்குப் போய் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அசாம் மாநில உல்பா தீவிரவாத அமைப்புக்கும் தொடர்புகள் இருப்பதாக புதிய குண்டொன்றையே போட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல சந்தனக்கடத்தல் வீரப்பனைத்தாம் கொன்றுவிட்டதால் தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் நடவடிக்கையை தாம் முற்றாக ஒழித்து தமிழ்நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்றிவிட்டதாகவும் உலக மகாஜோக் ஒன்றையும் உதிர்த்துள்ளார்.


அவரது ஜெயா தொலைக்காட்சியில் அவரது தலைமையின் கீழ் நடக்கும் தமிழக சட்டசபை நிகழ்ச்சிகளின் காட்சித் தொகுப்புக்களைப் பார்க்கும்போது அம்மணி சட்டசபையை அமைதிப் பூங்காவாக வைத்திருக்கும் லட்சணம் தெரியும்.

கோமாளிகளின் கும்மாளமாக பலவேளைகளில் அரசியல் நாகரிகத்தினை அவமானப்படுத்தும் கும்பல்களின் உறைவிடமாகத் தோன்றும் தமிழக சட்டசபையை அமைதியாக நடத்திச் செல்ல துப்பில்லை... அதற்குள் அசாம் மீதுள்ள உல்பாக்களுடன் விடுதலைப்புலிகள் தொடர்பு என்று கதைவிடத் தொடங்கியுள்ளார் அம்மணி ஜெயலலிதா...

இவரின் இந்தப்பேச்சுக்கும் அவரது கட்சிக்காரர்கள் சட்டசபை மேசையில் டொக்கு டொக்கென்று தட்டுவதைப்போன்று தட்டிப் பாராட்டக்கூடும்...

உண்மையான உணர்வுடன் தமிழர்களாக இனமானம் பேணி நிற்போர் இதனைப் பார்த்து நகைக்கவே செய்வர்...

## விதி யாரைத்தான் விட்டது..!



'சேதி கேட்டியளே...!'

'விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசியல் குழுவொன்றிற்கு ஆனந்தசங்கரியார் எல்லே தலைவராகப் போறாராம்'

தள்ளாத வயதில் வாக்குத் தடுமாறி புலம்பிக் கொண்டும் அலம்பிக்கொண்டும் இருக்கும் சங்கரியாருக்கு அறளை பெயர்ந்த காலத்தில் இந்த 'முடி'யை சூட்டப் போகிறவர்கள் தமிழ்மக்களால் ஓட ஓட அடித்து விரட்டப்பட்டு துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று கொல்லைப் புற வழியாக அலக்க மலக்க ஓடியவர்களுக்கு துண்டு, துணி, துட்டு என அனைத்தையும் வழங்கி 'அரவ'ணைத்து வைத்து அடியாக்களாக்கி கௌரவித்து வரும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினரான 'றோ' அமைப்பினர்தான் என இணையத்தளச் செய்தியொன்று தெரிவித்துள்ளது.

இன்னும் சொல்லப்போனால் இந்திய ஆக்கிரமிப்புப் படை ஈழமண்ணில் தமிழ்த் தேசியவாதிகளை வேட்டையாடித் திரிந்தகாலத்தில் அவர்களின் கால்பிடி, வால்பிடி வேலைகளுக்கென உருவாக்கப்பட்ட ஈ.என்.டி.எல்.எவ் என்ற கும்பலுக்கு சங்கரியார்தான் பொருத்தமான தலைவர் என்பதை 'றோ' இனம் கண்டு கொண்டது போலும்...!

ஆரம்பத்தில் 'றோ'வால் முடிசூட்டப்பட்டவர்கள் அனைவரும் அவர்கள் முடி சூட்டியதாலேயே 'மே/பா இந்தியா' என எழுத வேண்டிய நிலைக்கு ஆளாகி உள்ளூரில் முகத்தை மட்டுமல்ல முகவரியையும் இழந்தவர்களாகி விட்டார்கள் என்பதை நன்கு தெரிந்து கொண்டும் சங்கரியார் தலைமைப் பதவியை ஏற்கத்தயாராகிவிட்டார் என்றால்...! அவருக்காக... அவரது பரிதாப நிலைக்காக அஞ்சலி செலுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை அல்லவா!

வரதராஜப் பெருமாள் குழு-

கருணாகும்பல்-

ஈ.என்.டி.எல்.எவ் அணி இன்னும் ஏனைய தமிழ் மக்களுக்கு எதிரான கூட்டங்கள் எல்லாவற்றையும் கூட்டி அள்ளி ஒரு மூலையில் குவித்து அதற்கு சங்கரியாரைத் தலைவராக நியமிக்கப் போகிறார்களாம்!

கடைசியில் அவரை எந்த இடத்தில் குந்த வைக்க வேண்டுமோ அந்த இடத்திற்கே இழுத்துச் சென்று விட்டார்கள்.

விதி யாரைத்தான் விட்டது...!

சரி இந்தக் குழுவின் கீழ் ஒரு இராணுவப் பிரிவும் உருவாக்கப்படப் போகிறதாம்...

இதற்கு கருணா தளபதியாக நியமிக்கப்படலாம் என்றும் பேச்சடிபடுகிறது.

இதற்குள்ளேயே அவர்களுக்குள் குழு மோதல்களும் ஆரம்பித்துவிட்டது. சொருவில சம்பவத்தைத்தான் கூறுகிறேன்.

எல்லா குப்பைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு 'றோ' புதிதாக என்னதான் குப்பை கொட்டப் போகிறதோ...?

**செங்குட்டுவன்**

# ஒன்று>பத்து>நூறு

ஒன்றைப பத்தாக்கும் கெட்டிக் காரத்தனத்தைப் பற்றி கிண்டலாகப் பல கதைகள் சொல்வார்கள். இது பரவாயில்லை எனுமளவிற்கு இப்போது காரியங்கள் ஏறுக்குமாறாக நடக்கின்றன.

ஒன்றைப்பத்தாக்கிய காலம் போய் ஒன்றை நூறாக்குகிற வாழ்க்கை உருவாகியிருக்கிறது.

தின்பண்டங்கள், உடைகள், பாவனைப் பொருட்கள், பயண வண்டிகள் எல்லாவற்றிலும் ஒன்றை நூறாக்கும் போலித்தனம் வளர்ந்துள்ளது.

முன்பு அரசியல்வாதிகள் தான் ஒன்றைப் பத்தாக்கும் வேலையைச் செய்துவந்தார்கள். அவர்களிடம்தான் அந்தக் கெட்டிக் காரத்தனமும் இருந்தது.

ஆனால், அரசியல் வாதிகளையே மிஞ்சிவிடும் அளவுக்கு சாதாரணமானவர்களே ஒன்றை நூறாக்கும் வல்லமைகளைப் பெற்று விட்டார்கள்.

அரசியலும் வியாபாரமும் தான் இந்தக் காரியத்திலீடுபடுகின்றன என்றில்லை. இந்த பெருப்பித்துக் காட்டுதல், அதன் வழியாகவும் அடி வழியாகவும் சுயநலனைப் பேணுதல் என்பதெல்லாம் இப்போது வேறு நிலைகளிலும் பரவியுள்ளன.

இதில் மற்ற எல்லோரையும்விட முன்னணியில் நிற்பது ஊடகக்காரர்களே.

மற்றெல்லாத் தொழிலையும்விட வருமானத்தைக் குவிக்கிற தொழிலாக இன்று இந்தத் தொழில் மாறிவிட்டது. தொழில் மரியாதை-அதன் கண்ணியம், அதற்குரிய கட்டுப் பாடுகள் , தகுதி முறைமைகள் எல்லாம் எப்போதோ மீறப்பட்டு விட்டன.

அதிலும் தமிழ்ச்சூழலில் இன்றிருக்கிற ஒன்றை நூறாக்கும் சித்து மிகவும் அசாதாரணமானது.

ஒரு கட்டுரையை சில வசனங்களை மட்டும் மாற்றி வேறு வேறு ஊடகங்களுக்கு விற்கும் காரியத்தை பல இடங்களிலும் காணலாம். முன்பு இப்படிச் செய்யமுடியாது. அப்படிச் செய்வதற்கு எழுதுபவன் விரும்புவதில்லை என்பது ஒரு காரணம். மற்றது அப்படி ஒரு கட்டுரையை மாற்றி மாற்றி வெவ்வேறு அமைப்பு பிரசுரிக்காது என்பதொன்று.

மீடியாக்களின் தனித்துவம், நிலைப்பாடு போன்றவை கூடுதலாகக் கவனிக்கப்பட்டதால் அவை பிற இடங்களில் பிரசுரமாகியவையை தமது ஊடகத்தில் வெளியிட விரும்புவதில்லை.

அத்துடன் இப்போது போன்று அன்று பல மீடியாக்களும் இருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட அளவில் எல்லைக்குட்பட்ட வீச்சுடன் அன்றைய மீடியாக்கள் இயங்கிய படியால் போட்டி பெரிதாக இருக்கவில்லை. இப்போதைய நிலைமை அப்படியில்லையே என்று சிலர் சொல்கிறார்கள்.

இதில் ஓரளவு உண்மையுண்டென்றாலும் இதற்கும் ஒன்றை நூறாக்குவதற்கும் இடையில் எந்தச் சம்பந்தமுமில்லையே.

பந்திகளை இடம்மாற்றி, வசனங்களில் சொற்களை மாற்றி அல்லது குலைத்துப்போட்டு எழுதி அனுப்பப்படும் ஒரே கட்டுரையை திரும்பவும் அறியாமல் மீள் பிரசுரம் செய்யும் ஊடகங்களை என்னவென்பது?

ஊடகத்திருப்பவர்கள் சமீபத்தில் வெளிவருகிற ஏனைய ஊடகங்களுடன் பரிச்சயங்கொள்வது இன்று குறைந்துவிட்டது. இதனால் ஒரே செய்தியையோ அல்லது கட்டுரையையோ ஒருவர் பலவற்றுக்கும் அனுப்பிவிடமுடிகிறது.

அதேவேளையில் பக்கத்தை எப்படியாவது நிரப்பிவிட வேண்டுமென்ற அந்தரத்தில் அல்லது தவிப்பில் காத்திருக்கிற ஊடகங்களுக்கு வேறு வழியுமிருப்பதில்லை. இதனால் அந்தக் கட்டுரை இன்னொரு ஊடகத்தில் வந்திருந்தாலும் பரவாயில்லை. தலைப்பும், சில வரிகளும் சில சொற்களும் மட்டும் வேறாக இருந்தால் போதும். எப்படியோ பக்கத்தை நிரப்பிவிடலாம், வானொலி என்றால் நேரத்தைப் போக்காட்டிவிடலாம் என்ற நிலையில் எந்த நிபந்தனையுமின்றி அவற்றை ஏற்றுவிடுகின்றன.

செய்தியாளர்கள் ஒரே செய்தியை பல ஊடகங்களுக்கும் விற்றுவிடுகிறார்கள். முன்பு ஒரு ஊடகத்துக்குரிய செய்தியாளன் இன்னொரு ஊடகத்தில் இப்படி ஒரே செய்தியை விற்றுப் பிழைப்பதில்லை. இப்போதப்படியில்லை. ஒரே செய்தியை பலவற்றுக்கும் பரிமாறப் படுகிறது. ஒரு செய்தி கைகால் சிறகுகள் என அலங்கரிக்கப்பட்டு வெவ்வேறு விதமாக நுகர்ச்சியாளனுக்குக் கொடுக்கப்படுகிறது. இது நுகர்ச்சியாளனை ஏமாற்றுகிற காரியமே. ஊடகங்களின் போட்டியில் முந்திக்கொண்டு செய்தியைக் கொடுப்பதற்காக ஊடகங்கள் எத்தகைய வழிமுறைகளையும் பின்பற்றலாம் என்ற போக்கும் வளர்ந்துள்ளது.

இது அடிப்படையில் பிழையானது. ஒவ்வொரு ஊடகமும் தனக்குத்தான் செய்தியை முதல் எடுக்கப்பார்க்கும். ஒரு செய்தியை முதன்முதலில் . கொடுக்கவே ஒவ்வொரு ஊடகமும் முயலும். அப்படியிருக்கும்போது ஒரு செய்தியாளன் அல்லது ஒரு பத்திரிகையாளன் தனது எழுத்தை எந்த ஊடகத்துக்கு முதற் கொடுப்பான்?

ஒவ்வொரு ஊடகத்துக்கும் முதன் முதலாகக் கொடுப்பதுபோலக் காட்டவே அவன் ஒவ்வொரு புதுமையாக "ஒன்றை நூறாக்கும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கிறான்"

ஊடகங்களும் எழுதுவோரும் நாகரிகமற்ற செயலில் தொடர்ந்தும் ஈடுபடலாம். ஆனால் அது நுகர்ச்சியாளரைப் பாதிக்கக்கூடாது.

இங்கே நடப்பது நேரடியாக நுகர்ச்சியாளனைப் பாதிக்கிறது. ஒரு நுகர்ச்சியாளன் சில சிறுமாற்றங்களோடு பலசமயம் பலகட்டுரைகளையும் செய்திகளையும் வெவ்வேறு ஊடகங்களில் நுகரும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

ஊடகங்கள் எப்படியோ லாபத்தை மட்டும் பெறும் நோக்கில் செயற்பட்டு வெற்றிபெற்றுவிடுகின்றன. ஒரு செய்தியாளனை தனியே வைத்திருப்பதற்குப் பதிலாக வேறு உடகத்துக்குச் செய்தியெடுக்கும் ஒருவரை இரவலாக வைத்திருப்பதன்மூலம் குறைந்த செலவில் செய்தியைப் பெற்றுவிடலாம் என்ற கணிப்பில் அவை செயற்படுகின்றன.

செய்தியாளனும் தனக்குரிய முழுமையான ஊதியத்தை ஒரு ஊடகம் வழங்காதபோது இப்படிப் பல ஊடகங்களுக்கும் சித்துகளாடி வயிற்றை நிரப்பவேண்டியதாகிறது.

இப்படி வளர்ந்த போக்கு இப்போது செய்தியை மிகச் சின்னத்தனமாக விற்றுப்பிழைக்கும் கேவலமான நிலையை உருவாக்கிவிட்டுள்ளது.

இதில் தமிழ் ஊடகங்களில் இப்போது இன்னும் ஒரு புதிய நோய் வளர்ந்திருப்பதையும் அவதானிக்கலாம்.

புலம்பெயர்ந்தோர் நடத்துகின்ற ஊடகங்களுக்கு முகவர்களாக இருக்கப் பலரும் அந்தரப் படுகிறார்கள். அங்கிருந்து கிடைக்கும் யூறோவோ, ஸ்ரேலிங் பவுணோ, டொலரோ இங்கே ரூபாயாகும்போது பெருந்தொகையாகிறது. இது பெரும் வருவாயைக் குவிக்கிறது. இதே வேளையில் இங்கே உள்ளூரிலும் அது செய்தி. அங்கே வெளியூரிலும் அது செய்தி.

ஆக ஒரு செய்தி-ஒரு கட்டுரை ஒரே சமயத்தில் வெவ் வேறு வருவாயைத் தரும் பண்டமாகிறது. இது எல்லா வகையான ஊடக நியாயங்களையும் கடந்து தரமற்ற-முறையற்ற ஒரு மாற்றுப் பண்பாட்டை உருவாக் கியுள்ளது.

இது இன்னும் தொடரத்தான் போகிறது. பாவமாகியுள்ளது நுகர்ச்சியாளன்தான்.

**வெளிவாசல்பாலன்**



---

# சிறுவர் நலன் கவனிக்கப்படவேண்டும்

• சிறிலங்காவில் சிறுவர் உரிமைகள் சீரழிந்து சிறார்கள் சீரழிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு சிறிலங்கா அரசோ அல்லது அதுசார்ந்த அமைப்புக்களோ அக்கறை காட்டுவதாக இல்லை. இலங்கையில் தமிழ் முஸ்லிம் சிறுவர்களை திட்டமிட்டு சீரழிக்க வேண்டும் என்பதில் ஆளும் அரசும் அதன் அடிவருடிகளும் செயற்பட்டு வருகின்றன. அதாவது ஆழிப் பேரலை ஏற்பட்டு இன்று மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அதன் மூலம் பெற்றோர்கள் உறவினர்களை இழந்த சிறார்களுக்கு ஏதாவது மேற்கொள்ளப்பட்டுள்ளதா இல்லை அது பற்றி எந்தச் செயற்பாடும் இதுவரையில் மேற்கொள்ளப்படாதுள்ளன.

இது ஒருபுறமிருக்க இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளான வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிறுவர்களை பார்த்தால் வவுனியாவில் தெருவோர வியாபாரத்தில் ஈடுபடும் பெரும்பகுதியினர் 13 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களே. எந்த வீதியில் பார்த்தாலும் அல்லது உணவகமாக இருந்தாலும் சரி வர்த்தக நிலையங்களாக இருந்தாலும் சரி சிறார்களே வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதனுடைய பின்னணியை எடுத்துக்கொண்டால் இவர்களுடைய குடும்பங்களில் ஏற்பட்டுள்ள வறுமையே பிரதான காரணம். வவுனியா பூந்தோட்டம், கோயில்குளம், நெளுக்குளம், அடப்பன் குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் மீளக் குடியமர்வு தாமதப்படல் அவர்களுக்கான தொழில்வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படாமையே இவ்வாறு சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொண்டால் அங்கும் இதே நிலைதான். வீதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல், தெருக்களில் பொழுதுகளை கழித்தல் என்று இவ்வாறு சிறுவர்களின் வாழ்வு நீண்டு செல்கிறது.

இதைவிட சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் அண்மையில் வவுனியா சிறிலங்கா நீதிமன்றிலும் யாழ்ப்பாணம் சிறிலங்கா நீதிமன்றிலும் பல வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் என்றே காணப்படுகின்றன. வவுனியாவில் ஒரு வீட்டில் அண்மையில் நடந்தேறிய சம்பவம் அதாவது வீட்டின் வறுமை காரணமாக ஒருசிறுமியை அவ்வீ[illegible] வேலைக்காக அனுப்பி வைத்து அவரின் [illegible]தனத்தை வாங்கி வாழ்க்கை நாடத்திய பெற்றோர் இன்று இச்சிறுமியின் இறப்புக்கு நியாயம் தேடமுடியாது தவிக்கின்றனர். அதாவது ஒரு சிறுமி வவுனியாவில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வீட்டில் மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பாக சிறிலங்கா காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்தும் அதற்கான நியாயம் கிடைக்கப்பெறாது தவிக்கின்றனர்.

இதுபோன்று எத்தனை சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இதற்கான தீர்வு எதனையும் சிறிலங்காப் படைகளோ அல்லது அது சார்ந்தவர்களோ பெற்றுக்கொடுக்கவில்லை. படையினரே இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதாவது அண்மையில் மன்னாரில் சிறிலங்கா காவல்துறையாள் ஒருவர்



பாடசாலை மாணவன் ஒருவரை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தியமை என்று இவ்வாறு சிறுவர் உரிமை மீறல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன. இதனை எந்த அமைப்புக்களோ அல்லது அதிகாரிகளோ தட்டிக்கேட்பதாக இல்லை.

சிறிலங்கா சிறுவர் உரிமை மீறல்கள் தலைவிரித்தாடுகின்றன. விடுதலைப்புலிகள் சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்கின்றனர் என்ற ஒரு குற்றச்சாட்டை வைத்து சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால் அதில் எந்தவித உண்மையும் இல்லை என சர்வதேச சமூகம் தெளிவாக உணர்ந்துள்ளது. சிறுவர்கள் உரிமை பற்றி அடிக்கடி கூறும் பௌத்த மதகுருமார்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாய் தந்தையை இழந்த சிறுவர்களை கடத்திச் சென்று மொட்டை அடித்து கட்டாயப்படுத்தி வைத்திருந்த செயற்பாடு அண்மையில் இடம் பெற்றவொன்று. அண்மைநாட்களாக சிறுவர்கள் கடத்தப்படும் .விடயம் சாதாரண விடயமாக மாறியுள்ளது. இதனை கட்டுப்படுத்தவோ அல்லது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவோ கல்வி மற்றும் தொழிற் கல்விகளில் அக்கறை காட்டவோ சிறிலங்கா அரசு முன்வருவதாக இல்லை. ஏதோ ஒருசில உள்ளூர் வெளியூர் அமைப்புக்கள் தம்மால் இயன்ற சில நடவடிக்கைகளைச் செய்து வருகின்றன. இதே போன்று மட்டக்களப்பு, அம்மாறை, மன்னார், வாவுனியா, திருமலை ஆகிய இடங்களில் வாழுகின்ற தமிழ் முஸ்லிம் சிறார்களின் எதிர்காலம் கேள்விக் குறியான நிலையில் எவரும் கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வருகின்றன. எந்த ஒரு ஊடகத்திலும் சிறுவர்விடயம் பற்றி குறிப்பிடப்படாமலும் ஆயினும் இந்த விவகாரம் தொடரவே செய்கிறது.

**சு.பாஸ்கரன்.**

# கவனிப்பாரற்றுக்கிடக்கிறது பழம்பாசிக்கிராமம்



சு.யோகராசா



வன்னிப் பெருநிலப்பரப்பில் இன்று பல கிராமங்கள் கவனிப் பாரற்றுக் காணப்படுகிறது. எமது பண்டைய வரலாற்றுக்களோடு தொடர்புடைய பல கிராமங்க ளின் அடையாளங்கள் காணாமல் போய்விட்டன. வேறுசில காணா மல் போய்க்கொண்டிருக்கின் றன. இன்னும் பல காணாமல் போகலாம் என அச்சம்கொள்ளப் படுகிறது.

இதைவிடப் பல கிரா மங்கள் எவ்விதஅடிப்படை வசதி களுமின்றி காணப்படுகின்றன. இந்த வரிசையில் அண்மையில் நாம் ஒரு எல்லைக்கிராமத்துக்குச் சென்றோம். நீண்ட பயணத்தின் பின் முல்லைத்தீவு, வவுனியா எல்லையில் காணப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சொந்தமான ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பழம்பாசி என்னும் கிராமத்துக்கே சென்றோம்.

இற்றைக்கு இருநூறு ஆண்டுகள் பழமைவாய்ந்தது என அப்பிரதேச வாசிகளால் கூறப் படும் பழம்பாசிக்கிராமம் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி காணப்படுகிறது. ஜெயசிக்குறு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப் பட்டு இராணுவத்தால் தனது தேவைக்கு வெட்டுப்பட்டு அழிக் கப்பட்டதைவிட ஆங்காங்கே நீண்டு உயர்ந்து எஞ்சியிருக் கின்ற ஒருசில தென்னை மரங்களும், பனைமரங்களும் பழம்பாசிக் கிராமத்தின் வய தினை ஓரளவிற்குப் பறை சாற்றின. வீதிகள் என்றுமே புனரமைக்கப்படவில்லை. மரம் செடிகள் வீதிகளை விழுங்கிவிட தயாராக இருப்பதுபோல இரு பக்கமும் அடர்ந்து வளர்ந்து காணப்படுகின்றன. நான்கு பக்க மும் நீரினால் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பினை தீவு எனப் பெயர் வைத்தவர்கள் நான்கு பக்கமும் காட்டினால் சூழப்பட்ட ஒரு கிராமத்துக்கு என பொதுப்பெயர் ஒன்றை வைத்திருந்தால் அந்தப் பெயரை பழம்பாசிக்கிராமத்திற்கு வைத்திருக்கலாம். உலகம் உள் ளங்கையில் எனக் கூறு கின்றவர்கள் பழம்பாசிக் கிராமத் துக்குச் சென்றிருந்தால் இந்த வாக்கியத்தையே மாற்றியிருப் பார்கள். பளம்பாசிக்கிராம மக்க ளின் வெளித்தொடர்பாடல் எமக்கு ஆரம்ப காலத்தையே நினைவுபடுத்தியது. அங்கு வாழ் கின்ற 30-35 குடும்பங்களில் ஒருசிலரைத் தவிர ஏனைய அனைவரும் உறவினர்களே. பொருளாதாரத்தைப் பொறுத்த வரை விவசாயமே, அதிலும் புகையிலைச் செய்கை மற்றும் நெல் ஆகியனவே முக்கியமாகக் காணப்படுகின்றன.

அங்குள்ள அனைத்து வீடுகளிலும் நெல், புகையி லையைக் காணக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான வீடுகள் பனையோலையாலும், ஒரு வகைப் புல்லினாலும் வேயப்பட்டிருந்தன. பஸ் போக்குவரத்து என்பது மூன்றாம்பிறை போன்றது என அங்குள்ள ஒரு பெரியவர் ஆதங்கப்பட்டுக் கொண்டார். முல்லைத்தீவிலி ருந்து நெடுங்கேணியூடாக புளியங்குளம் செல்கின்ற பஸ் காலை ஆறு மணிக்கும் ஒன்பது மணிக்கும் மட்டுமே மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

இன்றைய உலகத்தில் ஒரு சமூகத்தினர் ஈமெயில், இன்ரநெற் என எங்கோ சென்று கொண்டிருக்க பல நூற்றாண்டு களுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட

**— — சுழியன் — — —**

தொலைக்காட்சியின் பயனைக் கூட அனுபவிக்காதவர்களாக வாழ்கின்றனர். வாசிப்புப்பழக்கம் என்பது இல்லை என்றே கூற வேண்டும். பத்திரிகைகள், சஞ்சி கைகள் செல்வதுமில்லை, அவர் கள் விரும்பி வாங்குவதுமில்லை. உடல் உழைப்புக்கு அதிக முக்கி யத்துவம் கொடுக்கும் அவர்கள் ஓய்வான நேரங்களில் வானொ லிப்பெட்டியை நம்பியே பொழுது போக்குகின்றனர்.

பழம்பாசி மக்களின் உடல்வாகு உழைப்பின் சின்ன மாகக்காணப்படுகிறது. இருபது வய தானாலும் சரி அறுபது வயதா னாலும் சரி அனைவரும் உடலு ழைப்புக்கு அதிக முக்கியத்து வம் கொடுக்கின்றார்கள் என்பதற்குச் சாட்சியாக அவர்களது உடல்களும் நிலங்களும் காணப்படுகி ன்றன. உத்தியோகங் களிலும், ஏனைய தொழில்களிலும் பெரும்பாலும் ஒரு வரும் ஈடுபடுவதில்லை. விவசாயத்தினை நம்பியிருக்கின்ற இவர்கள் தங்களின் அறுவடைகளை சந்தைப்படுத்த முடியாமல் பெரிதும் துன்பப்படுகின்றனர். வாழ்க்கைத் தரம் என்பது மிகவும் பின் நோக்கிய நிலையிலேயே காணப் படுகின்றது.



கல்வியை பொறுத்த வரை இங்கு தரம் ஐந்து வரை யிலான ஒரு பாடசாலை. இது 1951 சனவரிமாதம் 5ஆம் திகதி இலங்கை அரசினால் கையேற் கப்பட்ட பாடசாலை. அதற்கு முன் ஆங்கிலேயரின் நிர்வா கத்தின் கீழ் இயங்கிய பாடசா லையாகும். 30-40 வரையிலான மாணவர்கள் கல்வி கற்கும் இங்கு அதிபர் மற்றும் ஒரு ஆசிரியை பெரும்பாலும் அதிபர் தனது வேலையின் நிமிர்த்தம் அலு வலகத்திலேயே இருந்துவிடுவார். ஒரு ஆசிரியை மட்டும் ஐந்து வகுப்புக்களையும் கவனிக்க வேண்டும் என்கின்றனர் மாண வர்கள். காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை பாடசாலை இயங்கும் நேரம். இந்நேரத் திற்குள் ஆசிரியை தரம் 1இல் கற்பித்தல் செயற்பாட்டினை தொடங்கினால் தரம் ஐந்து வந்து தனது செயற்பாட்டினை முடிக் கும் போது நேரமும் பிற்பகல் 2.30 ஐ எட்டிவிடுகிறது. அரச சார்பற்ற ஒரு நிறுவனத்தால் அண்மையில் கட்டிக்கொடுக்கப் பட்ட நிரந்தரக் கட்டடம் ஒன்றில் தனது செயற்பாட்டினை தொடர் கிறது பழம்பாசிக் கிராமப் பாடசாலை.

இதைவிட வெளியிடங் களுக்குச் சென்று கல்விகற்று இம்முறை க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை எழுதிய நான்கு மாணவர் களும் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் விவ சாயம் Aதர சித்தி என்பது குறிப் பிடத்தக்கது. ஆனால் தொடர்ந்து உயர்கல்வியை கற்பதில் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்ற னர்.

மேலும் இங்குள்ள வீதி கள் அனைத்தும் சாதாரண அதன் நிலையிலேயே இல்லை. மிகவும் மோசமானநிலையில் காணப் படுகின்றன. இவ்வீதிகளைத் திருத்தித் தருவதாக முல்லை மாவட்ட அரச அதிபர் இரண்டு வருடங்களுக்கு முன்பு கூறிய தாகவும் இதுவரைக்கும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை எனவும் வேதனையுடன் கூறுகின்றனர். மாலை ஏழு மணிக்குப்பின் வீதிகளில் யானை கள் போக்குவரத்துச்செய்ய ஆரம்பித்து விடுவதால் மனிதர் கள் செல்லமுடியாது. எமது கண்களுக்கு முன் வீதிகளில் ஆங்காங்கே யானை லத்திகளை யும் காணக்கூடியதாக இருந்தமை அவர்களின் கூற்றை உறுதிப் படுத்தியது.

மருத்துவ வசதி உள் ளிட்ட பல தேவைகளைப்பூர்த்தி செய்வதற்குப் பல கிலோமீற்ற ருக்கு அப்பால் உள்ள நெடுங்கே ணிக்கே வரவேண்டும். ஆனால் நெடுங்கேணி வைத்தியசாலையும் ஆரம்ப கட்ட வைத்தியசா லையே. இதைவிட கூட்டுறவுச் சங்கக்கடை உள்ளிட்ட எவ்வித பெரியளவிலான விற்பனை நிலையங்களும் அங்கு இல்லை.

சமயத்தில் பற்றுள்ள மக் கள் இன்றும் தங்களுக்கு ஏற்ப டுகின்ற காய்ச்சல் உள்ளிட்டசில நோய்களுக்கு பூசாரிகளிடம் சென்று திருநீறு மற்றும் நூல் கட்டியபின் நோய்களை சுகமாக் கிக்கொள்வதாகத் தெரிவிக்கின் றனர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து பல வருடங்கள் வெளி இடங்களில் அகதிகளாக வாழ்ந் துவிட்டு வந்து குடியேறி இருக் கின்ற இம்மக்களின் இன்றைய வேண்டுகோள் என்னவெனில் எல்லா வழிகளிலும் தங்களை யும் கவனியுங்கள் என்பதே.

எந்த அதிகாரிகளாலும் கவனிக்கப்படாமல் இருக்கின்ற இக்கிராமத்தை இனியாவது கவ னியுங்கள். அப்பிரதேச வீதிகளை புனரமைத்துக் கொடுப்பதுமட்டு மல்லாமல் சில அடிப்படைத் தேவைகளையாவது பூர்த்தி செய்து கொடுங்கள்.

நவீன அறிவியல் மற்றும் விஞ்ஞானம், மருத்துவ வசதி களை ஒரு சமூகம் நன்கு பயன் படுத்திக்கொண்டு செல்ல ஒரு சமூகம் அதன் அர்த்தம் கூட தெரி யாமல் அடிப்படை வசதிகள் கூட இன்றி வாழ்க்கின்றனர். எனவே உரியவர்கள் இவர்களது இப் பிரச்சினையைக் கவனத்தில் எடுத்து பழம்பாசி மக்களின் எதிர்காலத்தினை ஓரளவுக் கேனும் வளம்படுத்த வழிசமை யுங்கள் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பும்கூட.

மேலும் இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்ன வெனில் இங்கு இருக்கின்ற பெரும்பாலான குடும்பங்கள் மாவீரர் அல்லது போராளி களைக்கொண்ட குடும்பங் களாகவே காணப்படுகின்றன. தமிழீழ போராட்ட வரலாறு களோடு ஏதோ ஒரு வகையில் பழம்பாசி மக்கள் மிக நெருங்கிய தொடர்புகளைக்கொண்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 22 . 04 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# சாயம் வெளுக்கிறது...?

அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான துணைச்செயலர் கிறிஸ்டினா றொக்காவின் இலங்கைக் கான விஜயம் கூடுதலான கவனத்தையும் முக்கியத்து வத்தையும் பெற்றுள்ளது.

காரணம்- கிறிஸ்டினா றொக்கா அம்மையார் பொதுக் கட்டமைப்பின் அவசியம் பற்றியும் சமாதான முயற்சி தொடர்பான அரசின் போக்குத் தொடர்பாகவும் வெளிப்படையாகவே சில கருத்துக்களைத் தெரிவித் தமையாகும்.

அதாவது-கிறிஸ்டினா றொக்கா அம்மையார் இம் முறை சிறிலங்கா அரசின் சமாதான முயற்சி தொடர்பான நிலைப்பாடு தொடர்பாக தெரிவித்த கருத்தில் *"சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக சிறிலங்கா அரசிடம் தெளிவான நிலைப்பாடில்லை. தெளிவான நிலைப்பாடின்றி சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது கடினமான தெனவும் இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து அரசாங்கம் ஒரே குரலில் பேச வேண்டும். சமாதான முயற்சிகள் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் ஒரே கருத்தினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் அரசாங்கம் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் போது நிலையான சமாதானத்தை அடைய முடியாது"* என்றும் தெரிவித்தி ருந்தமை முக்கியமானதாகும்.

கிறிஸ்டினா றொக்கா அம்மையாரின் இந்த கருத்தானது அமெரிக்கா இலங்கையின் சமாதான முயற்சியின் நிலைப்பாடு தொடர்பாக சில சரியான நிலைப்பாடுகளை உள்ளீர்த்திருப்பதையே காட்டுகிறது.

இதனை வெளிப்படுத்துவது போலவே றொக்கா அம்மையார் முன்னரைவிட இந்த முறை பொதுக்கட்ட மைப்புத் தொடர்பான அமெரிக்காவின் அழுத்தத்தை சற்று அதிகமாகவே பிரயோகித்துள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனை அவரது ஜே.வி.பி யினருடனான சந்திப்பின் அடிப்படையிலும், தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் அடிப்படையிலும் வைத்து விளங்கிக்கொள்ள முடியும்.

இந்தநிலையில், கிறிஸ்டினா றொக்கா அம்மையார் இந்த முறை அமெரிக்கா, தமிழர்களின் நிலைப்பாட்டை கூடுதலாக புரிந்து கொண்டுள்ளதைப் போல காட்டிக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டிற்கு, சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட முதல், சுனாமி அனர்த்தத்தின் பின்னரான மூன்று மாத காலத்திற்கு மேலான இன்றைய நிலைவரை, சிறிலங்கா அரசு நடந்து கொள்கின்ற முறையும் அரசின் பங்காளிக் கட்சிகளின் குழறுபடிகளுமே காரணமாகும்.

இந்தநிலையானது சிறிலங்கா அரசின் ஏமாற்று நாடகங்களின் சாயம் வெளுக்கத் தொடங்கிவிட்டதையே காட்டுகிறது.

இந்த நிலையில் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் அரசியல் பாதையில் இருக்க வேண்டும் என்ற அமெரிக் காவின் அவாவையும் றொக்கா தெரிவித்துள்ளார்.

புலிகள் இயக்கம் இந்த மூன்றாண்டு கால சமாதான முயற்சிக்காலத்தில் அரசியல் பாதையில் பயணிக்க விரும்புவதை தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளது.

புலிகள் இயக்கத்தின் ஒவ்வொரு அசைவும் மிகவும் நிதானமாக முன்னகர்த்தப்பட்டு இதனையே வெளிப்படுத்தப்பட்டது.

ஆயினும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு, ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகள் அமைப்புக்கு, இந்த சமாதான முயற்சிகாலத்தில் அரசியல் பாதையில் நம்பிக் கையூட்டும் எந்த காரியத்தையும் சிறிலங்கா அரசு மேற்கொள்ளவில்லை.

இதேவேளை, புலிகள் இயக்கத்தை தடை செய்த சில சர்வதேச நாடுகளும் புலிகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் புலிகள் மீதான தடைகள் எதனையும் நீக்கவும் இல்லை.

இந்தநிலையில், கிறிஸ்டினா றொக்கா அம்மையார் தெரிவித்திருப்பது போல புலிகள் அரசியல் பாதையில் தொடர்ந்து செல்வதற்கு சிறிலங்கா அரசும் சர்வதேச சமூகமும் சில முன்நகர்வு, ஆதரவு முயற்சிகளை விரைந்து செய்யவேண்டியதும் அவசியம்.

# நோர்வேயின் கடன்..?

சிறி.இந்திரகுமார்

உலகில் கடனில்லாத நாடு என்கிற பெருமை நோர்வேக்கு உண்டு.

அந்தநாடு தன்னை கடன் பெறாது நிர்வகித்துக்கொள்ளும் பொருளாதார ஆற்றலைக்கொண்டி ருப்பதால் இந்தப் பெருமையைக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் பலஸ் தீனத்தில், இலங்கையில் என்று அரசியல் சமரசமுயற்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட நோர்வே அதிகம் சமாதான சமரசக்காரர்களாக அறியப் பட்டுள்ளது.

நோர்வேயின் சமரச போக்குத் தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டாலும் நவீன உலகின் சமாதான சமரசக்காரர்களாக அறியப் பட்டவர்களில் முக்கியமானவர்களாக உள்ளனர்.

இதிலும் குறிப்பாக நோர்வே செய்த சமாதான சமரச முயற்சி



என்பது இரண்டு நாடுகள் என்பதற்கு அப் பால் விடுதலை இயக்கங் களுக்கும் நாடுகளுக்கு மிடையிலானது என்ற வகையில் அதிகம் ஈர்ப்புக் கொண்டதாகவுள்ளது.

அதில் இஸ்ரே லுக்கும் பலஸ்தீனத்துக் குமிடையில் நோர்வே ஏற்படுத்திக் கொடுத்த ஒப்பந்தம் பிரபலமானது.

ஆயினும் அது தோல்வியைத் தழுவிக்கொண்டதும் அதிலும் பிரபலமானது.

இப்போது அதில்லை இங்கு விவகாரம்.

உலகில் பொருளாதார அர்த் தத்தில் கடனில்லாத நாடு என்கிற பெருமையைக்கொண்ட நோர்வே உலகில் அரசியல் ரீதியாக பெரும் கடன்கார நாடாக மாறியுள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கு ஒரு தோல்வியான சமரச சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்தவர்கள் என்ற வகையில் நோர்வே பலஸ்தீனியர்க ளுக்கு கடன்பட்டவராய் இன்றுவரை உள்ளது.

அடுத்ததாக அதிகம் ஈழத் தமிழர்களுக்கு கடன்பட்டவராக நோர்வே மாறிக்கொண்டிருக்கிறது.

பலஸ்தீனத்தைப் போலன்றி தமிழீழத்தில் தமிழர்கள் அதன் பிரதான தலைமையகத்தில் எதிரி களின் டாங்கிகளின் குழல் குறி பார்த்தபடி இருக்கும் ஒரு நிலை மையிலோ, பலஸ்தீனத்தைப் போல சமாதானக் கனவுக்குள் தன்னைக் கரைத்துக்கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையிலேயோ இருக்கவில்லை.

இந்த நிலையில் நோர்வே அரசியல் அர்த்தத்தில் பலஸ்தீனியர் களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் பட்டகடனும் சந்திக்கும் அனுபவமும் வேறுபட்டது.

இந்த நிலையில் நோர்வேயின் சமாதானக்கடன் என்பது அது அந்த நாட்டின் கடன் மட்டும் அன்று நோர்வேயின் பிரசன்னம் என்பது அது மேற்குலகின் பிரசன்னம்தான்.

அந்த வகையில் நோர்வேயின் கடன் என்பது மேற்குலகின் கடன் தான் இதனால் அதிகம் அக்கறையும் ஆர்வமும் மேற்குலகம் சமாதான முயற்சியில் கொள்ளவேண்டியுள் ளது.

நோர்வே ஐம்பத்தேழு வருடங் களைக்கொண்ட சுதந்திர இலங் கையில் ஐம்பத்தாறு வருடங்களுக்கு மேலாக சுதந்திரத்திற்காக குரல் எழுப்பும் தமிழ் இனத்தின் பிரச்சினை யைக் கையாள்கிறது.

இதில் தமிழர்களின் விவ காரத்தை உலகம் எப்படிப் பார்க்கிறது என்பதும் தமிழரின் விவகாரத்தை இலங்கை அரசு கள் எவ்வாறு பார்க்கிறது என்பதும் இங்கு முக்கிய மானது.

இதுவரை தமிழரின் உரிமை என்பது ஆளா ளுக்கு அதனை உலக் கையை தேய்த்து உளிப் பிடியாக்கும் காரியங்களில் தான் ஈடுபடுகின்றார்கள்.

இப்போது நோர்வே யின் பிரசன்னத்தின் பின் னரான நிலைமையை பார்ப்பது பிரயோசனமாக இருக்கும்.

தமிழர்கள் இரண்டு விதமான பிரச்சினையை எதிர்நோக்குகிறார்கள்.

ஒன்று-அரசியல் பிரச்சினை

இரண்டு- மனிதாபிமானப் பிரச்சினை.

இதில் தமிழர்கள் எதிர்நோக்கு கின்ற மனிதாபிமானப் பிரச்சினை என்பது தமிழருக்கு இழைத்த அநீதியான அரசியல் பிரச்சினையால் எழுந்த யுத்தத்தால் தோன்றியதொன்று.

இயற்கையின் அனர்த்தத்தால் எதிர்நோக்கும் மனிதாபிமானப் பிரச் சினை இன்னொன்று.

அடிப்படையில் பிரச்சினை என்ற வகையில் தமிழர்கள் இரட்டிப் பான சுமையைச் சுமக்கின்றார்கள்.

இதில் முக்கியமானது தமிழர் களின் பிரச்சினையை அரசு எவ்வாறு கையாள்கிறது என்பதும் அதை சர்வ தேசத்துக்கு எவ்வாறு காட்டமுயல் கிறது என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழர்களின் பிரச்சினையின் அடிப்படையை மாறுபட்ட தன் மையாக மாற்றும் ஒரு போக்கு பொது வாக நோர்வேயின் பிரசன்னத்தின்பின் தெற்கில் கையாளப்படுகின்ற ஒரு நிலைமை காணப்படுகிறது.

அதாவது அவசரமாக தமிழ்கள் எதர்நோக்கும் மனிதாபிமானப் பிரச்சினையை அரசியல் மயமாக்கும் ஒரு போக்கும், பொதுமக்கள் எதிர் நோக்குகின்ற வாழ்வியல் பிரச்சி னையை இராணுவ மயமாக்கும் மற்று மொரு போக்கும் காணப்படுகிறது.

தமிழர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையோடு சேர்த்து இராணுவ பிரச்சினையையும் அரசு திணிக்கிறது.

இதுதான் நோர்வேயின் சமாதான முயற்சிக்கான நுழைவின் பின் இலங்கையில் நடக்கிறது.

இந்தக் குழறுபடி நிலைதான் இப்பொழுது இயற்கை அனர்த்தத் தால் தமிழ்கள் எதிர்நோக்கிய நிலை யில் முன்வைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பு விவகாரத்திலும்



நடக்கிறது.

அடிப்படையில் மனிதாபிமானப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக முன்வைக்கப்பட்ட இந்த பொதுக் கட்டமைப்பு தெற்கில் அரசியல் மயமாக்கப்பட்டு சடுகுடு விளை யாட்டுப்போட்டி நடாத்தப்படுகிறது.

ஆனால் மக்களோ பரிதாபத்துக்கு ரியவர்களாக தங்களின் உதவி களுக்காகக் காத்திருக்கிறார்கள்.

இது சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத் திலேயே தொடங்கிவிட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனரமைப் புப்பற்றி எழுந்தபோது அதனை ஒரு இடைக்கால தீர்வு ஒன்றிற்கூடாகத் தீர்க்க கட்டமைப்புப்பற்றி பேசிய போது பெரும் பிரளயத்தையே தோற்றுவித்து ஒரு ஆட்சிமாற்றம் வரை நிலைமைகொண்டு செல் லப்பட்டது.

இதே போலவே உயர்பாதுகாப்பு வலயங்களாக்கப்பட்ட மக்களின் குடியி ருப்புக்களை கோரிய போதும் அது இராணுவ சமநிலையைப் பாதிக்கும் என்று மக்களின் வாழ்வியல் பிரச் சினை இராணுவமயமாக்கப்பட்டது.

இப்படியே தமிழர்களின் விவ காரங்கள் எல்லாவற்றையும் அதன் அதன் அர்த்தவடிவங்களில் வைக் காமல் அதன் உருவைச் சிதைத்து அதன் அழகைக்கெடுக்கும் காரியம் நடக்கிறது.

இந்நிலையில் நோர்வேயின் மூன்றாண்டுகாலத்தில் ஒரு நிரந் தரத்தீர்வு பற்றியும் ஒரு இடைக்கால தீர்வுபற்றியும் பேசி இப்பொழுது ஒரு பொதுக்கட்டமைப்புப் பற்றி பேசுகிற நிலையில் நிலைமை இருக்கிறது.

ஆயினும் மூன்று மாதம் கடந்து விட்ட நிலையிலும் கட்டமைப்பு இன் னும் வரவில்லை. ஆனால் வரும் என்கிறது உலகம்.

இந்தநிலையில் நோர்வே, அரசி யல் ரீதியாகக் காத்திருக்கும் ஈழத் தமிழர்களுக்குப் காலத்தை இழுத்து கடனை எப்படித் தீர்க்கப்போகிறது.

# கட்டுப்படுத்த முடியாத விடயமாக..!

**பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கத் தரப்பும் இலாபத்தில் இயங்குவதாக தொழிற் சங்கத் தரப்பும் கூறுகின்றன. எவ்வாறாயினும் எரிபொருளுக்கு மானியம் வழங்கப்படாவிட்டால் எரிபொருள்விலை அதிகரிப்பைத் தவிர்க்க முடியாது என பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகம் தெரிவிக்கிறது. ஆனால் மானியம் வழங்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என்பதுடன் எவ்வாறாயினும் அதனைத் தனியாருக்கு விற்றுவிட அரசாங்கம் முயல்கிறது. இந்த இழுபறியில் எரிபொருள் விலை குறித்த வதந்திகள் தவிர்க்க முடியாதது என்பது வெளிப்படை.**

எரிபொருளின் விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படலாம் என்னும் செய்தி இந்த அரசாங்கம் பதவி ஏற்றது முதல் அடிக்கடி வெளியிடப்படும் செய்தியாக அமைந்திருக்கிறது. முன்னரும் இவ்வாறு எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ள போதும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இப்பொழுது அடிக்கடி அதேவேளை கணிசமான அளவுக்கு விலை அதிகரிப்பு ஏற்படுகின்றது.

ஆனால் இதற்கெதி ரான பெரிய போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. இதற்கு இவ்வாறு அடிக்கடி விலை உயர்வு ஏற்படுவதும் காரணமாக இருக்கலாம். முன்னர் எரிபொருள் விலை அதிகரிப்பைக் கண்டித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு மாட்டு வண்டியில் சென்ற போராட்டங்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் இப்பொழுது அவர்களும் போராட்டம் எதனையும் நடத்தக் காணோம்.

இப்பொழுது ஏனைய பொருட்களின் விலை ஏற்றத்தை வாணிப நிலையங்களில் பொருட்களை வாங்கும் பொழுதுதான் அறிந்துகொள்ள முடிகிறது. முன்னர் ஆண்டு தோறும் சமர்ப்பிக்கப்படும் வரவு-செலவுத் திட்டத்தின்போது தான் பொருட்களின் விலைகளில் மாற்றங்கள் அறிவிக்கப்படுவது வழமை. பின்னர் 1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நள்ளிரவுகளில் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. பின்னர் 1977 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் திறந்த வர்த்தகத்தில் பொருட்கள் விடப்பட்டதும் வாணிப நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் பொழுதுதான் விலை அதிகரிப்பை அறிந்துகொள்ள முடிந்தது.

ஆனால் எரிபொருள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறிப்பாக மா, பருப்பு, பால்மா என்பவற்றின் விலைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப்பட்டன. விலை அதிகரிப்பு ஏற்பட்டால் அதனை மானியம் மூலம் சரி செய்ய அரசாங்கங்கள் முயன்றன. ஆனால் தற்போதைய அரசாங்கம் மானியம் வழங்கமறுத்து வருகின்றமை இப்பொருட்களின் விலைகளும் கட்டுப்பாடற்றமுறையில் அதிகரித்துச் செல்ல ஒரு காரணமாகியது. அதிலும் எரிபொருள் விநியோகம் தொடர்பான சர்ச்சை- அதாவது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் முயற்சி அதற்கு ஜே.வி.பியும் தொழிற்சங்கங்களும் காட்டிவரும் எதிர்ப்பு என்பன எரிபொருளின் விலையிலும் விநியோகத்திலும் பெரும் தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கத் தரப்பும் இலாபத்தில் இயங்குவதாக தொழிற் சங்கத் தரப்பும் கூறுகின்றன. எவ்வாறாயினும் எரிபொருளுக்கு மானியம் வழங்கப்படாவிட்டால் எரி பொருள் விலை அதிகரிப்பைத் தவிர்க்க முடியாது என பெற்றோலியக் கூட்டுத்தாபன நிர்வாகம் தெரிவிக்கிறது. ஆனால் மானியம் வழங்கக்கூடிய நிலையில் அரசாங்கம் இல்லை என்பதுடன் எவ்வாறாயினும் அதனைத் தனியாருக்கு விற்றுவிட அரசாங்கம் முயல்கிறது. இந்த இழுபறியில் எரிபொருள் விலை குறித்த வதந்திகள் தவிர்க்கமுடியாதது என்பது வெளிப்படை.

இதேவேளை தனியார் மயமாக்கல் எரிபொருளின் விலையைக் குறைத்துவிட உதவப்போவதில்லை என்பதும் தெளிவானதே. ஆனால் அது பின்னர் என்றுமே எரிபொருளின் விலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு அரசாங்கத்தை இட்டுச்செல்லும்.

இதேபோலத்தான் இலங்கைக்கான மா விநியோகத்தைத் தனியார் துறையினரிடம் ஒப்படைத்து இப்பொழுது மாவின் விலையைக் கட்டுப்படுத்தும் சக்தியைப் பெருமளவில் அரசாங்கம் இழந்துவிட்டது. இப்பொழுது பிறிமா நிறுவனத்தை மீறி மாவின் விலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதநிலை காணப்படுகிறது.

அவ்வாறிருந்தும் தொடர்ந்தும் முக்கிய சக்தி வளங்களான, மின்சாரம், பெற்றோலியப் பொருட்கள் தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்கள் தம்மிடையே போட்டியிட்டுக் கொண்டிருப்பதும் அவற்றைத் தனியாரின் கையில் ஒப்படைத்துவிடும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதும் அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பிலிருந்து விடுபட முயல்வதும் நன்மை தருமா? என்பது கேள்வியே. இச் சக்திவளங்களின் விலை அதிகரிப்பானது சகல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தி அனைத்துப் பொருட்களினதும் விலையை அதிகரிக்கச் செய்யும் என்பது வெளிப்படையான விடயமாகும்.

இன்று உலக நாடுகளில் நடைபெறும் போராட்டங்களை அடக்க பொருளாதாரத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது சர்வ சாதாரணமான விடயமாகும். அவ்வாறு பயன்படுத்துவது வெற்றியளிக்குமா? என்ற கேள்வியும் ஒருபுறம் இருக் கிறது. எனினும் 1985 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்க சிறிலங்கா ஆட்சி யாளர்கள் பயன்படுத்திய ஆயுதமும் அதுவாகத்தான் இருந்தது. அதிலும் எரிபொருள் தடைதான் முதன் முதலில் விதிக்கப்பட்டது.

ஆனால் இப்பொழுது சிறிலங்கா ஆட்சியாளர்கள் இந்த எரிபொருள் மற்றும் சக்தி வளங்களை விநியோகிக்கும் பொறுப்பை வெளிநாட்டு நிறுவனங்களிடமும் தனியாரிடமும் ஒப்படைக்கத் துடித்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் குறுகிய கால நலன்களின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் நன்மை பெற முடியும். ஆயினும் நீண்டகால நோக்கில்...?

ஆனால் தனியார் மயப்படுத்தலை விரும்புபவர்களும் சரி அதனை எதிர்ப்பவர்களும் சரி அதனையிட்டு நீண்டகால நோக்கில் சிந்திப்பவர்களாக இல்லை. இருதரப்பும் அதனை குறுகிய சுயநல நோக்கிலேயே பார்க்கின்றனர்.

இவற்றின் விநியோகம் முற்றுமுழுதாக அரசாங்கத்தின் கையிலிருந்து சென்றுவிடாத நிலையிலேயே விலை அதிகரிப்பு குறித்து எந்த அதிர்வலைகளும் உருவாகாத போது எதிர்காலத்தில் விலை அதிகரிப்பானது பொருட்படாத ஒன்றாக அல்லது எதுவும் செய்யமுடியாத விடயமாக மாறிவிடவே வாய்ப்புண்டு.

**வேலவன்**

## நேர்நோக்கு

# நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா..?

**கருணா குழுவின் மங்களம் மாஸ்டர் மற்றும் காயமடைந்துள்ள கொலைஞர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? என்பதே இன்று அனைவருக்கும் எழுகின்ற கேள்வி. இவர்கள் தற்போது இராணுவ பாதுகாப்பின் கீழ் சிகிச்சைபெற்று வருகின்றனர்.**

"குற்றவாளிகளும், விசாரணையாளர்களும் ஒரே தலைமையில் இயங்கும் போது நாம் நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்" உண்மைதான் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளரின் இக் கூற்று உண்மையானதும் யதார்த்தமானதுமாகும்.

இலங்கை அரசானது குறிப்பாக சந்திரிகா பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகிறார். அதாவது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை விசாரிப்பதற்காக சந்திரிகாவால் அமைக்கப்பட்ட ஆணைக்குழு தொடர்பாகவே இக் கருத்து நிலவுகிறது.

விசாரணைக்குழு யாரால் அமைக்கப்பட்டதோ அவர்களே இன்று குற்றவாளிகளாக இருக்கும்போது நீதி எவ்வாறு கிடைக்கப்போகிறது. அது பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக எப்படிப்பட்ட நீதியாக அமையப் போகின்றது என்பதுதான் இன்றைய கேள்வி. ஆனால் தமிழர்களை பொறுத்தவரை விசாரணைக்குழுவின் நீதி எப்படியிருக்கும் என்பது அது அமைக்கப்பட்ட மறு நிமிடமே விளங்கிக் கொண்டிருப்பார்கள். இந்நிலையில்தான் விசாரணைக்குழு எந்தளவுக்கு சுதந்திரமாக செயற்படப்போகிறது. அவ்வாறு செயற்படினும் குற்றவாழியாகக்காணப்படும் தனது எஜமானுக்கு எதிராக அவர்கள் எவ்வாறு நீதி வழங்கப் போகிறார்கள் என்பதுதான் நகைப்புக்கிடம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இயங்குகின்ற மாற்றுக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களது செயற்பாடுகளுக்கு தடை விதிக்க வேண்டும். ஆனால் அரசு இதனைச் செய்யத்தவறியமையே குற்றமாகக் காணப் படுகிறது.

தாங்கள் எந்த ஆயுதக் குழுக்களுக்கும் ஆதரவு வழங்கவில்லை எனவும் அவர்களுக்கும் தங்களுக்கும் எவ்விததொடர்பும் இல்லை எனவும் கூறிவந்த அரசுக்கு சண்டே லீடர் செய்தி பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இருந்தும் இராணுவப்பேச்சாளர் தயாரத்னாயக்க அன்றிரவு பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசமான வெலிக்கந்தையில் அவ்வாறான ஆயுதக்குழுக்களின் முகாம் எதுவும் இல்லையென அடித்துக் கூறினார்.

அவர் கூறி சில மணித்தியாலங்களில் அம் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் பின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் வெலிக்கந்தை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசமில்லை எனக் கூறினார்.

இவர்களது ஒரு விடயம் தொடர்பாக ஒன்றிற்கு மற்றொன்று முரண்பட்ட கருத்து ஏதோ ஒன்றை மூடி மறைக்க முயல்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவர்கள் அனைவரும் மூடி மறைக்க முயலும் விடயம் என்னவெனில் மாற்றுக் குழுக்களுக்கு தாங்கள் வழங்கிவந்த ஆதரவையே. ஆனால் இது முடியாத காரியம் என்பது அதன் பின் நிகழ்ந்த சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன.

அதாவது கருணா உள்ளிட்ட மாற்றுக் குழுக்களை சிறிலங்கா இராணுவப்புலனாய்வு தங்களது வேலைகளுக்காகப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள் என்பது கொட்டாவ சம்பவத்திலிருந்தே விளங்கிக்கொள்ளலாம். ஆனால் அரசு அதனையும் தனது வழமையான பாணியில் மறுத்தது. ஆயுதக் குழுக்களுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையெனக் கூறியது. இந்நிலையில்தான் வெலிக்கந்தை தாக்குதல். இதில் கருணா குழுவின் முக்கிய சகாவான மங்களம் மாஸ்டர் என்பவர் காயம டைந்ததோடு பலர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சொறிவில் தாக்குதல் இதன் பின் அரசின் உண்மைநிலை தெளி வாகியது.

அதாவது இந்தத் தாக்குதல்களில் ஒன்பதுபேர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஈ.என்.டி.எல்.எவ் குழுவைச் சேர்ந்த மூவரும் அடங்குகின்றனர். இந்நிலையில் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னைய சம்பவங்களுக்கு விட்ட அறிக்கைகள் போன்று இச்சம்பவங்களுக்கு விடாமை தாங்கள் மாற்றுக்குழுக்களுக்கு வழங்கிய ஆதரவை இனியும் மூடிமறைக்க முடியாது என்பதையே காட்டுகிறது.

இதே நேரத்தில் விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கின்றது. போராளிகள் மீதான தாக்குதலை விசாரிக்க ஆரம்பிக்கப்பட்ட இவ்வாணைக் குழு பல தரப்பினர்களிடம் இருந்து சாட்சியங் களை பெற்றுள்ளது. அதில் முக்கியமானது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதியின் சாட்சியம். அவரது சாட்சியத்தில் இராணு வக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்கள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இவரது சாட்சியத்தின் படியும், அதன்பின் இடம்பெற்ற சம்பவங்களின் படியும் குற்றவாளிகள் யார் என்பது தெளிவாகியது. ஆனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதுதான் சந்தேகம்.


இதன்படி கருணா குழுவின் மங்களம் மாஸ்டர், மற்றும், கொலைஞர்கள்வர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்களா? என்பதே இன்று அனைவருக்கும் எழுகின்ற கேள்வி. இவர்கள் தற்போது இராணுவ பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களை நீதியின் முன் நிறுத்தி தண்டனை வழங்கினால் கிருஷாந்தி கொலை வழக்கில் ராஜபக்ஸ செய்தது போன்று இவர்களும் தாங்கள் யாரின் ஆதரவுடன் ஏன் அவ்வாறெல்லாம் செயற்பட்டார்கள். தங்களின் குழு எந்த எந்த இராணுவ முகாம்களில் உள்ளார்கள் என்ற பல உண்மைகளை வெளிப்படுத்தலாம். அவ்வாறு நடக்குமாயின் அரசுக்கு-அது பெரும் தலைகுனிவாக மாறிவிடுவதோடு பெரும் சிக்கல்களையும் தோற்றுவித்துவிடும். எனவே இதனை விரும்பாத சிங்கள தேசம் விசாரணைக் குழுவின் தீர்ப்பில் கைவைப்பதைத் தவிர வேறு வழியில்லை. சர்வதேசத்தின்பால் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் நீதி எப்போது உண்மையானதாக, நியாயமானதாக அமையப்போவதில்லை என்பது மட்டும் நிதர்சனம்.

அல்லது பல ஆணைக்குழுக்கள் போன்று தோற்றுவதும் பின்பு தெரியாமல் மறைந்துபோகும் நிலை போன்று இவ் விசாரணைக்குழுவுக்கும் ஏற்படலாம். எவ்வாறோ இதன் நீதி என்பது எப்போதும் சிங்கள அரசையோ அல்லது அதன் படைகளையோ பாதிக்கத்தக்க வகையில் ஒருபோதும் அமையப்போவதில்லை என்பதுமட்டும் உறுதியானதே.

**மு. தமிழ்ச்செல்வன்**





# இந்திய-பாகிஸ்தான் உறவில் பொறி எங்கிருக்கிறது..?

**ஒரே காலத்தில் அமெரிக்கர்கள் வெளியிடும் தகவல்களிலிருந்தே ஒன்று தெளிவாகிறது. இந்தியா-சீனா-ரஷ்யாக் கூட்டு வளர்கிறதென்பதும் அதனை உடைக்க உடனடி கோடரிக் காம்பாக இந்தியாவே கிடைக்கும் என்பதாகும், இதுவே அமெரிக்க - இந்திய நெருக்கம் பற்றி அமெரிக்கரின் சுவையான தகவலுக்கு பின்னாலுள்ள அரசியலாகும்.**

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் இந்தியா வந்து திரும்பியுள்ளார். இது முஷாரப்பின் ஆட்சியில் இரண்டாவது வருகையாகும். முதல் தடவை ஆர்கா உச்சிமாநாட்டுக்காக அழைக்கப்பட்டு நடு இரவில் பேச்சுக்கள் தோல்வியடைந்த போது நாடு திரும்பியவர். தற்போது கிரிக்கெட் விளையாட்டுடன் விளையாட்டாக இந்தியா வந்து திரும்பியுள்ளார். இரண்டு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக அறிக்கைகளை வெளியிட்டதுடன் உறவின் போக்கில் ஒரு சுமூகத்தன்மை காணப்பட்டமை தெளிவாக தெரிகின்றது. ஆர்கா பேச்சுக்கள் போன்றதல்ல முஷாரப்பின் தற்போதைய விஜயம். இதில் உண்மையாக மறைந்துள்ள தந்திரம் என்ன என்பதையும் இதற்கு இணையாக அமெரிக்காவின் சிந்தனை எப்படி அமைந்துள்ளதென்பதையும் விரிவாகப் பார்ப்போம்.

கடந்தவாரம் இந்தியாவின் வெளிவிவகார மந்திரி அமெரிக்கா சென்றிருந்தார். அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளரையும் அமெரிக்க சனாதிபதியையும் அவர் சந்தித்திருந்தார்., கூட்டாக செய்தியாளர்களையும் இரு நாட்டு வெளிவிவகாரத் துறையினரும் சந்தித்ததுடன் அமெரிக்க - இந்திய நெருக்கம் மிகச் சிறப்பாக அமைந்தமையை காணக் கூடியதாக இருந்தது. இந்தியாவுக்கு F-18 ரக விமானங்களை வழங்குவது பற்றி பேசப்பட்டது. பரஸ்பரம் இந்த நாடுகளிலும் இருநாட்டு விமானங்கள் தரை இறங்குவது பற்றி இந்தியாவில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்குப் பின்பு நிகழ்ந்த அமெரிக்க விஜயம் என்பதால் இந்திய வெளிவிவகார மந்திரியை அமெரிக்கா அதிகம் கௌரவித்திருந்தமையும் குறிப்பிடக் கூடியதாகும். வாஜ்பாய் அரசாங்கத்திற்கு பின்பு நிகழ்ந்த மிகச் சுமூகமான உறவாடலாக அமைந்திருந்தது. பொருளாதாரம், இராணுவ- அரசியல் உதவிகள் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் பெரிதாகப்பேசப்பட்டது.

அமெரிக்க சனாதிபதி இந்தியாவுடனான உறவை முதன்மைப்படுத்திப் பேசியதுடன் இந்தியாவுக்கு தாம் வருவதாகவும் இந்தியப் பிரதமரை அமெரிக்காவுக்கு அழைப்ப தாகவும் சந்திப்பின்போது குறிப்பிட்டார். அடுத்த நான்கு ஆண்டுகளும் இந்தியாவுடனான உறவு மிக நெருக்கமாக விளங்குமெனவும் புஷ் குறிப்பிட்டார்.

இவ்வாறு அமெரிக்கர்கள் விழுந்து விழுந்து இந்தியர்களைக் கௌரவிப்பதற்கு பின்னால் பிரதான அரசியல் பொறியொன்று உள்ளது. அந்தப் பொறியொன்று எவ்வாறு இருக்கும் என்பதை கவனிக்க வேண்டியதாகும். உண்மையில் அமெரிக்க- இந்திய உறவு 'எதிரியுமில்லை நண்பனும் இல்லை' என்பதுதான். அப்படியான உறவை வகுத்துள்ள இரண்டு நாடுகளின் கடந்த காலப் போக்கை விட தற்போது அதிக வேறுபாட்டை அமெரிக்கா காட்ட முயன்றுள்ளது.

குறிப்பாக அமெரிக்கச் சனாதிபதியின் சந்திப்புக் காலத்தில் இந்தியாவுக்கு சீனப்பிரதமர் விஜயம் நிகழ்ந்திருந்தது. சீனாவும் இந்தியாவும் எல்லை, தொழில் நுட்பம், பொருளாதாரம், சந்தை என்ற கோணத்தில் பல உடன்படிக்கைகளை சுட்டியுள்ளன. இந்த உடன்பாடுகளால் இந்தியாவும் சீனாவும் நெருக்கமடைவது மட்டுமன்றி ரஷ்யாவுடனான அரசியல், பொருளாதார, இராணுவ உறவும் விருத்தி பெற்றுவருகிறது. இதனால் முக்கோண அரசுகளின் கூட்டு சாத்தியப்பட வாய்ப்பு அதிகரித்துவருகிறது. இது முழுமையான பொருளாதாரப்பாய்ச்சலை ஏற்படுத்துவதோடு, தொழில் நுட்ப இராணுவக் கூட்டுக்கு வழிவகுத்துவிடும். இவையாவும் அமெரிக்காவின் அரசியல் பொருளாதார இராணுவ நலன்களை முற்றாகவே பாதித்துவிடும். அமெரிக்கா விரும்புவதுபோல் உலகத்தை கையாளவோ திசை திருப்பவோ முடியாது. முன்பின்பான கூலி அரசுகளைப் பாதுகாக்கமுடியாது. இதனால் இந்தியாவின் போக்கையும் நெருக்கத்தையும் உடைக்க வேண்டுமாயின் இந்தியாவை அணைக்கவேண்டும். இது அணைத்துக்கெடுக்கும் தந்திரம் என்பதாகும். வெளிப்படையாகப் பார்த்தால் இந்திய- அமெரிக்க நெருக்கம் போலமையும். ஆனால் யதார்த்தமாக பார்த்தால் இந்தியாவை அதன் ஆதரவுச்சக்திகளிடமிருந்து பிரிப்பதோடு இறுதியில் நிர்க்கதியான நிலைக்கு தள்ளுவதாகும். சீனாவை அமெரிக்கா அணைத்துக் கெடுக்க முடியாது. ஏனெனில் ஏற்கனவே சீனா அமெரிக்கா பற்றி அதிகம் புரிந்து வைத்துள்ளதுடன் அணைத்துச் சென்று அதிகமான மாற்றங்களை சீனா அடைந்து விட்டது. ரஷ்யாவைப் பொறுத்தவரை புட்டின் ஆட்சி முடியும்வரை அமெரிக்கா அப்படி நினைப்பதே முடியாத

**ஐங்கரன்**

காரணியாகும். ஆனால் ரஷ்யாவுடன் நெருங்கி செயல்பட அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் கொண்டலீசா கூறியுள்ளார். ரஷ்யா சனநாயகச் சீர்திருத்தங்களை அதிகம் கடைபிடிக்கவேண்டும். மேலும் அதிக சீர்திருத்தங்களை அரசியல் பொருளாதாரத்தில் ரஷ்யா முன்னெடுக்க வேண்டுமெனக் கோரியுள்ளார். அத்தோடு புஷ் ரஷ்யாவுக்கு விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

எனவே ஒரே காலத்தில் அமெரிக்கர்கள் வெளியிடும் தகவல்களிலிருந்தே ஒன்று தெளிவாகிறது. இந்தியா- சீனா- ரஷ்யாக் கூட்டு வளர்கிறதென்பதும் அதனை உடைக்க உடனடி கோடரிக் காம்பாக இந்தியாவே கிடைக்கும் என்பதாகும். இதுவே அமெரிக்க - இந்திய நெருக்கம் பற்றி அமெரிக்கரின் சுவையான தகவலுக்கு பின்னாலுள்ள அரசியலாகும். இதன் இன்னோர் நகர்வே இந்தியாவுக்கு பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் விஜயமாகும். அமெரிக்காவின் இந்தியாவுக்கான தூதுவர் தற்போது பாகிஸ்தான் சனாதிபதி என்றால் மிகையாகாது. ஏனெனில் இந்தியாவுடன் சுமூக உறவைப் பேணி அதன் மூலம் இந்தியாவின் ஏனைய உபாயங்களையும் திட்டங்களையும் அமெரிக்காவுக்கு காட்டிக்கொடுப்பதே அவரது விஜயத்தின் நோக்கமாகும். இந்தியாவை நெருக்கடிக்குள் தள்ள இந்தியத் தலைவர்களே காரணமாக மாறுவார்கள்.

குறிப்பாக முஷாரப்புடனான சந்திப்பின் பின்பு மன்மோகன்சிங் வெளியிட்ட கூட்டான அறிக்கைகள் பொருளாதாரம் பற்றியதாகவே அதிகம் இருந்தது. பரஸ்பரம் இரண்டு அரசுகளது உறவை வளர்ப்பதோடு மக்களை நெருக்கமடையச் செய்யவும் அதற்கு ஆவன செய்யவும் முஷாரப் இந்தியத்தரப்பிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்தியத்தரப்பு எதிர்பார்த்ததையும் விட முஷாரப் மிகச் சிறப்பாக நடந்துகொண்டதுடன் காஷ்மீர் பற்றிய விடயத்தில் அதிக விட்டுக் கொடுப்பை முஷாரப் கடைப்பிடித்தார்.

காஷ்மீர் மக்கள் பயங்கரவாதத்திடமிருந்து மீட்கப்படுவதுடன் அவர்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார். வழமையாக காஷ்மீரை வைத்து நிலைமையை குழப்பும் முஷாரப் தற்போது அதிகம் காஷ்மீரைப் பற்றி அலட்டாது நடந்துகொண்டதன் மூலம் இந்தியாவுடன் சுமூகத்தன்மையை கடைப்பிடித்தார். காரணம் காஷ்மீரைவிட அவருக்கு இந்தியாவுடனான உறவு மேலானதாக மாறிவிட்டது. முஷாரப் காஷ்மீரை தனது நாட்டின் நலனுக்காக தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார் என்றே கூறலாம்.

எனவே முஷாரப்பின் விஜயம் நன்கு திட்டமிட்டு நகர்த்தப்பட்ட அரசியலாகும். இந்தியா சமாதானப் பேச்சு வார்த்தை, பஸ் போக்குவரத்து என்றெல்லாம் கூறும்போது மௌனமாகியவர் திடீரென நட்புக்கரம் நீட்டியிருப்பது இந்தியப் பாணியில் இந்தியாவை முறியடிப்பதாகும்.

கிரிக்கெட்டை அரசியல் சமாதான முதலீடாக வைத்து பந்தயம் ஆடியுள்ளனர் பாகிஸ்தானியர். கிரிக்கெட் விளையாட்டில் பாகிஸ்தான் அணிவென்றதுபோல் முஷாரப் வெற்றிபெற்றதாகக் கருதலாம். ஆனால் அது தற்காலிகமான வெற்றி என்பது பலவருடங்களுக்குப் பின்பு- தெரியவரும். ஏனெனில் வெற்றி பாகிஸ்தானுக்கல்ல அமெரிக்காவுக்கேயாகும்.

# புதிய விருந்தாளிகளும் புதிய சிக்கல்களும்

ஆமை புகுந்தவீடு உருப்படாது என்பார்கள். இந்தப் பழமொழி சிறிலங்கா மற்றும் இந்தியப் புலனாய்வு அமைப்புகளுக்கு மிகக் கச்சிதமாகப் பொருந்துகின்றது. இதன் உபவிளைவாகத் திருடனுக்குத் தேள் கொட்டிய கதையாக விழிக்கின்றன சிறிலங்கா, இந்திய அரசுகள்.

இங்கு எதைப் பற்றி பேசப்படுகிறது என்பதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். கடந்தவருடம் மார்ச் 3ஆம் திகதி மட்டக்களப்பில் நிகழ்ந்துபோன அரசியல் விபத்தை வைத்துக்கொண்டு தத்தமது இலக்குகளை நோக்கிக் காய்களை நகர்த்த முற்பட்ட தரப்புக்கள் இப்போது கையைச் சுட்டுக்கொண்டுள்ளன. அதி உற்சாகமாகக் களமிறங்கியவர்களுக்குக் களநிலையின் யதார்த்தம் மிகக் கசப்பானதாக அமைந்துவிட்டது.

2004 ஏப்ரல் 11ஆம் திகதி மூன்றாம் முச்சந்தியூடாக அலிசாஹிர்மௌலானாவின் வாகனத்தில் வந்திறங்கியது தமக்கான புதிய துருப்புச் சீட்டு என அகமகிழ்ந்துபோனது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை. பிரிகேடியர் கபிலஹெந்தவிதாரண தனது நீண்ட புலனாய்வனுபவத்தின்படி கொழும்பின் புறநகர்ப்பகுதிகளில் புதிய விருந்தாளிகளை மறைந்து வாழ்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார். பழைய விருந்தாளிகளையும் புதிய விருந்தாளிகளுடன் ஊடாடச் செய்து புதியதொரு உத்தியையும் செயற்திட்டத்தையும் வகுக்க முயன்றார்.

பழைய துருப்புச் சீட்டான புளொட் மோகனுடன் புதிய துருப்புச் சீட்டையும் இணைத்து மட்டக்களப்பில் முள்ளாமுனை மாயாவாடியில் தனது புதிய களத்தைத் திறந்தது சிறிலங்காப் படைப் புலனாய்வுத்துறை. அன்றையதினம் ஊனமுற்றவர்கள் உட்பட ஏழு போராளிகள் வீரச்சாவடைந்தபோது அவர்களுக்கு வெகு உற்சாகம் ஏற்பட்டிருந்தது. தமது புதிய வேலைத்திட்டம் காத்திரமான முறையில் பயனளிப்பதாக அவர்கள் உணரத் தலைப்பட்டனர்.

ஆனால் கொட்டாவ, வெள்ளவத்தை, நாகஸ்தன்ன என்று புதிய விருந்தாளிகள் வேட்டையாடப்பட்டதோடு வெள்ளவத்தை House of fasionஇற்கு முன்பாக பழைய துருப்புச்சீட்டு புளொட் மோகன் சுட்டுக்கொல்லப்பட்டபோது ஹெந்தவிதாரண அதிர்ந்துதான் போனார்.

புளொட் மோகனை அடுத்து அவரது வேலைகளைப் புரிந்துவந்த சுரேஸ் அவரது புதிய வசிப்பிடத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டபோது தமது வலைப்பின்னலின் முடிச்சுகள் ஒவ்வொன்றும் காவுகொள்ளப்பட்டு வருவதைத் தடுக்கமுடியாத கையறு நிலையில் படையப் புலனாய்வுத்துறை கைகளைப் பிசைந்துகொண்டிருந்தது.

இவற்றுக்கிடையே இந்தியப் புலனாய்வுத்துறை இந்தக் களத்தினுட் புகுந்து புதிய துருப்புச் சீட்டைத் தன்வசமாக்கிக்கொண்டு ஏற்கனவே தன் வசமுள்ள பழைய சீட்டுக்களையும் இணைத்து புலிகளுக்கெதிரான புதியதொரு வியூகத்தை வகுத்தது. இதற்காக புதிதாக வந்த விருந்தாளியுடன் இணைந்து




செயற்பட்ட, செயற்பட தீவிர ஆர்வம் காட்டிய ஈ.பி.டி.பியையும் அதன் செயலாளர் நாயகத்தையும் 'காய் வெட்டிவிட்டு' அவர்களது பரம விரோதிகளான ஈ.என்.டி.எல்.எவ்ஐக் களமிறக்கியது. இந்தவிசேட இரு பணியை நிறைவேற்றவெனக் களம் புகுந்தவர் விஜயன். திருமலை தம்பலகாமத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட பேரின்பநாதன் என்னும் விஜயன் கொழும்புக்கு வந்து அங்கு புதிய விருந்தாளிகளைச் சந்தித்தார். அதன் பின்னான திட்ட வகுப்புக்களைத் தொடர்ந்து பொலநறுவை மாவட்ட வடக்கு எல்லைக்கிராமங்

**பு.சத்தியமூர்த்தி**

களில் தளங்கொண்டு இயங்கத் தொடங்கினார்.

உண்மையில் விஜயனின் எதிர்பார்ப்பு புலிகளுக்கெதிரான ஒட்டுமொத்த நடவடிக்கைகளின் இயக்குநர் அல்லது தளபதியாகத்தான் இருக்கவேண்டும் என்பதே. இந்தியப் புலனாய்வுத்துறையின் விருப்பமும் அதுவே. ஏனெனில் புதிதாக வந்த விருந்தாளிகளை அது பயன்படுத்த விரும்பியதே தவிர நம்புவதற்கு முயலவில்லை. எனவேதான் தம்மால் உருவாக்கி ஊட்டி வளர்க்கப்பட்ட ஈ.என்.டி.எல்.எவ்ஐக் களமிறக்கி அதன் கீழ் இந்தப் புலியெதிர்ப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க முயன்றது அது.

புலியெதிர்ப்பு என்ற பதாதையின் கீழ் இருநாட்டுப் புலனாய்வு அமைப்புக்களின் செயற்பாடுகள் இவ்வாறிருக்கையில், தத்தமது பைகளை நிரப்பிக் கொள்ளும் இலக்கில் புதிய, பழைய விருந்தாளிகள் தீவிரம்




காட்டுகின்றனர். இதற்காக "நடவடிக்கை"களுக்குத் தலைமையேற்பதில் தமது பங்கை முன்னிறுத்திக்கொள்வதில் ஆர்வமாக உள்ளனர் அவர்கள். இது அவர்களிடையே உரசல்களையும் விரிசல்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

இந்தப் பின்புலத்தில் இவர்களின் தீவுச்சேனை முகாம் மீதான தாக்குதலின் பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட வண்ணாந்துறை முகாம் வேட்டையாடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவால் களமிறக்கப்பட்ட விஜயனும் பலியாகியது புதிய பல சிக்கல்களை ஏற்படுத்தி விட்டிருக்கிறது. இந்தியக் குடியுரிமை பெற்ற விஜயனின் குடும்பம் தமிழகம் சேலம் மாவட்டம் சலாம் கிராமத்தில் உள்ளது. விஜயனின் மனைவி தனது கணவனின் உடலைப்பெற்றுத் தரும்படி இந்திய வெளியுறவு அமைச்சை நாடியுள்ளார். இப்போது திருடனுக்குத்தேள் கொட்டியதாக விழிக்கிறது அந்தத்தரப்பு.

இந்தச் சிக்கலைத் தீர்க்க ஈ.என்.டி.எல்.எவ் தலைவர் பரந்தன் ராஜன் என்ற ஞானசேகரம் ஆனந்தசங்கரியை அணுகியிருக்கிறார். ஆனந்தசங்கரியால் பொறுப்பேற்கப்படும் விஜயனின் உடல் இங்கேயே தகனம்செய்யப்படுமா? இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்படுமா? என்பது இன்னமும் தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனால் விஜயனின் உடல் தனது நாட்டுக்கு வருவதை இந்தியா விரும்பமாட்டாது. எனவே பெரும்பாலும் விஜயனின் மனைவியும் பிள்ளைகளும் ஏதோ ஒரு வழியில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு இங்கேயே தகனம் நடைபெற்ற பின்னர் மீளவும் இந்தியாவுக்குக் கூட்டிச் செல்லப்பட வாய்ப்புகள் உள்ளன.

இதிலே ஆனந்தசங்கரி என்ன பாத்திரம் வகிக்கிறார்? இரு நாடுகளினதும் புதிய திட்டத்தின் அரசியல் முகத்துக்கான தலைவர் சங்கரியேதான். இராணுவ முகத்துக்கான தலைமை பதவிக்குத்தான் இப்போது கடும் போட்டி நிலவுகிறது. கொல்லப்பட்ட விஜயன் இந்தப் பதவியைக் கோரிய ஒருவர். அடுத்த போட்டியாளர் புதிய விருந்தாளியான முரளிதரன்.

இந்தப் புதிய வியூகத்தினால் பின்தள்ளப்பட்டு 'அம்போ' எனக் கைகழுவப்பட்டுவிட்டவர்கள் இருவர். வரதராஜப்பெருமாள், டக்ளஸ் தேவானந்தா இருவருமே தமக்கான இரு பணிகளை உரியமுறையில் நிறைவேற்றவில்லை என்பது இந்தியாவின் கணிப்பீடு. எனவேதான் பொறுப்புக்களிலிருந்து அவர்கள் பின் விலக்கப்பட்டு புதிய முகங்கள் முன்னிறுத்தப்பட்டுள்ளன.

ஆனால் பரிதாபகரமான முறையில் இந்தத் திட்டங்களெல்லாம் புஸ்வாணமாகிப் போனதுமல்லாமல் புதிய சிக்கல்களும் எழுந்துவிட்டன. 'பிறர்க்கிடு பள்ளம் தமக்கிடுபள்ளமாகி' அந்தரித்து நிற்கின்றன. இரண்டு புலனாய்வுத் துறைகளும் தங்களது மறைகரங்களும் முகத்திரைகளும் வெளிச்சம் போடப்பட்டுவிட்ட நிலையில் பல்வேறு அறிக்கைகளூடாகவும் மௌனம் சாதிப்பதனூடாகவும் தம்மை இதிலிருந்து கழற்றிக் கொள்ளப்பார்க்கின்றன அவை.

வீட்டினுள் புகுந்த ஆமையை, அதிஸ்ர தேவதையாகக் கருதி ஆராத்தி எடுத்தவர்கள் தமது பழையவிருந்தாளிகளை மட்டுமல்ல தங்களது சொந்த முகங்களையும் இழந்துபோக நேர்ந்துவிட்டது. உண்மையிலேயே பரிதாபமானதுதான். ஏனெனில் அவதந்திரம் தனக்கந்தரம் அல்லவா?

---




## விசுக்விசுக் விசாலாச்சி

என்னடா உங்கால கொழும்புப்பக்கமாக் கேட்ட கலகலப்பெல்லாம் மெல்ல அமந்துகொண்டு போறமாதிரித் தெரியுது. அ... எங்கட பக்கத்தாலும் ஒரு மாதிரி வெளிக்கும் போலதான் கிடக்கோ. ம்... ஊருக்குச் சொல்லுமாம் பல்லி... களனிப்பானையில விழுமாந் துள்ளி... உனக்கென்ன மண்டை பிசகிப் போச்சே. உதெல்லாம் புயலுக்குப் பிறகுவாற அமைதியெண்டெண்ணாதை தாளமுக்கம். ஓ..

அம்மா மட்டக்களப்புத் தமிழருக்கு ஒரு சின்னக் குளிசையச் சக்கரை வச்சுக் குடுத்திருக்கா- சனம் கெட்டிக்காறச்சனம் அதுகளுக்கு எல்லாம் வெளிச்சுப் போச்சு. பின்னச் சொல்லுறாயடா கௌசலியனையும் மற்ற மற்றப் போராளியளையும் சுட்டவையப் பிடிக்கப் போறாவாம். விசாரணை வைக்கப் போச்சினமே. ஆற்றா சாக்கிசொல்ல வாறது. எங்களுக்கென்ன தெரியாதே முன்ன இனக்கலவரத்தில அடிபட்ட சனத்துக்கும் சஞ்சோணி வந்து விசாரணை போட்டவர் தானே. சனமும் ஏதோ நிவாரணந்தான் கிடைக்கப் போகுதெண்டு கும்பல் கும்பலாத்தானே போனதுகள். என்ன நடந்தது. அதை விடு உந்த நாட்டுப் பற்றாளர் பொன்னம்பலமய்யாவ சுட்டவனை சாட்சி சம்பந்தத்தோடதானே பிடிச்சு விசாரிச்சவா- பிறகு அப்பிடியே பைலக் கட்டிப் போட்டாவே. கொலை நடக்க முதலே அம்மா அனுதாபக் கடிதமெழுதியெல்லே பொன்னம்பலத்தாற்ற மனிசிக்கு அனுப்ப வைச்சிருந்ததும் பிடிபட்டதுதானே. அதையே அமுக்கிப் போட்டாளவை. அட அதுதான் போகட்டும் தன்ர காதல் மணவாளன் விஜய் விஜய் எண்டு வாயூறக் கூப்பிட்ட புரியனைச் சுட்டவங்கள ஒருத்தருக்கும் தெரியாதே. இவயளப் பிடிச்சு விசாரிக்கிறதெண்டுதானே கதிரையில ஏறின உடன அம்மா கதைச்சவா. பிறகு இதாலதானே இஞ்ச நிண்டாப் பிசகெண்டு சோமவன்சர் இலண்டனுக்க பாஞ்சவர். பிறகென்னடாண்டா, அவரிப்ப அரசியல் கொள்கை விளக்கங்குடுக்க வந்து வந்து போறார். இது எப்பிடியிருக்கெண்ணுறன். அ.... பரமசிவன் கழுத்தில கிடக்கிற பாம்பு கெருடனக் கேள்வி கேட்ட மாரி இருக்கு. உவை தமிழரோட பிரச்சினை கதைக்கிறது தூ... கண்ட என்னத்தையோ கவிண்டிருந்து தின்னிற மனிசர். அந்த நாடகத்துக்கெல்லாம் பெரிய நாடகம் உந்த நிமலராசன்ர கொலை. பாப்பமே என்ன நடக்கப்போகுதெண்டு. சும்மா விடடா. உப்பிடி மூடின பைலுகள கணக்கெடுக்கச் சித்திர புத்திரனாலும் ஏலாது பொடியா... இப்ப புதிசா ஒரு விசாரணைக் கொமிசன் வந்திருக்கு. அதோட ஒரு கதை கிட்ட வா சொல்ல, சண்டையெண்டு வந்தா வெல்லேலாது... சமாதானமாத்தான் போகோணுமெண்டு சொன்னவவாம் மெய்தானோ... எடே நானாருக்குச் சொல்லப்போறன். சமாதானமெண்டா எனக்கு விருப்பமில்லையே. என்ன போன வரியந்தான் என்னவோ தேசியக் கட்டமைப்பு எண்ட கதை. இந்த வரியம் பொதுக கட்டமைப்பு எண்டகதை. இனி இடையால செய்யிறதுக்கு இன்னுங்கனக்க வேலை கிடக்கு. மெய்யே பொடியா உவன் அநுரா சொன்னானாம் அக்காவுக்கு இன்னுங்காலங்கிடக்குது அதுக்கான சட்டங்களை அலசுறமெண்டு, நல்லா சவுக்காரம் போட்டலசச் சொல்லு. வெறுவாய்க்கில கெடுவார். நாடு ஒண்டாயிருக்கோணும் எண்டு வாய்கிழியக் கத்திறவைக்குத் தாங்கள் ஒண்டாயிருக்கோணுமெண்டு தெரியாதே ஒண்டையொண்டு முழுசா விழுங்கிப்போடும் கமக்கட்டுப் பொருத்திறம் அதுதான் யோசிக்குதுகள் இனிப் பொறனடா, ஆறுமுகத்தார், அஸ்ரப்பம்மா எண்டு கொஞ்சம் அடைக் கட்டின கோழியளும் இருக்கு இதுகள் கூட்டச்சுத்தித்தான் நிற்கும். உள்ளது அஞ்சாறு சனம், ஏழெட்டுத் தலைவர்மார் இது இவையாப் பிரிச்சதெண்டே நினைக்கிறாய் ஏடேயெல்லாஞ் சீனாத்தானாப் பிரச்சினையடா 'தா'னாவெல்லாம் ஒண்டா நிண்டா 'சீ'னாக்காறருக்கு முட்டுவருத்தம் வந்திடும் வேறயென்ன. நானொருக்கா உந்தக் கொமிசன் விசாரணையைப் பாத்துக்கொண்டு வரப்போறன்... என்ன உள்ளுக்க விடாயினயோ... ஏன் பாதுகாப்பு ஆருக்கு எனக்கோ... அ... அவைக்கோ... போனவை, போட்டினம் இருக்கிறவைக்கு பாதுகாப்பு. பாதுகாப்பா செய்தாத்தானே பைலமூட நடக்கட்டும் நடக்கட்டும்.

# நீங்கள் தனித்துப்போகவில்லை..!

## ஆசிரியர்களே தாயன்புடன் அரவணையுங்கள்



“நாங்கள் முகாமில் இருக்கேக்கை எல்லோரும் ஓடி வந்தினம் இப்ப கொஞ்சம் கொஞ்சமாய் குறைஞ்சு போச்சு. இன்னும் சில நாள் போக அதுவும் இல்லாமல் போயிடும்” இந்த நிராதரவு தொனிக்கும் குரலுக்குரியோர் சுனாமி உலுக்கியெடுத்த பிள்ளைகள், பாடசாலை முகாம்களில் ஏற்கனவே நாம் சந்தித்திருந்த முகங்கள் அவை. இப்போது பல்வேறு இடைத்தங்கல் முகாம்களிலும் இருந்து பாடசாலைக்கு வருகிறார்கள். பலவித உணர்வுக்குறிகளுடன் எமக்கு முன்னால் அவர்கள் நின்றார்கள். அவலநீக்க ஆற்றுப்படையரங்கின் முதற்கட்டத்தை பாடசாலை முகாம்களில் நாம் மேற்கொண்டபோது எம்முடன் இணைந்து பாடி, ஆடி, விளையாடி உறவாகிய அந்தச் சிறுவர்களை மீண்டும் அவர்களுடைய பாடசாலைகளில் சந்தித்த போது உறவு நெருக்கத்துடன் எம்கரம் பற்றி, உள்ளத் துயரைப் பகிர்ந்து கொண்ட போது வெளிப்பட்ட வார்த்தைகளே மேற்சொன்னவை.

பெப்ரவரி இறுதிப் பகுதியில், அவல நீக்க ஆற்றுப்படையரங்கின் இரண்டாம் கட்டத்தை GTZ நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளும் பொருட்டு ஒரு முன்னோடி கதையாடல் அரங்கினை மேற்கொண்டோம். முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, முல்லைத்தீவு இந்து வித்தியாலயம், கள்ளப்பாடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவையே அந்தப் பாடசாலைகள். அந்தப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் பகிர்ந்து கொண்ட பிரச்சினைகள் நெஞ்சைக் கனக்க வைப்பவை.

“பிள்ளையள் பள்ளிக்கு வந்தால் படிப்பைப் பற்றிய கதையள் எதுவும் கதைக்கிறதில்லை, சுனாமி பற்றிய கதையளத்தான் கதைக்கிதுகள், சுனாமிக்கு முதல் வகுப்பில் இருந்ததை விட இப்ப சரியான குழப்படியாக இருக்கு, பிள்ளையள் குழப்படி செய்தால் அவையளத் தண்டிக்கேலாமல் கிடக்கு, தண்டிச்சால் அழுது கொண்டிருப்பினம் என முல்லைத்தீவு மகாவித்தியாலய ஆசிரியர் ஒருவர் நிலைமையை விளக்கினார். “ஒரு நாள் வகுப்பில் குழப்படி செய்த ஒரு மாணவனை ஆசிரியர் கூப்பிட்டு ஏச, அவன் அழத்தொடங்கிவிட்டான், பிறகு தாய், தகப்பனை இழந்தவன் எண்டது அப்பதான் எனக்குத் தெரியவந்தது. பிறகு நான் அவனைக் கூப்பிட்டு ஆறுதலாகக் கதைச்சு சமாளிச்சனான்”. இன்னொரு ஆசிரியர் இப்படி விளக்கினார்.

“பிள்ளைகள் படிக்கிற நிலைமையில இல்லை. அதுகளுக்கு இப்ப ஆடல் பாடல் தான் தேவைப் படுகிது. பாடசாலைக்கு வாறதே அவர்களுக்கு பிரச்சினையாகத்தான் இருக்கு. முள்ளியவளையில இருந்து முல்லைத்தீவுக்கு பஸ்சிலதான் பிள்ளைகள் வந்து போகினம், பெரும்பாலும் காலம சாப்பிடாமல் வருவினம். வந்ததுக்குப்பிறகு எப்ப திரும்பிப்போவம் எண்டுதான் நிக்குதுகள். முரட்டுத்தனம் உள்ள பிள்ளையளா இருக்கினம், என ஆதங்கப்பட்டனர் சில ஆசிரியர்கள்.

சரி, பிள்ளைகளுடைய மன உணர்வு என்ன? அவர்கள் என்ன தான் சொல்கிறார்கள், நீங்கள் படிக்கத் தயாராய் இருக்கிறீர்களா? என மாணவர்களிடம் கேட்டோம், முதலில் தயார் என்றுதான் சொன்னார்கள் பிறகு ஆழமாக அணுகிக் கேட்கையில், மனம் திறந்து கொட்டினார்கள்.

நாங்கள் பள்ளிக்கூடம் வரேக்க சாப்பிடாமல்தான் வாறனாங்கள் இங்க மூண்டு பிஸ்கட் தருவினம் அது எங்களுக்குக் காணாது, வீட்ட போகத்தான் எங்களுக்கு விருப்பம்.

பள்ளிக்கூடத்தில எங்கட நண்பர்கள் இல்லாமலிருக்கிறது பெரிய கஷ்டமாக இருக்கு.

படிக்கேலாமல் கிடக்கு, சுனாமி நினைவுதான் வருகிது, அதில நாங்கள் அடிபட்டு வந்ததும் வரேக்க செத்தாக்களைப் பார்த்ததும் உறவுகளைப் பிரிஞ்சதும் தான் ஞாபகத்திற்கு வருகிது. அதுக்குப்பிறகு படிக்கேலாமல் போகிது.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பத்தாம் தரத்தில் படிக்கிற ஒரு மாணவி விரக்தியின் விளிம்பில் நின்று சொன்ன வார்த்தைகள் மனதை உலுக்குபவை. “நாங்கள் தனிச்சுப்போய் இருக்கிறம், நாங்கள் சாகவேணும், எங்களை யார் பாப்பினம், ஆம்பிளைப்பிள்ளை எண்டால் ஆரெண்டாலும் கூட்டிக்கொண்டு போய்ப்பாப்பினம் பொம்பிளைப் பிள்ளையளை கொஞ்ச நாளைக்குப் பாப்பினம், பிறகு கையை விட்டு விடுவினம், சகோதரங்கள் இருந்தால் அதுகளுக்காகவாவது வாழலாம், அதுகளும் இல்லாட்டி ஆருக்காக வாழுறது”

பாடத்திட்டத்தை செயல் படுத்த வேண்டும், கணிப்பீடுகளை நடத்தி முடிக்க வேணும் என்ற வழமையான சட்ட திட்டங்களுடன் ஆசிரியர்கள் முனைப்பாய் இருக்கிறார்கள். படிப்பிக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை. பிரச்சினை எல்லாம், எப்படிப்படிப்பிப்பது. கற்பதற்கான மன நிலையை, சூழலை எப்படி மாணவனுக்கு கொடுப்பது என்பது தான். பிள்ளையின் மனநிலையை விளங்கிக் கொள்ள முயற்சிப்பது ஆசிரியர்களுக்குத் தேவையான ஒன்று.

படிச்சதெல்லாம் மறக்கிது. இந்த முறை சோதினை எழுத ஏலாது; இப்ப சும்மா எழுதுவம், அடுத்த முறைதான் ஒழுங்காக எழுத வேணும்.

2005 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகிற மாணவர்களது நிலை இப்படித்தான் உள்ளது.

எங்களால விளையாட ஏலாமல் கிடக்கு, விளையாடேக்கை எங்கட நண்பர்கள் எல்லாரும் சேர்ந்து விளையாடின ஞாபகம்தான் வருகிது, அவையள் இல்லாமல் நாங்கள் தனிச்சுப்போய் நிக்கிறம்.

இப்படி நொந்து போயுள்ள மாணவர்கள், தமது ஆசிரியர்கள் எப்படியிருக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தை இப்படியாக வெளிப் படுத்தினார்கள்.

**க.சுரேன்**

ரீச்சர் எங்கட கதைகளைக் கேக்கக் கூடிய ஆளாய் இருக்க வேணும்.

முன் மாதிரியானவராக இருக்க வேணும்.

அடிக்காமல் படிப்பிக்க வேணும்.

எங்களில அன்பாய் இருக்கவேணும்.

எங்களைப் பேசக்கூடாது.

எங்களோட சேர்ந்து ஆடிப்பாட வேணும்.

எங்களுக்குப் பிடிச்ச மாதிரி எல்லா ரீச்சராக்களும் இல்லை. ஒரு சிலர்தான் அப்பிடி இருக்கினம். எல்லாரும் அப்பிடி வந்தால் தான் எங்களுக்குச் சந்தோசம்.

முல்லைத்தீவு றோ.கவில் ஆசிரியர்களுடனான ஒரு கதையாடலில் சற்று வித்தியாசமான கருத்துக்கள் வெளிவந்தன. “முதல் நல்லாப் படிச்சபிள்ளை இப்ப படிக்கிதில்லை. பிள்ளைகள் முகாம்களில் இருந்து வாறதால அங்க பெரியாக்கள் கதைக்கிற கதைகளைப் பொறுக்கி வந்து இங்க கதைக்கிதுகள். தாய் தகப்பனை இழந்த பிள்ளைகள் சிலர் குழப்படியாயும் சிலர் வகுப்பில ஒதுங்கியும் இருக்கினம். பொதுவாக பிள்ளைகள் இப்ப கலகலப்பாய் இருக்கினம்: அதுகளைக் கட்டுப்படுத்த ஏலாமல் இருக்கு. விளையாடிறதைக் குறைக்கவேணும். நெடுக விளையாடுற எண்ணம் தான் இப்பிடி இருந்தால் படிக்கமாட்டுதுகள். பிள்ளைகளை அமைதியாக்க ஏதும் செய்யவேணும். அப்பதான் அதுகள் ஏதும் யோசிக்குங்கள். அவைக்குப் படிப்பிக்க வேணும் எண்டு நாங்கள் நினைக்கிறம். ஆனால் அவை படிக்கத் தயாராய் இல்லை.

அந்தப் பாடசாலை மாணவர்கள் எங்களைக் கண்டதும் ஆரவாரித்தார்கள். கைகளைப் பிடித்து அரவணைத்து கதை சொல்லித் தாங்கோ, விளையாட்டு சொல்லித் தாங்கோ என விடாக்கண்டராய் கேட்டார்கள்.

கிட்டத்தட்ட 76 சிறுவர்களை சுனாமியிடம் பறிகொடுத்து விட்டு நின்றது கள்ளப்பாடு அ.த.க பாடசாலை. அங்கேயிருந்த பிள்ளைகள் எல்லோருக்கும் ஏதோ ஒரு வகையில் உயிரிழப்புகள் இருந்தன. தாய் தகப்பனை இழந்த பிள்ளைகள், தாங்கள் இப்போது என்ன செய்தாலும் யாரும் ஒன்றும் கேட்கமாட்டார்கள் என்ற எண்ணத்துடன் இருப்பதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். இது தொடர்பான ஒரு சம்பவத்தை ஒரு ஆசிரியை நினைவு கூர்ந்தார்.

மாணவர்களுடன் நானும் பஸ்சுக்கு நிக்கேக்கை பஸ் வர தாமதமாய்ப் போச்சு. அப்ப ஒரு மாணவன் சொன்னான் “இனி எத்தினை மணிக்குப் போனாத்தான் என்ன ரீச்சர், ஆர் எங்களைக் கேக்கப் போகினம்” எண்டு இன்னுமொரு மாணவன் “எங்கட வீட்டில அம்மா மட்டும் தான் ரீச்சர், நான் என்ன செய்தாலும் அவ தன்ரை பாட்டில இருப்பா, நான் என்ர பாட்டில இருப்பன்” எண்டு சொன்னான்.

காயப்பட்டுப்போன இத்தகைய மனங்களை தாயன்புடன் அரவணைக்க ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப் படுத்தினால் அது எல்லாக் கற்பித்தலையும் விட அதிக பலனளிக்கும் விடயமாக இருக்கும். உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் ஆசிரியர்கள் இதில் ஈடுபட்டால் பிள்ளைகள் நெருங்கி வருவார்கள். அவர் தம் மனங்களைத் தம் கரங்களில் ஏந்தித் துயர்போக்கி சிதறிய மணிகளைச் சேர்த்துக் கோர்க்க ஆசிரியர்கள் முன் வருவார்களா?

---

# நூலகங்கள் மனித அறிவின் திறவுகோல்

ஆடைகள் இன்றி அங்குமிங்கும் அலைந்து ஐந்தறிவு கொண்ட மிருகங்கள் போன்று உண்ணுவதும், உறங்குவதும், உணவு தேடுவதுமாக இருந்த மனிதன் படிப்படியாக பண்பட்டுக் கொண்டு சமூகம் சமூக மாக முன்னேறி இன்று விண்ணில் கால் பதித்து ஆய்வுகள் மேற்கொள்கின்றன.

அதிலும் குறிப்பாக பால் வீதியில் வலம் வரும் கோள்களில் ஒன்றான புவியில் இருக்கும் மனிதன் ஏனைய கோள்களிலும் மனித குலம் வாழும் சாத்தியம் உள்ளதா என ஆய்வுகளில் அரைவாசிக்கு மேற்பட்ட படிகளை தாண்டிச் சென்று விட்டான்.

இதற்குக் காரணம் மனித மனங்களில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி மனித நாகரிகத்திற்கு தோற்றுவாயாக அமைந்தன. சத்தங்கள், ஒலிகள், அங்க அசைவுகள் மூலம் தமது உணர்வு, எண்ணங்களை வெளிப்படுத்திய மனிதன் பின்பு ஓவியங்கள் மூலம் கருத்தைப் பரிமாறி நாளடைவில் ஒவ்வொரு குழுக்களும் குறித்த மொழிகளைப் பேசக் கற்றுக்கொண்டனர். அப் பேச்சு மொழிகளுக்கு கொடுக்கப்பட்ட வரிவடிவமே எழுத்துகள் தோன்ற ஏதுவாகியது. இவ் எழுத்து வடிவத்தை கி:மு 3000 ஆண்டுகளுக்கு முன்பு “சுமேரியர்” அறிமுகப்படுத்தினார்கள் என்று கூறப் படுகிறது.

இவ் எழுத்து வடிவம் இன்று நேற்று உருவாகியது அல்ல, அவை காகிதம் தோன்றுவதற்கு முன்பே தோன்றியதற்கான வரலாற்று ஆதாரங்கள் உண்டு. ஐந்தறிவு உடைய விலங்குகளுடன் வாழ்ந்த மனிதன் தான் கண்டதையும், தனக்கு தேவையானவற்றையும் பிறருக்குச் சொல்ல வேண்டியிருந்தது.

இதற்காக முதலில் ஒலி, சத்தம், சைகைகள், அங்க அசைவுகள் மூலம் புலப்படுத்தினான். பின்பு, தான் பார்த்தவற்றை கல்லிலும், களிமண்ணிலும், குகைகளிலும் ஓவியமாகக் கீறினான். மனித அத்தியாயத்தின் முதலாவது தகவல்சாதனம் அல்லது தகவல் பதிவு ஓவியம் ஆகும். சைகை, அங்க அசைவுகள் பிற்காலத்தில் நடிப்புக்கு வித்திட்டது.

**அருணா தவராஜா**


இவற்றின் வளர்ச்சிக் குறியீடுகள், எழுத்துகள் வரை உதவியது. இவ் எழுத்துக்களைப் பதிய பின்வரும் சாதனங்கள் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டன.

1. களிமண் (Clay Tablets) கி.மு 600 இல் யூகிரிட்டிஸ் டைகிரிஸ் நதிக்கரையில் வாழ்ந்த மொசப்பத்தேமியர் அறிமுகம் செய்தனர். இதை “கூர்னிபார்ம்” என அழைத்தனர்.
2. பைப்பைரஸ் - ஒருவகை கோரைப் புல் நைல்நதிக் கரையில் வாழ்ந்த

(22 ஆம் பக்கம் பார்க்க)




# விஞ்ஞானிகளின் குழப்பம்



பூமியின் காந்தத் துருவங்கள் பல்லாயிரம் ஆண்டுக ளுக்கு ஒருமுறை எதிர்மாற்றம் அடைகின்றன. இது ஏன் இவ்வாறு எதிர் மாற்றம் அடைகின்றன என்பது தான் விஞ்ஞானிகளுக்கு புதிராகவும், வியப்பாகவும் இருந்து வருகின்றது. பூமியின் கொந்தளிக்கும் உட்கருவை உளவு செய்த சமீபத்திய விஞ்ஞான ஆராய்ச்சிகள் புது வழிமுறைகளை கண்டறிந்துள்ளன.

அதாவது கடற்தள பாறைகள் மீது காந்தத் திருப்பங்கள் எழுப்பட்டுவருவதை அறிவதன் மூலம் பில்லியன் ஆண்டுகளாக நூறு தடவைக்கும் மேலாக ஏற்பட்ட பூமியின் காந்தத் துருவத் திருப்பங்கள் உண்மையென்று நம்பமுடிகிறது. பூகோளத்தின் துருவங்கள் ஒரு லட்சம் தொடக்கம் மூன்று லட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறை திருப்பமாகி மீள்கின்றன. கடைசியாக நிகழ்ந்த திருப்பம் 250000 வருடங்களுக்கு முன் நிகழ்ந் ததாக கூறப்படுகிறது. இருப்பினும் இக் காலத்தை குறிப்பிடுவதில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன.

ஆனால் சூரியனின் காந்தத் துருவங்களை பூமியின் காந்தத் துருவங்களை போலன்றி பதினொரு வருடங்களுக்கொருமுறை திருப்பம் அடைகின்றன.

தற்போது பூகாந்தத் திரிபுகள் கிழக்குத் திசை நோக்கிச் சீரான கதியில் திரும்பி ஓரளவு மாறி வருவது உண்மையே. மின் கணனிகள் அந்த மாறுபாட்டைத் துல்லியமாக முன்னுரைக்கின்றன.

பூகாந்தத் திரிபுகள் பூகோள சுழற்சிக்குச் சார்பாகவும், உட்கருவின் கனல் குழம்பில் ஏற்படும் கொந்தளிப்பு மேற் சுற்றின் விளைவாகவும் ஏற்படுகின்றன. வடதென் துருவங்களில் இடமாற்றங்கள் பலமுறைப் பூர்வீக யுகங்களில் இனியும் துருவங்கள் அவ்விதம் இடம்மாறலாம் என்று ஆர்கான் தேசிய ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானி டேவிட்குக் கூறுகிறார்.

2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி முதல் சூரியனில் ஒன்பது பேரளவு வெடிச் சிதறல்கள் ஏற்பட்டுள்ளன. சூரியனின் படரொளித்துணுக்கு வீச்சுகள் இரு முறை பூமியை தாக்கி உரசியுள்ளன. அவ்விதத் தாக்கம் பூகோள காந்த வெளியை மோதி எல்லாவித மின்காந்த மற்றும் மின்சார தகவல் தொடர்பாடல்களையும் பாதித்திருக்க வேண்டும். ஆனால் எதிர்பாராத விதமாக அந்த படரொளி வீச்சு பூமியை நெருங்குவதற்கு முன்பே அப்பால் விலகிச்சென்றுவிட்டது என ரஷ்சிய விஞ்ஞானிகள் கூறுகின்றன.

ஆராய்ச்சிகளின்படி 1963 ஆம் ஆண்டு முதல் சூரியனின் காந்தத்தளம் இரட்டை மடங்கு மிகையாகிவிட்டது எனவும் அறியப்படுகிறது. ஆனால் பூமியைத் தவிர காந்தத் தளம்சிறிதளவேனும் உள்ள அனைத்து அண்ட கோளங்களிலும் காந்தத்தள ஆற்றல் அதிகமாகி விட்டது. ஆனால் கடந்த நூறு ஆண்டுகளாக பூமியின் காந்தத்தளம் சிறிது சிறிதாக குறைந்துவிடுகிறது. ஏனைய கோள்களை போன்றல்லது பூமியின் காந்தத் தளம் ஏன் குறைந்து கொண்டு வருகின்றது என்பதற்கான கார ணத்தை அறிவதற்கு விஞ்ஞானிகள் ஆய்வு நடத்திவருகின்றனர்.

எது எவ்வாறே அறிவியலின் வளர்ச்சி இந்தபூகோளத்திற்கு ஏற்படும் அபாயங்களை முன்பே அறிந்து அதற்கு தீர்வுகண்டால் அதுவே மகிழ்ச்சியான விடயமாகும்.

# செல்போன்களின் ஆக்கிரமிப்பு

கையடக்க தொலைப்பேசிகள் பாவனை இன்று உலக சந்தைகள் அனைத்தினையும் ஆக்கிரமித்துள்ளது. குறிப்பாக இலங்கை, இந்தியா, போன்ற நாடுகளில் இதன் பாவனை அதிகமாக காணப்படுவதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகின்றது. வகை வகையான நவீன பல வசதிகளை கொண்ட இக் கையடக்கதொலைபேசிகள் பாவிப்பது தற்போது நவீன நாகரிகமாக மாறிவிட்டது. பல வழிகள் இதன் பாவனை முக்கியத்துவம் பெற்றாலும் மருத்துவ உலக்கினைப் பொறுத்தவரை இத் தொலை பேசிகள் கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது செல்போன்கள் பாவிப்பதால் அதில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் மற்றும் அதிர்வுகளினால் பலநோய்கள் வரலாம் என அஞ்சப்படுகின்றது. செல் போன்களை அதிகமாக பாவித்தால் அதிலிருந்து வெளிப்படும் "மைக்றோவே" கதிர்கள் மூளை காது போன்றவற்றை தாக்கிபுற்று நோய் ஏற்படுத்துகிறது எனவும் அஞ்சப்படுகிறது.

ஆனால், டென்மார்க்கில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் செல்போன்கள் பாவிப்பதால் மூளையில் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு இல்லை என கூறப்படுகிறது. ஆனால் சிறுவர்கள் செல் போன்கள் அதிகமாக பாவிப்பது நல்லதல்ல என்று அவர்கள் எச்சரிக்கின்றனர். மேலும் இதனால் ஏற்படும் தாக்கம் தொடர்பாக இதுவரைக்கும் எதுவும் திட்டமிட்டு கூற முடியவில்லை என்றாலும் சில சில தாக்கங்கள் இருக்கலாம் என நம்பப்படுகிறது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் எனவே எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள சிலசில கட்டுபாடுகளோடு இருப்பது நல்லதல்லவா?






# மஞ்சள் காமாலை

மஞ்சள் காமாலை நோய் எமது நாட்டில் பரவலாக ஏற்பட்டு வரும் ஒருநோயாகும். இந்நோய் எளிதில் ஏனையோரை தொற்றிக் கொள்ளும் நோயாகவும் காணப்படுகிறது. மஞ்சள் காமாலை ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணம் சுற்றுப்புற சுகாதாரமின்மையே.

எமது உடலில் நுரையீரல்களுக்குக் கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள கல்லீரல் மற்றும் மண்ணீரல் போன்றவை பாதிக்கப் படுவதால் இந்நோய் ஏற்படுகிறது. நாம் சாப்பிடும் உணவுகள் இரைப்பையில் சேர்ந்தவுடன் அது எளிதில் சமிபாடு அடைவதில்லை. அது சமிபாடு அடைவதற்குத் தேவையான சக்தியை மண்ணீரல் வழங்குகின்றது. எனவே மண்ணீரல் பாதிக்கப்படுவதால் உணவு எளிதில் சமிபாடு அடைவதில்லை. இதனால் பசியின்மை, மலச்சிக்கல் சிறுநீர்கழிப்பதில் கடினம்போன்ற பிரச்சினைகள் தோன்றும்.

அத்தோடு சிறுநீர் மஞ்சளாகவும் எரிச்சலுடன் வெளியேறும். சிலருக்கு கை கால்களில் வீக்கம் தோன்றும் மற்றும் கை விரல்களில் நகங்கள், கண்ணில் விழிவெண் படலம் போன்றவை மஞ்சளாக மாறிவிடும். அதிகளவான சோர்வு, கை,கால், மூட்டுகளில் வலிபோன்றவை காணப்படுகின்றது.

சிறு குழந்தைகளில் சிலர் கல் மண் போன்றவற்றை சாப்பிடும் பழக்கம் உள்ளவர்களாக இருப்பர். இதன் காரணமாக மண்ணீரல் பாதிக்கப்பட்டு, பசியின்மை, உடல்வெளுத்துப்போதல் மற்றும் கண் கைவிரல்கள் மஞ்சளாக மாறுதல் போன்றவை தோன்றும். மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு வியர்வைகூட மஞ்சளாக மாறிவிடும். சாதாரணமாக மேற்கண்ட அறிகுறிகள் காணப்பட்டால் உங்கள் சிறுநீரை சிறிதளவு எடுத்து அதில் கொஞ்சம் சோற்றைப்போட்டுப் பார்த்தால் சிறிது நேரத்தில் சோறு மஞ்சளாக மாறிவிடும். இது வீட்டுப் பரிசோதனை. இதைவிட விஞ்ஞான ரீதியாகவும் சிறுநீரை பரிசோதனை செய்து நோயை உறுதி செய்துகொள்ளலாம். இந்த நோய்க்கு ஆங்கில மருத்து வமுறைப்படி 'வொக்சின்' அதாவது நோய் வருமுன் தடுக்கும் மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் இதற்கு ஆயுர்வேத மருத்துவமுறைப்படி கீழ்க்காய் நெல்லி மற்றும் கரிசலாங்கன்னிஎன்பன சிறந்த மருந்துகளாகக் காணப்படுகின்றது. காலையிலும் மாலையிலும் இவற்றை நன்கு சுத்தம்செய்து எடுத்து நன்றாக அரைத்து பசுப்பாலில் கலந்து குடித்து வர நோய் சிலநாட்களில் குணமடைந்து விடுகிறது. ஆயுர்வேதப்படி மருந்து சாப்பிடுகிறவர்கள் பத்தியம் இருப்பதும் அவசியமாகிறது.

இவர்கள் மீன் கருவாடு, கோழிக் கறி எண்ணைசார்ந்த உணவுவகைகள் என்பவற்றை தவிர்ப்பதோடு குளுக்கோஸ், பழவகைகள் கீரைவகைகள், திராட்சை போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்வது நன்று. இதைவிட நாம் வாழ்கின்ற சுற்றுபுறச்சூழலை சுத்தமாகப் பேணி வருமுன் காப்பதே சிறந்தது.

# ஆஸ்துமாவை நிர்ணயித்தல்

**உங்கள் மூச்சுவாங்கியை (Inhaler) உபயோகித்தல்**


உங்கள் மூச்சுவாங்கியைச் சரிவர உபயோகிப்பது மிகவும் முக்கியமானதாகும். இதனால் சரியானநேரத்தில் சரியான இடத்திற்குச் சரியான மருந்து செல்லும். மூச்சுவாங்கிகள் நேரே மருந்து செயற்படக்கூடிய காற்றுவழிகளுக்கு மருந்தைக் கொண்டு செல்வதற்கு அனுமதிக்கின்றது.

செயற்பாட்டைச் சரியாக மேற்கொள்வதற்கு கண்ணாடியின் முன் செயற்படுவது உதவிகரமாக விளக்கலாம். ஏதாவது மேலதிக விளக்கம் உங்களுக்கு தேவைப்பட்டால் உங்கள் வைத்தியரிடம் அல்லது மருந்து வழங்குனரிடம் கேட்க மறக்கவேண்டாம்.

"மூடியவாய்" "திறந்தவாய்" என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இரு தொழில்நுட்பங்கள் உள்ளன. நீங்கள் எந்த தொழில் நுட்பத்தைத் தெரிவு செய்தாலும் சுவாசிப்பதற்கு நீங்கள் ஆரம்பிக்கும்போது மூச்சுவாங்கியைத் தூண்டுவதே பிரதான தொழிற்பாடாகும். சுகாதாரக் காரணங்களுக்காக உங்கள் மூச்சுவாங்கியை வேறு ஒருவருடனும் பங்கிடக்கூடாது. உங்கள் மூச்சுவாங்கியை சுத்தப் படுத்தல்.

மூச்சுவாங்கிகளை இலகுவாகச் சுத்தப்படுத்தலாம். உலோக தாங்கியை அகற்றி பிளாஸ்திக்கு தாங்கியையும் மூடியையும் சூடான நீரில் அலசுங்கள் பின் அவற்றை உலரவைத்து குவழையைப் பழைய இடத்தில் வையுங்கள்.

மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் வைத்தியரை நாடவும்.



# புன்னகை மாறா வீரன்



க.மிரேசு

ஜொனி மிதிவெடியுடன் ஒரு போராளி எம்மைக்கடந்து ஓடிச்செல்கிறான். அவனைத் தொடர்ந்து இன்னொருவன் ஓடிச்செல்ல "என்ன மச்சான் ஓடுறியள்" என எம்மோடு வந்த ஒரு போராளி கேட்க.

அதுவா... வேலையில்லை அதுதான் ஓடித்திரிகிறோம் என்று சொல்லிவிட்டு "என்ன நக்கலா" என்று பேசிவிட்டு ஓடுகிறான்.

அவனைத் தொடர்ந்தும் இன்னொருவன் ஓட ஏதோ பிரச்சினை என்பதை இயல்பாகவே உணர்ந்துவிட்டோம். எனவே நாமும் எமது அணியை நோக்கி விரைவாகச் செல்லவும் அணி படைய ஆயத்த நிலைக்கு வரவும் சரியாக இருந்தது.

அது ஜெயசிக்குறு சமருக்கு முந்திய புளியங்குள காவலரண் நாட்கள். எதிரியின் ஆக்கிரமிப்பு யுத்தம் ஒன்று எப்போதும் நடக்கலாம் என ஊகித்திருந்து மிகுந்த ஆயத்தமாக இருந்த நாட்கள். இந்தக் காலங்களில் எம்மால் நினைத்துப்பார்க்க முடியாதளவு துன்பத்தை அனுபவித்த நாட்கள். எந்தத் துன்பத்திலும் இன்பம் இருக்கவே செய்யும் என்பதற்கு உதாரணம் எவ்வேளையிலும் கலகலத்துச் சிரிக்கும் போராளிகளின் சிரிப்பொலி எம்மை இன்பமாகவே இருக்கச்செய்யும். அப்படியான இன்பத்தை தரவல்ல அற்புதமான போராளிகளில் மாவீரன் லெப்ரினன் அம்பிகைநாதனும் (செல்வநாயகம் சாந்ததீபன்-வட்டக்கச்சி) ஒருவன்.

பார்ப்பதற்குக் கறுப்பும், கட்டையுமான அந்தப் போராளியா, சிரிக்க வைக்கிறான் என்றால் எவருமே நம்பமாட்டார்கள். அவனது முகத்தில் எளிதில் சிரிப்பை காணமுடியாது. ஆனால் சிரித்தாலும், விடாமல் கெக்கெட்டம் விட்டுச் சிரிப்பான். பின் அவனை நிறுத்துவதென்றால் கடினமே. ஆனால், ஏனையவர்கள் எவ்வளவு துன்பத்திலிருந்தாலும் சிரிக்கவைத்துவிடுவான். பொறுப்பாளரைக் கண்டால் உடனே வாய்மூடி மௌனியாக இருந்து நல்லபிள்ளைக்கு நடிப்பான். அவர் போனதும் தொடங்கிவிடுவான். இவனது நடவடிக்கையே ஒரு வித்தியாசமானது.

"மச்சான் என்ன யோசிக்கிறாய்"

ஒன்றுமில்லை மச்சான். என்ன ஒன்றும் இல்லையோ? அப்ப இந்தாபிடி என தன்னிடமிருக்கும் எதையும் அவன் கையில் திணிப்பான்.

சிலவேளைகளில் அணிகள் ஒன்றுகூடலுக்காக அணிசேர்ந்து இருக்கும்போது சுற்றும் முற்றும் பொறுப்பாளரைப் பார்த்துவிட்டு முன்னே சென்று

ம்... க்கும்... ம்... என்று பாசாங்கு காட்டிவிட்டு

தம்பியவை என்ன சத்தம், அண்ணை முன்னால வந்திருக்கிறது தெரியேலேயோ?

ஓம்... ஓம் விளங்குது. இந்த சிவத்த அண்ணையை தெரியாவிட்டால் என்னவென்று நம்புவது. இங்கே என்ர பல்லப்பாருங்கோ, அண்ணையை மாதிரி யார் வெள்ளையா இருக்கிறது. என்று ஏதோ சொல்லிச்சொல்லி சிரிக்கவைப்பான்.

சிலவேளைகளில் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் கேள்வியும் கேட்பான்!

தம்பி உன்னிட்ட எத்தினை குண்டிருக்கு என்றதும் இரண்டு என்பான்.

காட்டுபாப்பம் என்றதும் அவன் குண்டைக்காட்ட டேய் இது இல்லையடா அடிச்சு விளையாடுற சின்னக்குண்டடா முட்டாள், முட்டாள் என சொல்ல எல்லோரும் சிரிப்பார்கள்.

இப்படியே ஏதோ பகிடிவிட்டு சிரிக்க வைப்பான். இவன் உணவு எடுக்கப் போனான் என்றாலோ! இவனது சமையல் சுற்று என்றாலோ எல்லோருக்கும் விருப்பம். ஏனென்றால் சாப்பாடு தட்டுப்பாடென்றாலும் ருசி இல்லை என்றாலும் சிரிக்கவைத்தே சாப்பிடவைப்பான்.

ஆனையிறவு பரந்தன் சண்டையின்போது ஒருநாள் பயிற்சி முடிந்து வந்த ஓர் போராளி கேட்கிறான்

அம்பி அண்ணை என்ன சாப்பாடு... என்றதும்..

இடி... என்றான்.

அண்ணே இடி என்றால் என்னவென்று கேட்க அந்த நூல் நூலா இருக்கும் அது என்றுசொல்லி ஏதோ... முணுமுணுத்துவிட்டு

போயா... வழமையா கட்டிப் புட்டைத்தவிர வேற ஏதாவது நீ இயக்கத்திற்கு வந்த காலத்திற்கு சாப்பிட்டிருக்கையா?பிறகேன்ரா வீணா ஏதாவது கேட்கிறாய் என்று சொல்லி எல்லோரையும் சிரிக்கவைத்தான்.

இப்படியான அந்தப் போராளி இயல்பில் சிரித்தாலும் அவனது உள்ளத்தில் விடுதலைக்கனல் எழும்பியவாறே இருந்தது. காரணம் போர்ச் சூழலின் காரணமாக தனது தந்தையை சிறுவயதில் இழந்தவனுக்கு தனது மூத்த தங்கையின் வீரச்சாவும் அவனது வாழ்வை வெகுவாகப் பாதித்தது. எனவே, சிங்கள இன வெறியர்களின் கோரத்தாண்டவத்தின் கொடுமைகளை உணர்ந்து தாய் நாட்டின் விடிவிற்காய் போராடிடத் துணிந்து இயக்கத்தில் இணைந்து கொண்டான்.

போர்மேகம் நகரத்தொடங்கியபோது மாவீரன் அம்பிகைநாதனும் சேர்ந்தே விடுதலைப்பயணத்தில் பயணிக்க ஆரம்பித்தான். அணிகளுக்குரிய கண்ணிவெடிப் பிரிவில் இணைந்து செயற்படத் தொடங்கியவன் அக்காலத்து கண்ணி வெடி தொடர்பாக முழுமையாக அறிந்திருந்தான்.

அக்காலப்பகுதி மிகவும் கடினமாகவும், இலகற்றதன்மையாகவும் இருந்தபோது போரின் தன்மைக்கேற்ப கண்ணிவெடிகளை காலமறிந்து பொருத்தமான இடங்களில் வைப்பதுண்டு. எதிரி எங்கு வருவான் என்பதை அறிந்து அம்பிகைநாதன் வைத்த கண்ணிவெடிகளில் எதிரியின் கால்கள் பல சிதைந்திருந்தன. பல எதிரி கொல்லப்பட்டிருக்கிறான்.

எனவே தான் இன்றும் அம்பிகைநாதன் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினான். ஆமி இறங்கப் போறானாம் என்று அறிந்த உடனேயே தனது 03 பேர் கொண்டகண்ணிவெடி அணியை தயார்செய்து தனக்குத் தரப்பட்ட வேலையினை செய்யத் தொடங்கினான். ஜெயசிக்குறு சண்டை ஓமந்தையில் தொடங்கிவிட்டது. எமக்கு தரப்பட்ட புளியங்குளமெனும் புரட்சிக்குளத்தின் காவல் நிலைகளுக்கு முன் அம்பிகைநாதனே பெரும்பாலான கண்ணிவெடிகளை விதைத்தான்.

வரட்டும் பாப்பம்!

மச்சான் என்னிட்டயா? சேட்டைவிடுறான் என்று சொல்லிச் சொல்லி வைத்தவனின் கனவு பலித்தது. கட்டம் கட்டமாக முன்னேறிய இராணுவம் புளியங்குளத்தை அண்மித்தபோது ஒவ்வொரு இரவும் பாரிய கண்ணிவெடி வெடிப்புச்சத்தம் கேட்கும். அந்த வெடிப்போடு ஆ... ஊ... என்றும் முணுமுணுப்பும் சலசலப்பும் கேட்கும். இதை அறிந்ததும் எப்படி மச்சான் என்ர கைராசி என்பான். அவன் சொன்னது போலவே மறுநாள் பார்த்தால் எதிரியின் பிணம் ஒன்றோ இரண்டோ கிடக்கும்.

இப்படியாக முதல்நாள் வெடித்த இடத்திலேயே மறுநாள் மேஜர் சொய்சாவுடன் சென்று அம்பிகைநாதன் வைத்த கண்ணிவெடியில் அடுத்தநாள் விடிவதற்குள் எதிரி ஒருவன் மாட்டிக்கொண்டு கத்துகிறான். காயத்துடன் கத்திக்கத்தியே செத்துப்போனவனின் உடலை மறுநாள் புகழரசன், மதுரன், அமுதன், நான் எல்லோரும் எடுத்தபோது அவனிடம் பெறுமதியான இரவுப் பார்வைகாட்டி பல படையப்பொருட்கள் இருந்தன. இது அம்பிகைநாதனுக்கே கிடைத்த வெற்றியாகும்.

வீரவேங்கை லெப் அம்பிகைநாதன் எந்தளவு கண்ணிவெடிப்பிரிவில் வேலைசெய்தானோ அதைவிட மேலாகத்தான் தாக்குதலணியிலும் வீரப்போர் புரிந்தவன். என்பதற்கு அவனிடம் அடிவாங்கிய எதிரியே சாட்சியாகும்.

புளியங்குளம் புரட்சிக்குளமாகும் வரை ஈழமண் புளியங்குளத்தில் சிவப்பாகும்வரை களமாடிய அந்த மாவீரன் 09.09.97 புளியங்குளச்சமரில் வீரகாவியமானான். லெப் அம்பிகைநாதன் வீரச்சாவடையும் நாளிலும் எதிரி ஒருவன் லெப் அம்பிகைநாதனின் கண்ணிவெடியில் காயமடைந்தான். எனவே இவன் போன்ற மாவீரர்களின் ஆன்ம வீரம் ஈழமண்ணில் எதிரி கால்பதித்திருக்கும்வரை அவனை காவுகொள்ளும்.






# அப்பா

சூரியன் கீழிறங்கிக்கொண்டிருந்த ஒரு மாலைப்பொழுது மஞ்சள் வெயில் முற்றமெங்கும் பரந்திருந்தது.

அப்பா திண்ணையில் சுருண்டபடி படுத்திருந்தார். அவர் தோட்டம் கொத்தும் அந்த முதலைமார்க் மண்வெட்டி திண்ணைக்கு அருகில் கிடந்தது. அதில் அப்பியிருந்த மண்கூட சரியாக துடைக்கப்படவில்லை. எட்டி அப்பாவைப் பார்த்தேன். ஆழமாய்த் தூங்கிக்கொண்டிருந்தார். அவரது மூச்சு சீராக இயங்கிக்கொண்டிருந்தது.

மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளேபோனேன்.

'அம்மா...'

அம்மா வந்தாள்.

'அப்பாவுக்கு என்ன வருத்தமே...'

'இல்லை... தேகம் உளையுதெண்டு படுத்திருக்கிறார்... எழும்பச் சுகம் வந்திடும்...'

அம்மாவின் பதிலில் எனக்கு நம்பிக்கையில்லை. அப்பா இப்படி படுப்பவரல்ல. 'ஒருக்கால் பரமலிங்கத்தாரிட்டை காட்டுவமே...'

'மல்லித்தண்ணி குடுத்தனான்... பரியாரியாரிட்டை காட்டுற அளவுக்கு ஒண்டுமில்லைத்தம்பி...' என்றாள் அம்மா.

அப்பா சும்மா இருக்கமாட்டார். காலநேரம் பாக்காமல் எப்பவும் தோட்டத்துக்கை மண்வெட்டியோடை நிற்பார். எங்கட குடும்பத்திலை ஒருத்தர் கூட வெளிநாட்டுக்குப் போகேல்ல. ஆனா... எங்கள சகல வசதியளோடையும் வாழவைச்சது அப்பாவின்ர கடும் உழைப்புத்தான்...

பெரியக்காவுக்கு எண்பத்திமூண்டிலை மூண்டுபரப்பு காணிக்குள்ளை ரெண்டறை வீடுகட்டி கலியாணமும் செய்துவைச்சது அவற்றை கெட்டித்தனமும் உழைப்பும் தான்.

சின்னக்காவுக்கு மாப்பிள வீட்டுக்காறர் வீடு வேண்டாமெண்டிட்டினம். காசும் நகையும் குடுத்து கலியாணம் கட்டிவைச்சார். அண்ணன் தானே ஒரு பொம்பிளையை விரும்பினார். அப்பா அதுக்கும் தடைவிதிக்கேல்லை. வடிவா விசாரிச்சுப் பார்த்துப்போட்டு செய்துவைச்சார். அண்ணி வீட்டில இருந்து சீதனம் பேச எண்டு வந்தினம்.

'எங்களுக்கு நீங்கள் இனாம் கினாமெண்டு ஒண்டும் தரவேண்டாம். உங்கட பிள்ளைக்கு என்ன குடுக்க விரும்பிறியளோ அதைக் குடுங்கோ' எண்டு ஒரே கதையாச் சொல்லிப் போட்டார்.

'செல்வச்சந்நிதி முருகன் கோயிலிலை தான் தாலிகட்ட வேணும்' எண்டு கேட்டினம்.

'அது உங்கட விருப்பத்தையும் வசதியையும் பொறுத்தது' எண்டார்.

'என்ன... அவங்கள் கேட்கிற எல்லாத்துக்கும் தலையாட்டுகிறதோ...' எண்டு அம்மா கொஞ்சம் குழம்பினா.

'இஞ்சவா... எப்பட எங்கட வீட்டுக்கு அத எடுக்கிறதெண்டு தீர்மானிச்சனோ... அந்த நிமிசத்திலை இருந்து அது என்ர பிள்ளைதான்...' எண்டு சொல்லிப்போட்டார் அப்பா.

அம்மா அடுத்த கதை கதைக்கேல்லை.

அப்பான்ரை நேர்மையும்கெட்டித்தனமும் தான் எனக்குப் பிடிக்கும்.

அப்பா குடிப்பார், ஆனா நித்திய குடிகாரனில்லை. எப்பாலும் இருந்துவிட்டு ஒருநாள். அதைக்கூட எங்களுக்கு வித்தியாசப்படுத்திக் காட்டமாட்டார்.

அப்பா பள்ளிக்கூடம் சென்று நிறையப்படிக்கவில்லை. ஆனால் எல்லாத்துறைகளிலும் எல்லாம் அறிந்திருந்தார். நிறைய வாசிப்பார். எல்லா றேடியோச் செய்திகளையும் கேட்பார். கோயில்களிலை, படிச்சவைகூட புத்தகம் பார்த்துத்தான் தேவாரம் படிப்பினம். ஆனா அப்பா கண்களை மூடிக்கொண்டு... ஒரு எழுத்துக்கூடப் பிசிறாமல் எல்லாத் தேவாரங்களையும் இராகத்தோடு பாடுவார்.

ஊரிலை நிறைய சங்கங்களும், மன்றங்களும் இருக்கும். அப்பா ஒன்றிலும் பதவிக்குப் போகமாட்டார். ஆனால், பதவியில இருக்கிறவை பிரச்சினையளை வந்து அப்பாவோடை ஆராய்ந்து கொள்ளுவினம்.

ஒருநாளும் அப்பாவுக்கு கோபம் வாறேல்ல. என்ர இருபத்தொம்பது வயது காலத்திலை அப்பாவுக்கு கோபம் வந்ததெண்டால் ஒருக்கால் தான். சின்னச்சித்தப்பா ஒருநாள் மாட்டுக்கு அடிச்சவர். அந்த மாடு ஒவ்வொரு நாளும் அவர் வைக்கிற தவிட்டுத் தண்ணியைக் குடிக்காமல் தட்டி ஊத்திப்போடும். அவ் வளவு முரடு அது.

ஒருநாள் சின்னச் சித்தப்பாவுக்குச் சரியான கோபம் வந்திட்டுது. மாட்டை மரத்தோடை கட்டிவைச்சுப் போட்டு... பச்சைமட்டை வெட்டி அடிஅடியெண்டு அடிச்சார். அக்கம் பக்கத்துச் சனமெல்லாம் நிண்டு வேடிக்கை பாக்குது... பிடிப்பாரில்லை.

அப்பதான் அப்பா தோட்டத்தாலை மண்வெட்டியோடை வந்தவர் நடக்கிறதைப் பார்த்தவுடனை அப்பாவுக்கு ஆத்திரம் சிரசுக்கேறி விட்டுது. விறு விறு றெண்டு போய்... கீழே கிடந்த தடி ஒன்றை எடுத்து, விட்டார் சின்னச் சித்தப்பாவுக்கு நாலஞ்சு அடி. ஆள் நிலை குலைஞ்சு போச்சு.

'வாயில்லாச் சீவனைப் போட்டு அடிக்கிறியேடா மாடு...' அப்பா தடியை எறிந்துவிட்டு வந்தார்.

ஒருத்தரும் மூச்சுக்கூட விடவில்லை. அந்தச் சுற்றுவட்டாரத்திலேயே ரெண்டுநாட்கள் அசாதாரண சூழ்நிலை நிலவியது. மூன்றாம் நாள் சின்னச்சித்தப்பா வீட்டுக்குவந்தார். ஒண்டுமே நடக்காதமாதிரி... ஒண்டையுமே மனதிலை வைச்சுக்கொள்ளாத மாதிரி...

'இஞ்சையப்பா... சின்னத்தம்பியன் வந்திருக்கிறான்... தேத்தண்ணி கொண்டுவாவன்...' என்றார் அப்பா அம்மா தேநீர் கொண்டுவந்து கொடுத்தா சித்தப்பா குடித்துவிட்டுப் போனார். அவ்வளவுதான். அப்பாவின் நினைவுகளே மனதில் ஓடிக்கொண்டிருந்தன. அப்பாவை முதலில் பார்ப்பவர்கள்... கொஞ்சம் பழகிய பிறகு முதலில் தாம் வைத்திருந்த அப்பாவைப்பற்றிய அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளுவினம். அப்பா அப்பிடித்தான்.

வெளியே கொஞ்சம் இருட்டிவிட்டிருந்தது. எழுந்துவந்து வெளியே பார்த்தேன். அப்பா இன்னமும் எழும்பவில்லை. மனம் பதைத்தது.

மெல்ல நெற்றியில் கைவைத்துப்பார்த்தேன் காய்ச்சலில்லை. மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தார்.

'என்னப்பா செய்யுது?...'

'ஒண்டுமில்லை' தலைமட்டும் ஆடியது.

'பரமலிங்கத்தாரைக் கூட்டியரட்டே...'

அவசரமாய் வேண்டாமெண்டு தலையாட்டினார்.


'என்னடா தம்பி... எப்பனெண்டவுடனை குழம்பியடிக்கிறாய்... அவருக்கு ஒண்டுமில்லை... பேசாம இரு...'

நான் பேசாமலிருந்தேன். கால் முகம் கழுவிக்கொண்டு வாசிகசாலைக்குப் போனேன்... நிறைய ஆட்களாயிருந்தது.... அப்படியே கோயிலடிக்குப்போனேன்.

கோயில் வீதி பாலாறாய்த் தெரிந்தது. அவ்வளவு நிலவு வெளிச்சம். வயதான நாலைந்துபேர் மண்டபத்தில் அமர்ந்திருந்து கதைத்துக்கொண்டிருந்தார்கள். குரல்கள் பெரிதாகக்கேட்டன. குரல்களை வைச்சு கதைப்பவர்கள் யார்யாரென விளங்கியது.

இளவட்டங்கள் அதிலில்லை.

அக்காவீட்டை போவமா



என்று மனம் எண்ணியது. உள்மனம் மறுத்தது. பேசாமல் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு வீட்டுக்கே போனேன். நிலவொளியில் திண்ணை வெறுமையாயிருந்தது.

அப்பா விறாந்தைக்குள் பாயில் படுத்திருந்தார்.

'அப்பா சாப்பிட்டவரே...'

ஓம் தம்பி... இடியப்பம் அவிச்சு... சொதியும் வைச்சுக்குடுத்தனான்...'

நான் அறைக்குள் போனேன்.

'நீயும் வந்து சாப்பிடன் தம்பி...'

மனதில் ஏதோ கனமேறியிருப்பதாய் உணரமுடிந்தது.

'ஏன் தம்பி ஒரு மாதிரியிருக்கிறாய்...'

'ஒண்டுமில்லை...'

'சொதிகொஞ்சம் விடட்டே...'

'காணும்...'

சாப்பிட்டுவிட்டு கைகழுவிய போது மோட்டார் சைக்கிள் வெளிச்சம் வளவுக்குள் வந்தது.

'ஆர் தம்பி?...'

'சின்னக்காவின்ர அத்தான் போல...'

அவர்தான் வந்தார். தனியாகத்தான் வந்தார்.

'தேத்தண்ணி ஊத்தட்டோ?..., அம்மா கேட்க...

'வேண்டாம்... சாப்பிடவேணும்... கடையடிக்கு வந்தனான்...' என்றார். அவர் சிறிதுநேரம் இருந்தார்.

'அப்பா ஏன் நேரத்துக்குப் படுத்திட்டார்?... ஏதும் சுகமில்லையோ?...'

'வருத்தம் ஒண்டுமில்ல... சும்மா தேகம் உளையுதெண்டு படுத்திருக்கிறார்...' அம்மா சாதாரணமாகச் சொன்னாள்.

றேடியோவில செய்திகேட்டு முடிய அத்தானும் புறப்பட்டார். நான் கேற்றைப்பூட்டிவிட்டு வந்து உள்ளே கட்டிலில் படுத்தேன். அப்பாவும் இயல்பாகத் தூங்கிக்கொண்டிருந்தார். 'அப்பா பாவம் நானறிஞ்ச காலம் தொட்டு மண்வெட்டியோடைதான் அவருக்குச் சீவியம்...'

மனம் கலங்கியது. இப்பத்தான் எனக்கு வேலை கிடைச்சிருக்கு. அப்பாவ கண்கலங்காம பார்க்க வேணும். எத்தினைதரம் அண்ணனும் நானும் அப்பாக்குச் சொன்னம்...இனிக் காணும் வீட்டில சும்மா இருங்கோ எண்டு... அவர் கேட்டாத்தானே...'

மனம் அந்தரித்தது.

ஜன்னலுக்குள்ளால் உள்ளே நுழைந்த நிலவின் ஒளி அறை முழுவதும் பரவிக்கிடந்தது.

வேலியில் படர்ந்திருந்த மல்லிகைச் செடியில் பூத்த பூக்களின் வாசம் கமகமத்தது. குளிர் காற்றும் சேர்ந்து தூக்கத்தை விரட்டியது.

மெல்ல எழுந்து வெளியே வந்தேன்.

விறாந்தையில் அப்பா தூங்கிக் கொண்டிருந்தார். அவரின் தலைமாட்டில் நுளம்புத்திரி புகைந்துகொண்டிருந்தது. சீராக மூச்சுவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்.

அம்மா சற்றுத்தள்ளி வெறும் பாயில் உறங்கிக்கொண்டிருந்தா. வாசலில் அம்மாவின் செல்லநாய் சுருண்டு கிடந்தது.

பேசாமல் வந்து மீண்டும் கட்டிலில் சரிந்தேன். நேரே கீதோபதேசத் தோற்றக்காட்சியும் வசனங்களும் சுவரில் தொங்கின. எங்கோ சேவலொன்று சிறகடித்துக் கூவியது.

நேரத்தைப்பார்த்தேன் சரியாக ஒருமணி. எப்படியாவது தூங்க வேண்டுமென்று கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்க முயற்சித்தேன். தூங்கினால்தான் காலையில் வேலைக்குப் போகமுடியும்.

அப்பா ஒரு முறை என்னை தன்னுடைய சைக்கிளில் கீரிமலைக்குக் கூட்டிக்கொண்டுபோனவர்... கேணியில் இருவரும் குளித்தோம் அப்பா எனக்கு தன்னுடைய துவாயால் தலைதுடைத்துவிட்டார். அப்பா எங்களுக்காகவே வாழ்ந்தவர்... வேறு உலகம் அவருக்கு இல்லை. நினைவுகள் சுழன்று சுழன்று மேலெழுந்தன...

அப்பா பிறந்த சில மாதங்களில் அவருடைய தகப்பன் பிரிந்துபோய் விட்டாராம். அப்பாவின் 13ஆவது வயதில் தாயும் இறந்துபோனாவாம்.

பெரியப்பாவும், அப்பாவும்தான். பெரியப்பா திருமணமே செய்து கொள்ளவில்லை. சின்னச்சித்தப்பாவின் அம்மாதான் இவர்களையும் வளர்த்தாவாம்.

அப்பா அவவை 'குஞ்சியாச்சி' என்று பிரியமாய் கூப்பிடுவார்.

அப்பாவுக்கு ஒருகாலத்தில் அரசியலிலும் ஈடுபாடு இருந்தது. செல்வநாயகத்தாரின் கட்சிக்காக அருமையாகப் பாடுபட்டாராம். அவர் இறந்துபோக-அரசியலில் அப்பாவுக்கு ஈடுபாடில்லாமல் போய்விட்டது. அப்பா காலத்தில் வீட்டுச்சுவரில் ஒட்டிய உதய சூரியன் படம் சின்னக்காவின் திருமணத்திற்கு வெள்ளையடித்த போதுதான் உரித்து எறிந்தோம்.

யாழ்ப்பாணம்-முற்றவெளியில் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட படுகொலைகள் நடந்தபோது-அப்பாவும் மயிரிழையில்தான் உயிர்தப்பினவராம். அந்த மயிர்க்கூச்செறியும் சம்பவத்தை அப்பா அடிக்கடி ஞாபகப் படுத்துவார்.

அப்பாவுக்கு கடவுள் நம்பிக்கை இருந்தது. ஆனால் ஒருநாளும் அவர் விரதம் இருந்தது கிடையாது. திருவிழாக்கால விளம்பரங்களிலும் பங்கெடுத்ததில்லை. வெள்ளிக் கிழமைகளில் மட்டும் அமைதியாய்க் கோயிலுக்குப் போய்விட்டு வருவார்.

அப்பாவுக்கு கிரிக்கெட் விளையாட்டிலும் ஆர்வம். வீட்டில் ஓய்வாக இருந்து கிரிக்கெட் விளையாட்டை தொலைக்காட்சியில் ரசிக்காவிட்டாலும் பத்திரிகைகளில் அது சம்பந்தமான செய்திகளைத் தேடித்தேடிப் படிப்பார். கோடை காலத்தில் தண்ணீர் வற்றிய எங்களூர்க் குளம்தான்

**ஆதிலட்சுமி சிவகுமார்**

சிறுவர்களின் விளையாட்டு மைதானம். அதில் கிரிக்கெட் விளையாடும் பன்னிரெண்டு பதின்மூன்று வயது சிறுவர்களைப் பார்த்து அப்பா பரவசப்படுவார். அவருக்கு இந்த உலகில் மிகவும் பிரியத்திற்குரியது குழந்தைகளின் மழலைதான் என்று நான் நினைக்கிறன். இரண்டுஅக்காக்களின் நான்கு குழந்தைகளிலும் அப்பா நிறைய அன்புகொண்டிருந்தார்...

அப்பா பத்திரிகைகளை விரும்பிப் படிப்பதுபோல நூல்களை விரும்பிப் படித்ததை நான் பார்க்கவில்லை. ஒரு வேளை எல்லாநேரமும் தோட்டத்துக்குள் நிற்பதாலாக இருக்கலாம்.

அப்பாவுக்கு இப்போது எழுபத்திரெண்டு வயது.

தலைநரைத்து... தாடிநரைத்துக் கொஞ்சம் ஒடுங்கிப்போனார்.

தோலில் சுருக்கம் விழுந்து விட்டது.

சிந்தனைகள் தொடராய் மூடிய கண்களுக்குள் நிறைந்தன.

'தம்பி.... தம்பி...' அம்மா அவசரமாய் கதவைத் தட்டினா.


'என்ன?... '

'அப்பா பேசாமல் கிடக்கிறார் எழும்பு தம்பி....'

திடீரெண்டு உடம்பு முழுவதும் அதிர்ந்தது. அவசரமாய் எழுந்தேன். அப்பாவிடம் விரைந்தேன்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கியப்பகிர்வு



# தூய மனதுடன்

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்தி நாதன்**

கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம் இது. இலங்கை வானொலியில் ஒலிபரப்பான 'இரவின் இதயம்' என்னும் சித்திரம் தொடர்பானது. அதனை எழுதியவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. அந்த நிகழ்ச்சியைத் தயாரித்தவர் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக பின்னர் கடமையாற்றிய எஸ்.வி. இராஜசுந்தரம்.

குறித்த சித்திரத்தில் ஒரு காட்சி சிருங்காரரசம் பொருந்தியது. அகலிகை இந்திரனின் மாய மோகத்திற்கு ஆளாகும் நிலை அச்சித்திரத்தின் ஒரு பகுதியில் காட்டப்படுகிறது. கலவிக் களியில் அகலிகை தன்னை மறந்த நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

இதனை எப்படி வானொலியில் காட்டுவது என்பது? ஒரு சிக்கலான கேள்வியாக இருந்தது. மேடையிலோ,சினிமாவிலோ இதனை மெய்ப்பாடுகள் மூலம் முகபாவங்கள் மூலம் காட்டிவிட முனையலாம்.

ஆனால் ஒலிக் குறிப்புக்களையும் சொற்களையும் கொண்டு இயங்கும் வானொலியில் இந்தக் காட்சியை எப்படி காட்டினார்கள் என எஸ்.வி. இராஜசுந்தரம் தன்னுடைய கட்டுரையின் ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

'பிலோமினா சொலமன் என்கின்ற வானொலி நாடக நடிகை கலவிக்களியின் இன்ப மயக்கத்தில் கிறங்கிப்போன அகலிகையின் உணர்வை "சுவாமி" என்கிற ஒரே ஒரு சிருங்கார குழைவு கலந்த வார்த்தையால் வெளிப்படுத்தினார். அதன் மூலம் எண்ணற்ற வானொலி ரசிகர்களின் ஈர்ப்பையும் பெற்றுக்கொண்டாராம்.

வானொலி என்கிற பிரபல்யமான ஊடகத்தினை எப்படிக் கையாளுவது அல்லது எப்படிக் கையாள முடியும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

குறிப்பாக வானொலி ஊடாக ஒலிபரப்பாகும் வானொலி நாடகங்கள் சித்திரங்கள் என்பன ஒலிக்குறிப்புக்களாலும் வார்த்தைகளாலுமே தமக்கான காட்சிகளை விரிப்பன. அந்த விரிப்பின் ஊடாக தமது அரங்குகளை உருவாக்கி தாம் கொண்டுவரும் பாத்திரங்களை அங்கு நடிக்க வைத்து கேட்கும் சுவைஞர்களைத் திருப்திப் படுத்துகின்றன.

மேடையிலோ, தெருவிலோ, திரையிலோ, உருவாக்கப்படும் அரங்கில் ஏற்படும் நாடகங்களில் வரும் பாத்திரங்கள் அத்தனைபேரும் அதனைப் பார்க்கின்ற பார்வையாளர்களுக்கு ஒன்றாகத்தான் தெரிவார்கள். புறக் கண்ணுக்குத் தெரியும் பாத்திரங்களும், அதே புறக் கண்ணில் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அரங்கில் ஒரு குறிப்பிட்ட மட்டுப்படுத்தப்பட்ட உணர்வுகளையும் வெளிப்பாடுகளையும் தான் கொண்டுவர முடியும்.

ஆனால் கேட்கிற ஒவ்வொருவரின் மனத்திலேயேயும் அரங்குகளை ஸ்தாபிக்கும் வானொலி நாடகங்கள் வானொலி நேயர்கள் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவத்தினை தரும். அதனால் வானொலி நாடகம் மிகுந்த சக்தி மிக்கதாகும். அதாவது வானொலி நாடகங்களை எழுதும் எழுத்தாளர்களும் மேடை நாடகங்களை எழுதும் எழுத்தாளர்களும் ஒரு விதத்தில் வேறுபட நேருகிறது.

மேடை நாடக எழுத்தாளர்கள்- தாம் எந்த உணர்திறனில் பாத்திரங்களை உருவாக்குகின்றார்களோ அதற்கு நிகராக (எழுதுபவர்களே இயக்குநர்களாக இருந்தால் இது உச்சம் பெறும்) மேடைப் பாத்திரங்களை உருவாக்கிவிட முனைவார்கள். ஆனால் வானொலி நாடக எழுத்தாளர்களின் பாத்திரங்களின் தன்மைகளை கேட்பவர்கள் தங்கள் தங்கள் உணர்திறனில் வைத்துப் பார்ப்பதால் உச்சங்களைச் சிலவேளை அதனை விட குறைந்த நிலையினையும் அடையும் வாய்ப்புண்டு.

இது தவிர வானொலி நாடகங்கள் முன்னரே குறிப்பிட்டது போல ஒலிக் குறிப்புக்களாலும் சொற்களாலும் ஆளப்படுவதால் சொற்களைப் பாவிப்பதில் "செட்டாக அதாவது இறுக்கமாக இருக்க வேண்டும்"

சொற்களை பொருத்தமாக பாவிக்காமல் விடுவதோ- ஒலிக்குறிப்புகளில் அக்கறை அற்று இருப்பதோ வானொலி நாடகத்தை காவு கொள்ளச் செய்து விடும்.

எங்கள் சமீபகால வழித்தடத்தில் எங்களது தேசிய வானொலியான புலிகளின் குரலில் வானொலி நாடகங்களும் ஒலிபரப்பாகின்றன.

ஒரு காலத்தில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பான வானொலி நாடகங்கள் மிகப் பிரபல்யமாக இருந்தன. கே.எம். வாசகர், ஜோர்ச் சந்திர சேகரன், பி.விக்னேஸ்வரன் போன்றவர்கள் தயாரித்த நாடகங்கள் பலரின் அபிமானத்தைப் பெற்று இருந்தன.

தமிழகத்தில் சென்னை, திருச்சி, பாண்டிச்சேரி வானொலி நிலையங்கள் மிகத் தரமான நாடகங்களை ஒலிபரப்பின. ஒலிபரப்பி வருகின்றன. வானொலி நாடகவாரம் என்பதைப் பிரகடனம் செய்து பல்வேறு பரிசோதனை முயற்சிகளை இப்போதும் செய்து வருகின்றன.

அண்மையில் பரமுபுத்திரன் அவர்களின் தூய மனதுடன் என்கிற வானொலி நாடகங்களின் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

"பரமுபுத்திரன்" அவர்களின் வானொலி நாடக எழுத்தாளராக அறிமுகமாகி உள்ளார். எனினும் அவர் தன்னுடைய சொந்தப் பெயர் அல்லது தொடர்பு கொள்ள விலாசம் என்று எதுவுமே இல்லாமல் ஏன் மறைத்துக்கொண்டார் என்று தெரியவில்லை.

"நான் வாழுகின்ற சமுதாயத்தில் அங்கத்தவனாகிய நானும் என்னைச்சூழ்ந்துள்ளவர்களின் வாழ்வியலை அனுபவித்திருக்கிறேன். இங்கு நன்மை தீமை, இன்பம் துன்பம், மகிழ்ச்சி சோகம் என நடைபோடுகின்றன. வாழும் காலத்தில் இவை ஏற்படுத்திய தாக்கம் எழுத்துருப் பெற்றது. இந்நூலைப் படிக்கும் உங்களிடையேயும் இத்தாக்கம் தொனிப்பில் எனது அனுபவம் சரியானதே. தவறின் எங்கோ தவறு நடந்து விட்டது." என்று பரமுபுத்திரன் சொல்கின்றார்.

தவறு எங்கே நேர்ந்துள்ளது என்று யோசிக்கத்தான் வேண்டியுள்ளது. இத் தொகுப்பில் உள்ள ஏழு நாடகங்கள் வருமாறு. 1. தூயமனதுடன் சீதனப் பிரச்சினை சம்பந்தமான 2. பிள்ளைக்காகவா?- உயர்தர வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் பிள்ளைகளை பெற்றோர் படுத்தும் பாடு தொடர்பானது. 3. எங்களுக்கும் அயலவர்க்கும்- நாய் கடித்தால் கவலையீனமாக இருப்பவர்களைப் பற்றியது. 4. உள்ளதை உள்ளபடி -விளையாட்டுப் போட்டிக்கு ஆயத்தமாகி அந்த நினைவு நிராசையாகும் மாணவர் பற்றியது. 5. வெகுமதி- இதுவும் சீதனப்பிரச்சினை சம்பந்தமானது. 6. திசை தெரிகிறது- போராட்டத்தில் இணையப் போகும் இளைஞன் பற்றியது. 7. மகுடம் பண்பட்ட ஆசிரியரின் பண்பட்ட நடத்தை பற்றியது.

எல்லா நாடகங்களுமே கிட்டத்தட்ட ஒரே தன்மையான பாத்திரங்களால் உருவாக்கப்பட்டவை.


அந்த உணர்வு வரத்தக்கதாக . அநேகமான நாடகங்களில் தாயின் பாத்திரப் பெயர் கனகமாகவும் அவரது குண இயல்புகள் எல்லா நாடகங்களிலும் ஒரே தன்மையாகவும் அமைந்துள்ளவை.

அதற்கேற்றாப் போல "பிள்ளைக்காக" நாடகத்தில் பையன் சோதனைக்குப் போக ஆயத்தப் படுத்தும் போதும் "உள்ளதை உள்ள படி" நாடகத்தில் விளையாட்டுப் போட்டிக்குப் பையன் புறப்பட ஆயத்தமாகும் காட்சியும் ஒரே வகையில் அமைந்துள்ளன.

இவ்வகையான தன்மைகள் நாடகம் தனித்தனியே ஒலிபரப்பாகும் போது அவ்வகையாகத் தோற்றாது. ஆனால் ஒன்று சேர படிக்கும் போது எந்தவிதமான ஈர்ப்பையும் கொடுக்க முனையாது.

அவ்வாறே

தூய மனதுடன் நாடகத்தில் கனகம் ஒரு இடத்தில்




பின்வருமாறு கூறுகின்றார். "நல்ல வெள்ளையா இருக்கோணும். மெல்லிய பொம்பிளையா இருக்கோணும். நீண்ட தலைமயிரா இருக்கோணும். படிச்சும் இருக்கோணும், படிக்காட்டிலும் பரவாயில்லை முதல் சொன்னதுகள் இருக்கோணும்"

அதே நாடகத்தின் விளக்கமும் பின்வருமாறு கதைக்கின்றார்.

"அதுதான் சீதனத்தில பேரம் பேசோணும். சீதனத்தில பழிக்குப் பழி வாங்கோணும். நான் மாப்பிள்ளையின்ர அம்மா எண்டு பெருமையாகக் கதைக்கோணும்."

என்ற வசனங்கள் சுவையைத்தர மறுக்கும். வானொலி நாடக எழுத்தாளர்கள் எம் மத்தியில் மிக மிகக் குறைவு. பரமுபுத்திரன் போன்ற வானொலி நாடக எழுத்தாளர்கள் இத்துறையில் மேலும் மேலும் அக்கறை கொள்ள வேண்டும்.

நாடகங்களைக் கேட்டால் கேட்டவுடனேயே அது காற்றுடன் போய்விடக் கூடாது, நாடக ஒலிபரப்பு முடிவடைந்த பின்னரும் கேட்டவர்களின் மனத்தில் அந்த நாடகம் பல்வேறு தாக்கங்களை தொடர்ச்சியாக ஈடுபடுத்த வேண்டும். அதற்கு விரிவான பரந்த களங்களை உடைய பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்களைக் கொண்ட நாடகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு எழுதும் அனுபவங்கள் எல்லாமே எமது அனுபவங்களாக அமைய வேண்டும் என்பதல்ல. ஏனையவர்களின் அனுபவங்கள் உரிய முறையில் உள்வாங்குவதன் ஊடாக அவற்றினை நாடகங்களாக்கலாம்.

## காற்றுப்பிடிக்கிறது

பனிமூட்டம் பரவிக் கிடக்கிறது
உண்மையாகவே.
சிதம்பரத்தைப் பூ
நேரம் பார்த்தா பூக்கும்?
சொல்லி வந்ததல்லவே இது
சொல்லாது வந்த சுகந்தம்.
உள்ளுறையும் தகைப்பின் ஆழம்
கனவுகளின் தாளத்தில்
காணாது போவதும் நீறுவதும்
சுகந்தத்தின் இயல்பு.
பூவானம் செய்துள்ளது மனது.
பூ விரிக்க கனவின் காலம்
கைகட்டிக் காத்திருக்கிறது.
படிக்கையிலும், படுக்கையிலும்
வாசல் முற்றத்திலும், கழிவறையிலும் கூட
கற்பனை பூரணையாகின்றது.
பள்ளி நாட்களில் இது வருமாம்.
என்னுள் ஏதோ செய்யும் இது
வந்தாயிற்று!
முதிர்ச்சியின் சாயல் வெளிறவும்
என் வசந்தம் வரவிழாது!
வசந்தத்திற்கும் வயதிற்கும்
சமாந்தரமே அதிக சாத்தியமுண்டு!

அ.ஜெ.டெனிசியஸ்

## மனிதத்தின் பிரதிநிதியாய்

நேற்று அவள் எங்களுடன் இருந்தாள்
பெட்டிப் பாம்பாக,
ஆண்களின் மகுடிக்கு ஆடினாள்
வளைந்து வளைந்து
ஆட முடிந்தது ஆனால்
அடங்கிக் கிடந்தாள்
பெட்டியில் அடிமையாக

இன்றும் அவள் எங்களுடன் தான் இருக்கிறாள்
சீறும் பாம்பாக
பெட்டியை விட்டு வெளியே
வீதியில்
படம் விரித்த தலை
மகுடிக்குச் சாயாமல்
விடம் தாங்கி நிற்கும் விசித்திரம்
விடுதலை வேட்கை

நாளையும் எங்களுடன் தான் இருப்பாள்
விடுதலை மணியின் ஒலியில்
நிம்மதிப் பெருமூச் செறிந்து
நிலத்தில் ஒரு
மனிதத்தின் பிரதிநிதியாய்.

முருகு பாரிமகன்

## திரும்பும் வரலாறு அல்லது சாத்தானின் உருவாக்கம்

பன்னிருவரில் ஒருவனாய்த் தெரியப்பட்டும்
முப்பது வெள்ளிகளுக்கு கைநீட்டி விட்டு
"இராப்போசனத்துக்கு" வந்தான் ஒருவன்
தேவமகனின் இடப்புறத்திலிருந்தான்
அவனின் பாதங்களும் கழுவப்பட்டன
ரசத்தில் தோய்த்த அப்பத்தை தின்றுவிட்டு
முத்தத்தால் காட்டிக் கொடுத்தான்
மனுக்குல மீட்புக்காய்த் திருப்பாடுகள் அரங்கேறின
"எல்லாம் நிறைவேறிற்று"
கழிவிரக்கம் மேவத் தானே நான்று கொண்டான்
ட்றகுலாவின் நதிமூலம் அவனேயென்றும்
உதிரம் குடிக்கும் வௌவால்கள்
அவனிலிருந்தே பிறந்தனவென்றும்
பறைகிறது ஹொலிவூட்.

மீண்டுமொருமுறை திரும்பிற்று வரலாறு
இடப்புறத்திருந்த இன்னொருவன் பிறந்தான்.
இரண்டு மிலேனியங்களில் நிறையவே பெருகிவிட்டன
முப்பது வெள்ளிகள்
தூக்கில் அவன் தொங்கு முன்னரே
ட்றகுலாவாய் இரத்தம் குடிக்க அலைகின்றன
வௌவால்கள்
அரங்கேறுகின்றன திருப்பாடுகள்
மனுக்குல மீட்பின் வழியில்
காலநதியின் சுழிப்பு இது

"எது நடக்குமோ அது நன்றாகவே நடக்கும்"


பு.சிந்துஜன்.



# இளைய நாதம்

# டொல்பின்கள்


டொல்பின்கள் திமிங்கில வரிசையில் பல்லுள்ள திமிங்கிலம் எனும் உள் வரிசையைச் சேர்ந்தவை. உலகம் முழுவதுமுள்ள வெப்ப, மித வெப்பக் கடல்களிலும் சில ஆறுகளிலும் காணப்படுபவை. இதைப்போன்ற உடலமைப்புள்ளதுதான் பார்ப்பாய்ஸ்கள். சிலர், இரண்டும் ஒன்றுதான் என்கிறார்கள். டொல்பின்கள் என்றும் கூறலாம். பார்ப்பாய்ஸ்கள் என்றும் கூறலாம் என்கிறார்கள். எனினும் தற்போது கொல்லும் திமிங்கிலம் உட்பட 36 இனங்களை இரு குடும்பங்கள் கொண்ட ஒரு பிரிவாகவும் ஆறு இனங்கள்கொண்ட பார்ப்பாய்ஸ்களை போகோயினிடே



(PHOCOENIDAE) என்ற ஒரு தனிக்குடும்பமாகவும் வகைப்படுத்தியுள்ளனர். டொல்பின்களில் பிளாட்டானிஸ்டே (PLATANIDAE) எனும் ஆற்று டொல்பின்கள், டெல்பினிடே (DEIPHINIDAE) எனும் ரியல் டொல்பின்கள் என்று இரு குடும்பங்கள் உள்ளன.

பொதுவாக டொல்பின்கள், கறுப்பு, பழுப்பு அல்லது சாம்பல் நிறத்தில் வெள்ளை அல்லது வெளிர்நிறக் குறிகளுடன் காணப்படும். இதன் தோலுக்கு அடியிலுள்ள கொழுப்புறை இதன் உடலை வெதுவெதுப்பாக வைத்துக்கொள்ள உதவுகிறது. நீருக்கடியில் இருப்பதற்கேற்றபடி இதன் உடல் அமைந்துள்ளது. உடலின் முன்பக்கத்தில் துடுப்புகள் போலிருப்பது உண்மையில் இதன் முன் கால்களே. இவற்றிற்குப் பின் கால்களும் இடுப்பெலும்பும் கிடையாது. உடல் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கு வால் உறுப்பு இந்த வால் உறுப்பு முனையில் கிடை மட்டத் துடுப்புப்போல் இரண்டாகப் பிரிந்திருக்கும் வாலுறுப்பும் முதுகுத் துடுப்பும் அடர்த்தியான இணைப்புத் திசுக்களினாலானது. எலும்புகள் கிடையாது.

ஐந்து வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடியுங்கள்...



மற்ற பாலூட்டிகள் போல் இது குட்டி போட்டு பாலூட்டும். இனத்திற்கேற்ப இதன் கர்ப்பகாலம் எட்டு முதல் 16 மாதங்கள் வரை இருக்கும். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கொருமுறை குட்டி போடும். இதன் ஆயுட்காலம் 25 ஆண்டுகள்.

டொல்பின்களுக்கிடையே ஒற்றுமையும் அதிகம்; அறிவுத்திறனும் அதிகம். ஏதேனும் ஒரு டொல்பின் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது காயப்பட்டாலோ மற்ற டொல்பின்கள் அது மூழ்காமலிருக்கத் தாங்கிப் பிடித்துக்கொள்ளும். அதேபோல் பெண் டொல்பின் குட்டி போடும் போது மற்ற பல பெண் டொல்பின்கள் அதைச் சுற்றிப் பாதுகாக்கின்றன. பிறந்த குட்டியை முதல் சுவாசம் செய்ய நீர்ப் பரப்பிற்கு மேல்கொண்டு செல்லுகின்றன. இதன் உணவு மீன்களும், கணவாய மீன்களும். கூட்டமாகச் செல்லும் இரையை தப்ப விடாமல் டொல்பின்கள் கூட்டம் சுற்றி வளைத்துக் கொள்ளும். பின்னர் ஒவ்வொன்றாக இரையின் மீது பாய்ந்து பிடித்துண்ணும். கடலோரங்களில் வாழ்பவை மீன்களை கரையோரமாக விரட்டிச்சென்று அவை சிதறி ஓடும்போது பிடித்துண்ணும்.

இவை ஒன்றோடொன்று 'விசில் ஒலி' 'கிரீச்சொலி' 'கிளிக் ஒலி' என்று பலவித ஒலிகள் மூலம் பேசிக்கொள்ளுகின்றன. இந்த ஒலி குரல் வளை மூலமும் தொண்டைக்கும் ஊது புழைக்கும் தொடர்புண்டாக்கும் நாசித் துவாரக் குழல் மூலம் உண்டாக்கப்படுகிறது என்று கருதப்படுகிறது. கிளிக் ஒலி சோனார் எனும் கருவிபோல் செயல்படுகிறது. அதாவது ஒலி ஒரு பொருளில் பட்டு எதிரொலித்து வருவதைக் கொண்டு அப்பொருள் இருக்குமிடம் தூரத்தைத் தெரிந்துகொள்ளுகிறது. இந்த ஒலி 7000 முதல் 15000 ஹேர்ட்ஸ் (அதிர்வலைகள்) கொண்டது. அதே போல் 20000 அதிர்வலைக்கு மேற்பட்ட கேளா ஒலியையும் இதனால் எழுப்பமுடியும். டொல்பின்களினாலும் பார்ப்பாய்ஸ்களும் 7000 முதல் 120000 அதிர்வலைகள் கொண்ட ஒலிவரை எழுப்புகிறது.

## சொற்சிலம்பம் - 83

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண | ப் | க் | சி | ன் | லை | தீ |
| டு | கு | நீ | பா | ந் | மி | ங் |
| தி | லா | தி | கோ | னி | ணி | ல் |
| து | அ | பி | ரி | டோ | சீ | ச் |
| மே | ட் | தா | ஷ் | ர் | ரி | றி |
| நை | ப் | யா | சா | ஸ் | ரு | ம |
| இ | ல் | ரே | ஓ | கி | த் | வி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -81 இன் விடைகள்

01. அகராதி

02. அவுஸ்திரேலியா

## சொற்சிலம்பம் - 81 இன் பரிசுக்குரியவர்

ந.சிந்துஜன்,
இல:12,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 81 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. இ.சஜிதன்,
புளியங்குளம்,
வவுனியா.

02. S.சுஜிதா,
உதயநகர்
கிளிநொச்சி.

03. வ.ஹேமலதா,
தண்ணீரூற்று,
முள்ளியவளை.

04. து.சாயினி
உடையார்கட்டு,
புதுக்குடியிருப்பு.

05. தனுசன்,
கணேசபுரம்,
கிளிநொச்சி.

06. S.சஞ்சயன்,
முருங்கன்,
மன்னார்.

07. சி.சதுசர்,
புளியங்குளம்,
கிளிநொச்சி.

08. கஜீபன்,
அரசடிவீதி,
நல்லூர்.

01. இலங்கையின் மிக உயரமான அணைக்கட்டின் பெயர்?

01) ..................................

02. முதலாவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடைபெற்ற இடம்?

01) ..................................

பெயர் :- ..................................

முகவரி :- ..................................

சொற்சிலம்பம்-83
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## ஓட்டப்பந்தயம்...

### பகுதி-01



# வீடு

# சிந்தனையே சாதனை

சிந்தனை இல்லாவிட்டால் செயல் பிறக்காது. ஆகவே எந்த வழியில் சிந்தனை செய்தால் வாழ்க்கையில் முன்னேறி வெற்றி பெற்று சாதனை படைக்கலாம் என்பதை பார்ப்போம். வெற்றி என்ற இலக்கை நோக்கி நாம் செல்ல வேண்டுமானால் சிந்தித்து செயற்பட வேண்டும். எமது சிந்தனை என்னால் எதையும் செய்ய முடியும் என்ற நோக்கோடு இருக்க வேண்டும். அத்தோடு நல்ல சிந்தனைகளாகவும் இருக்க வேண்டும். எம்மால் முடியாது என்ற எண்ணம் இருக்கவே கூடாது.



அன்பால் உலகத்தை வென்றுவிட முடியும் என்று வாழ்ந்த இயேசு உலகத்தை வென்றுவிட வில்லையா? அகிம்சையால் சுதந்திரம் பெற்றுவிட இயலும் என்று எண்ணிய காந்திஜி அதனைப் பெற்றுவிட வில்லையா? எதையும் முடியும் என்று எண்ணினார்கள் வெற்றி யடைந்துவிட்டார்கள். முடியாது என்பது என்னுடைய அகராதியில் இல்லை என்று நெப்போலியன் கூறியுள்ளார். அது போல நாங்களும் எம்முடைய சிந்தனையில் முடியாது என்ற சொல்லை பதிக்கவே கூடாது. நாம் ஒரு சாதனையைச் செய்ய வேண்டுமானால் அந்த இலக்கை நோக்கி எமது சிந்தனை செல்ல வேண்டும். உதாரணமாக ரயில் புறப்பட்டவுடனேயே முழு வேகத்துடன் கிளம்பி விடுகிறதா? இல்லையே. ஆரம்பத்தில் நிதானமாகச் சென்று முழுச்சக்திகளையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டல்லவா வேகத்துடன் செல்கிறது. எனவே நெஞ்சில் உறுதியும், உழைப்பில் பலமும் செய்யும் காரியத்தில் துணிச்சலும் இருந்தால் கட்டாயம் நாம் வெற்றியடைந்தே தீருவோம்.

மிகவும் சிறிய விதை பெரிய ஆலமரமாக வளர்ந்து விழுதுகளை விட்டு அகன்ற தோப்பாக உருவாகி விடுவதைப் போல முடியும் என்ற சிந்தனையை விதைத்து வெற்றி என்ற சாதனையைப் பெறலாமல்லவா? இன்றைய யுகத்தில் துன்பம்தான் அதிகமாக மனிதர்களை ஆட்கொண்டு வருகிறது. இதனால் ஒவ்வொருவரினதும் சிந்தனைகள், ஆற்றல்கள் எல்லாம் சிதைந்து போகின்றன. எமது சிந்தனைகளை, ஆற்றல்களை சிதைத்துக்கொண்டிருந்தால் வாழ்க்கையில் நாம் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியுமா? இல்லை ஒவ்வொருநாளும் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டே இருக்க வேண்டும். ஏன் நாம் எமது வாழ்க்கையை சீர்குலைக்க வேண்டும். மன உறுதியோடு வாழ்ந்திடலாமல்லவா?

உறுதிதான் நம்மை நன்றாக வாழும்படி செய்யும். ஜன்னலின் வழியே வருங்காலத்தை மகிழ்ச்சி நிரம்பிய கண்களுடன் பார்க்க முடியும்.

எனவே நாம் நல்ல சிந்தனைகளை வளர்த்து சாதனைகள் பல செய்திட வேண்டும். எப்படியும் வாழலாம் என்று வாழக்கூடாது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ வேண்டும். யாரையுமே நம்பி நடவாதீர்கள். உங்கள் சொந்தக் காலாலேயே நடவுங்கள். உங்களுக்கு என்றொரு சிந்தனையை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் படி நடந்து சாதனை செய்யுங்கள். "மனித இனத்தின் இதயத்தில் இருந்து" "சிந்தனையை" இறைவன் எடுத்து விட்டிருப்பாரானால் மனித இனத்தின் வரலாறு தற்போது உள்ளது போன்று இருக்காது எப்படி இருக்கும் என்று அதையும் சிந்தித்துப் பாருங்கள்.

சிந்தனை எம்மை இரும்பு மனிதனாக்கும் பொழுது ஐயம் எம்மைக் கோழையாக ஆக்கி சாதனையை சீர்குலைத்து விடுகிறது. அத்துடன் தோல்விப் படுகுழிக்கு இழுத்துச் செல்கிறது. எனவே எம்முடைய சிந்தனையை நாமும் அரண் செய்து வைத்து ஐயம் எனும் வெடிகுண்டு விழாமல் செய்து சாதனை புரிந்திட வேண்டும்.

நாம் எவ்வளவுதான் மனத்தை வன்மையுடையதாகவும் நம்பிக்கையுடையதாகவும் சிந்தனையுடையதாகவும் ஆக்கிவைத்திருந்த போதிலும் சிறு சிறு துன்பங்கள் வந்து மனச்சோர்வு ஏற்படுகிறது. உங்களுக்கு வரும் தோல்விகள் துன்பங்கள் அவை நீடிப்பதில்லை. இப்பொழுது இருக்கும் நிலை எதிர்காலத்தில் இருக்காது. ஏழை கோடீஸ்வரனா கலாம், குற்றவாளி வணக்கத்துக் குரிய சாமியாராகலாம். ஊனமுற்ற வன் ஒலிம்பிக்கில் வெல்லலாம். எனவே இப்போ வரும் துன்பங்களை எண்ணி சிந்தை கலங்காதீர்கள். எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடுங்கள்.

துன்பங்கள் வந்தபோதிலும் "எல்லாம் நன்மைக்கே" என்று நினைத்தாலும் கூட மனச் சோர்வு ஏற்படுகிறது. அதன் பின் நமக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும், உறுதியையும் சிந்தனை ஆற்றல்களையும் பெற பெரும்பாடாக இருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம் என்று பார்ப்போம். நீண்டதூரம் பயணம் செல்லும் போது இடையில் சில இடங்களில் நின்று விட்டு மீண்டும் புறப்பட்டுச் செல்லுவோம். பயணம் பாதியில் நின்று விடாமல் இருக்க தொடர்ந்து சென்று கொண்டே இருப்போம். வாழ்க்கை வாழ்வதற்கு. வாழாது இடையில் மடிவதா? வேண்டாம் வாழ்க்கைப் பயணத்தை வாழ்ந்து முடிப்போம்.

**த.சந்திரப்பிரியா**

# குடும்பம் தழைத்தெழுவதற்கு நன்மனதோடு செயல்படுங்கள்

இன்று எந்தவொரு நாட்டிலும் பிரச்சினைகள் ஏற்படக் காரணம் பொருளாதாரம். இதனால்தான் பல நாடுகளிடையில் யுத்தங்கள் நடைபெற்று பேரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதே போன்றதுதான் குடும்பம். இந்தக் குடும்பத்தைச் சேர்த்துப் பார்க்கும்போது, தாய் தந்தைகளின் சம்மதப்படி தங்களுடைய திருமணத்துக்கு ஒத்துக்கொண்டு இருவரும் நன்மனதோடு திருமணம் செய்யும்போது இருவரும் ஏதோ ஒருவகையில் நாங்கள் சம்பாதிக்கும் பணம் நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் காணும் என்ற நம்பிக்கையுடன் புது வீடு செல்கின்றனர்.

திருமணம் நடந்து ஓரிரு வருடங்கள் சம்பாதிக்கும் பணம் அல்லது வீட்டுப் பொருட்கள் வாங்குவது எல்லாமே நல்ல முறையில் நடந்து வருகையில், ஏதோ ஒரு வகையில் கஷ்டம் ஏற்படும் போது அயல் குடும்பம் எப்படி இருந்தது இப்பொழுது இப்படி வளர்ந்திருக்கின்றது என்றெல்லாம் சிந்திக்கும் போது நாமே நமக்கு புதை குழி தோண்டுகின்றோம். இப்படி எமது மனநிலையை வைத்திருக்கும் போது எதை எடுத்தாலும் எதைத் தொட்டாலும் மனதுக்குள் ஒரு சோர்வு, விரக்தி, கணவன், மனைவிக்கிடையில் ஏற்படும் வெறுப்பு புரிதலை பிரித்துக் காட்டுகின்றது. குடும்பங்களுக்கிடையில் அதாவது "என்னுடைய கணவர் உழைக்கின்றார் இல்லை மற்றவர்கள் எவ்வாறு உழைக்கின்றார்கள்" என்ற மனநிலை புரிதல் விடுபட்டு குடும்பம் சீர்குலைகின்றது.



ஆகவே கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் சண்டை அவர்களுடைய பிள்ளைகளைப் பாதிக்கின்றது. அவர்களுடைய அடிப்படைக் கல்வி, நான் எப்படி வளர வேண்டும் என்ற அந்தப் பிள்ளைகளின் தன்னம்பிக்கை, ஆசை, சுயமுயற்சி என்னும் போது அவர்களின் எதிர்காலமே குடும்பத்தால் முடக்கப்படுகின்றது.

எனவே இருவர்களுக்கும் இடையில் புரிந்துணர்வு வளர்ந்தோங்க வேண்டும். பிழைகளைக் கண்டுபிடித்து அதற்கேற்றவகையில் புரிதலோடு வழிநடாத்திச் செல்பவர்களே உண்மையில் வீட்டுத் தலைவன், தலைவி என்ற தகைமையைப் பெறமுடியும். "பூமரத்தில் பூக்கும் பூக்கள் வாடி விழுகின்றனவல்லவா. அதைக்கண்டு பூமரம் சோர்ந்து போகவில்லை. அது மீண்டும் பூக்கத்தவறவில்லை" பூமரத்திலிருந்து வாடி விழும் பூக்கள் மரத்துக்குத்தான் உரமாகின்றன. அதே போன்றதுதான் எமது பிழைகள். அந்தப் பிழைகளை எமக்கே உரமாக்க வேண்டியது எமது திறமை. அதைக்கண்டு துவண்டு போகாமல் தழைத்தெழுந்தால் குடும்பம் கோயிலாக மாறும். குடும்பத்துக்கு வசந்தகாலம் பிறந்து வளமான வாழ்வுக்கு வழிகோலும் என்பது திண்ணம்.

**மு.கவிதரன்**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## பழக்கலவைப் பானம்




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| தோடம்பழச்சாறு | -1மேசைக்கரண்டி |
| பசன் பழச்சாறு | -1மேசைக்கரண்டி |
| எலுமிச்சம்பழச்சாறு | -2தேக்கரண்டி |
| அன்னாசிப்பழத் துருவல் | -1மேசைக்கரண்டி |
| சீனி | -1மேசைக்கரண்டி |
| தண்ணீர் | -2 தம்ளர் |
| றோஸ் எசென்ஸ் | -1தேக்கரண்டி |
| உப்புநீர் | -1தேக்கரண்டி |

செய்முறை:-

* கொதித்தாறிய நீரில் சீனியைச் சேர்த்துக் கரைத்து வடித்துக் கொள்ளவும்.
* அந்நீருடன் தோடம்பழம், பசன்பழம், எலுமிச்சம் பழம் பழச்சாறுகளையும், உப்பு, றோஸ், எசென்ஸ், அன்னாசிப்பழத்துருவல் யாவற்றையும் சேர்க்கவும்.
* குளிரூட்டியில் வைத்து அல்லது ஐஸ்கட்டிகளைச் சேர்த்துப் பரிமாறிக்கொள்க.
* அன்னாசிப்பழத் துருவலுக்குப் பதிலாக அப்பிள் பழத் துருவலையும் சேர்த்துக் கொள்ளலாம்.

## பயனுள்ள வீட்டுக் குறிப்புகள்

வல்லாரைக் கீரை மூளையிலுள்ள செல்களை ஊக்குவித்து ஞாபக சக்தியை அதிகமாக்குகிறது. ஆனால், அளவோடு உண்ணவும். அதிகமானால் தலைசுற்றல், மயக்கம் ஏற்படும்.

* * *

அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் ஜலதோசத் தொல்லை குறையும்.

* * *

வயிற்றுவலி, அஜீரணம் என்றால் ஒரு வெற்றிலையுடன் கொஞ்சம் சீரகம், ஓமம், உப்பு சேர்த்து நன்றாக மென்று சாப்பிடுங்கள். வலி சரியாகிவிடும். வயிறு லேசாகும்.

* * *

அஜீரணம், வயிற்றெரிச்சலுக்கு புளிக்காத தயிர் சிறந்த மருந்து. அவ்வப்போது சிறிது தயிர் குடித்தாலே வயிறு இதமாகும்.




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம் — 44

பெயர்:......................................................

முகவரி:......................................................

......................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.





# கல்வெட்டுக்கள்

மனிதர்கள் சமுதாயமாக வாழத் தொடங்கிய போது சிலவற்றைப் பதிவு செய்யத் தொடங்கினர். தாங்கள் வாழ்ந்த குகைகளில் உருவங்களைத் தீட்டியும், கீறியும் தம் எண்ண ஓட்டங்களைப் பதிவு செய்தனர். இத்தகைய பதிவுகளின் வளர்ச்சியே எழுத்தின் தோற்றத்திற்கான அடிப்படையாக அமைந்தது.

எழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்த நிலையில் ஆவணங்கள் உருவாக்கப்பட்டன. மண் கல ஓடுகளிலும், மலைக் குகைகளிலும் காணப்படும் எழுத்துப் பொறிப்புகள் விழுக்காட்டிற்கு மேற்பட்டவை தமிழ் ஆவணங்களே என்பது குறிக்கத்தக்கதாகும்.

இத்தகைய ஆவணங்களில் கல்வெட்டுகள் காலத்தை வென்று வாழும் இலக்கியங்கள் என்று கூறினால் மிகையாகாது. கோயில்கள், சுற்றுச்சுவர்கள், பொதுமண்டபங்கள், மதகுகள், மலைக் குகைகள் போன்றவற்றில் இவை பொறிக்கப்பட்டன.

மன்னர்களும், அவர்தம் குடும்பத்தினரும், அதிகாரிகளும் வெட்டுவித்த செய்திகள் அவர்கள் வாழ்ந்த காலச் செய்திகளை



Cave Inscriptions of Tamilnadu (Brahmi) Arittapatti

வெளிப்படுத்துபவையாகும். தமிழர்களின் வரலாற்றை எழுதுவதில் கல்வெட்டுச் செய்திகள் முக்கிய பங்கு இவற்றுள் 60,000 கல்வெட்டுக்கள் தமிழ்க் கல்வெட்டுக்களாகும்.

கி.மு.5ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை உள்ள கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கல்வெட்டுக்களின் பெருந் தொகையைக் கண்ட ஆங்கிலேய அரசு சென்னையில் தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவைத் தொடக்கியது. பிறகு உதகமண்டலத்திற்கு மாற்றப்பட்டு, பிறகு 1966ஆம் ஆண்டில் மைசூருக்கு மாற்றப்பட்டு விட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட 60 ஆயிரம் கல்வெட்டுக்களில் சுமார் 10 ஆயிரம் கல்வெட்டுக்களே பதிப்பிக்கப்பட்டு வெளிச்சத்திற்கு வந்துள்ளன. எஞ்சிய 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் பதிக்கப்படாமல் இருட்டுக்குள்ளேயே கிடக்கின்றன. ஆனால் பிற்காலத்து பிறமொழிக் கல்வெட்டுக்கள் யாவும் பதிக்கப்பட்டுவிட்டன.

காலத்தால் முந்திய "தமிழ்" கல்வெட்டுக்கள் பண்டையத் தமிழன் வரலாற்று உண்மைகளை உள்ளடக்கியவையாகும். அவை வெளிவருமாயின் தமிழரது

பண்டைய வரலாற்றினை வெளிப்படுத்தும் சிறந்த தொடக்க கால ஆவணங்களாகும். தொன்மையான இப்பதிவு காலப்போக்கில் வளர்ச்சியடைந்து ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் எனப் பலவகையிலும் பெருகின. இந்தியாவில் இதுவரை கிடைத்த இத்தகைய ஆவணங்களில் 75 வகித்துள்ளன. ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில் தொல்லியல் துறை தொடங்கப்பட்டு கல் வெட்டுக்களைத் தேடிக் கண்டு பிடிக்கவும், படி எடுக்கவுமான பணி ஆரம்பமாயிற்று.

இந்தியா முழுவதும் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத்தாண்டும். தொன்மை நிலைநாட்டப்படும் என்ற காரணத்தினால் வெளியிடப்படாமல் திட்டமிட்டு முடக்கப்பட்டுள்ளன. மேலும் ஆண்டு தோறும் 300-400 புதிய கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுத் தமிழ் கல்வெட்டுக்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது.

குரலோன்

# மனிதாபிமானம்

மனித குலம் நேற்றிலிருந்து இன்றுவரை முன்னேறிக்கொண்டிருக்கின்றது. இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. மிருக வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கையைத் தாண்டி ஒரு தெய்வீக வாழ்க்கையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றான் மனிதன். மனிதன் எப்பொழுது முழு மனிதனாக மாறுகின்றானோ அது தெய்வீக வாழ்க்கை ஆகின்றது.

முழு மனிதன் என்பவன் சமூகத்திற்கான தன்னாலான செயல் திறன்களைச் செய்துகொண்டிருப்பவனாக இருந்துவருகின்றான். மனித குல நலனுக்காக ராட்சத குணத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொடுப்பதற்காக மனிதன் மனிதனாக மாறவேண்டும். எம் பிரதேசங்களில் மனிதாபிமானம் எந்த அளவு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை யதார்த்தமாக நோக்கினால்,

"அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி. முகமாலை பஸ் நிலையத்தில் பரபரப்பு, முல்லைத்தீவு போகலாம் அம்மா வாங்கோ... ஐயா வாங்கோ... அன்ரி வாங்கோ... கந்தபுரம், மல்லாவி போறாக்கள் அந்த பஸ்சில போய் ஏறுங்கோ..., அக்கா பஸ்சுக்கு முந்திப் போயிரலாம் இதில வந்து ஏறுங்கோ...

இப்படிப் பல கோணத்திலிருந்தும் பல்வேறு ஒலிகள் காதுகளை வந்து சுகம் கேட்டுச்செல்லும். ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்த ஒரு வயதான அம்மா "மாங்குளம் போகவேணும் எங்கபோய் ஏறுறது தம்பி?... அம்மா அந்த புதுக்குடியிருப்பு பஸ்சில ஏறுங்கோ அதில போனால் புதுக்குடியிருப்பில இருந்து புளியம்குளம் போற பஸ்சில ஏத்தி விடுறன். நீங்கள் மாங்குளத்தில இறங்கலாம்.

இப்படி பஸ் நடத்துநர் கூறி அம்மாவை கூட்டிக்கொண்டுபோய் புதுக்குடியிருப்பு பஸ்சில் ஏற்றிவிட்டு திரும்பிவந்து அவருடைய அதே பாணியில் பயணிகளை பஸ்சுக்கு சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இங்குதான் மனிதாபிமானம் தலைவிரித்தாடுகிறது. "தவிச்ச முயல் அடிப்பதுபோல" அந்தரித்து வந்த அந்த அம்மாவுக்கு நேர் வழிப் பாதையைக் காட்டிவிடும் அளவுக்கு அந்த நடத்துநருக்கு மனம் இல்லை. அவருடைய நோக்கம் பணம் சேர்ப்பதுதான். சேவையல்ல. மக்களின் நலனில் எந்தவித அக்கறை கூட இல்லை.

நடத்துநரின் செயலையும், அம்மா போய் இருந்த பஸ்சையும் உற்று நோக்கிக்கொண்டிருந்த பயணியான பெண் போராளி அம்மாவை நோக்கிச் சென்று விசாரித்தபோது அம்மா மாங்குளம் போகிறவா என்பது தெரிந்து அவர் மாங்குளம் ஊடாக மல்லாவி போகிற பஸ்சில் ஏற்றிவிட்டிட்டு "அம்மா புதுக்குடியிருப்பால போறது நேரமும் விரயம், பணமும் செலவு நீங்கள் மாங்குளம் போய் உடன் திரும்பி யாழ் செல்லமுடியாது என்ற விளக்கத்தைச்சொல்லி விட்டு தான்போகும் பஸ்சில் அப் போராளி போய் ஏறிவிட்டார்.

இதைச் சொல்ல வந்தது, மனிதாபிமானம் எங்குள்ளது என்பதை தெரியப்படுத்துவதற்காகவே. பஸ் நிலையத்தில் நின்றால் அல்லது பஸ்சில் பயணம் செய்தால் பல மனிதர்களின் மிருகக்குணங்கள் புலப்படும். இப்படியான செயல்களை மக்கள் சீற்றத்துடன் கவனிக்கிறார்கள். ஆனால் "யதார்த்தவாதி வெகுசன விரோதி" ஆயிற்றே.

ஒரு சமூகத்தை இயக்கி அந்த சமூகத்தை நாளைய சமூகமாக நகர்த்துகின்ற ஒரு மாபெரும் பொறுப்பு இன்றைய இளையவர்களிடம் காத்து நிற்கின்றபோது ஏமாற்றல், சுரண்டல் போன்ற குணங்கள் இவர்களைக் குடிகொண்டிருந்தால் சமூகத்தை உருவாக்குவது எப்படி? மொத்தத்தில் மொழிகள், பழக்கவழக்கங்கள், வாழ்முறைகள், மரபுகள், வரலாறுகள் எல்லாவற்றிற்கும் அப்பால் மனித நேயத்தையும், அது என்றும் மாயாமல் காப்பாற்றப்படவேண்டும் என்ற அக்கறை பரிணமிக்கவேண்டும். மனித மதிப்பீடுகள் சரிந்து விழுந்திடாமல் பாதுகாக்கவேண்டும். சமூகத்தைச் சுரண்டி வாழ்பவர்களை "களை" எடுக்கவேண்டிய கடமை சமூகத்திலுள்ள அனைவரிடமே உள்ளது.

அகவிழி

அலை கிழித்து தொடர்ந்து குமுதினி தொடர்ந்து நகரவில்லை. அப்படியே அசைந்து அசைந்து நடுக்கடலில் நின்றது. நடந்தது என்னவாக இருக்கும்.

குமுதினியின் சுக்கான் கழன்று விட்டதே அது நடுக்கடலில் நகராமைக்குக் காரணம் ஆகும். படகுப்பணியாளர்கள் ஆராய்ந்து அந்தப் பிழையைக் கண்டுபிடித்தனர். நடுக்கடலில் இருந்து கடற்படைக்கு அவர்கள் சைகை காட்டினர். அதன் பின் சிறிலங்கா கடற்படைப் படகு ஒன்று அப்பகுதிக்கு வந்து குமுதினியை கரைக்கு இழுத்துச் சென்றது. மீளவும் குமுதினி கடற்படை வசம் சென்று விட்டது. கடற்படையினர் கடலில் வைத்து சுக்கானை பொருத்தியிருக்கின்றனர். அதனால் சுக்கான் ஒழுங்காகப் பொருத்தப்படவில்லை.இப்பொழுது மீளவும் பல நாட்கள் குமுதினி கடற்படை வசம் இருந்தது. பிறகொரு நாள் குமுதினியைப் பொறுப்பெடுக்கு



# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

மாறு கடற்படை அறிவித்தது. மீளவும் குமுதினி பொறுப்பேற்கப்பட்டது. இதன் பின் குமுதினி ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்லப்பட்டு யாழ்ப் பாணம் புரோமோட்டஸ் நிறுவனத்தால் அதற்கு காப்புச் செப்புத்தகடு அடிக்கப்பட்டது. அதாவது குமுதினியின் கடலில் மூழ்கும் பகுதியில் நீர் உட்புகாமல் கடல்புழுக்கள் அதன் மரத்தை அரிக்காமல் அடிப்பது இந்த செப்புத்தகடு. மற்றப்படகுகளில் இதற்கு குங்கிலியம் சிமெந்து பூசுவார்கள். அதை காறை என்பார்கள். இந்திய இழுவைப்படகுகளில் பைபர்கிளாஸ் பூசுவார்கள். இது வேறு படகுத்தொழில்நுட்பம். புரோமோட்டஸ் செப்புத்தகடு அடித்தபின்னர் குமுதினிக்கு வண்ணமாற்றம் செய்யபப்பட்டது.

அப்போது குமுதினிக்கு சிறிலங்கா கடற்படை படகுகளின் கடும் நீல வண்ணமே இருந்தது. அந்த வண்ணம் மாற்றப்பட்டு வெள்ளை வண்ணம் அதற்கு பூசப்பட்டது. வெள்ளை கடலில் அது மக்கள் படகு என்பதை தெளிவாகக் காட்டுவதற்காகும்.1990இல் சிறிலங்கா கடற்படை குமுதினி கைப்பற்றப்படுகையில் அது வெளிர்நீல நிறத்தைக் கொண்டிருந்தது.1998இல் மீளவும் குமுதினி நெடுந்தீவுக்கான பயணத்தை ஆரம்பித்தது. அப்போது குறிகாட்டுவான் துறை கடற்போக்குவரவுக்கு சிறிலங்கா கடற்படையால் தடை செய்யப்பட்டிருந்தது. இதற்குக் காரணம். குறிகாட்டுவானில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல புங்குடுதீவு வழியாகவே செல்ல வேண்டும். அப்போது புங்குடுதீவு முழுதாக சிறிலங்கா கடற்படையிடம் இருக்க வில்லை. அது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருப்பதாகவும் மக்கள் அங்கு சென்றால் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டு விடுவர் என்று குறிகாட்டுவான் இறங்குதுறையை போக்குவரவுக்கு தடை செய்த சிறிலங்கா படையினர் சகல போக்குவரவுகளையும் ஊர்காவற்றுறை இறங்குதுறைக்கு மாற்றினர்.

1996முதல் இதனை படையினர் நடைமுறைப்படுத்தினர்.

இதனால் மக்கள் ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்தே யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருந்தது. அப்போது குமுதினி நெடுந்தீவுக்கு பயணிகளை கொண்டு சென்று விட்டு மாலை வேளையில் அது நயினாதீவு கடற்படை இறங்கு துறையில் நிறுத்தப்படவேண்டும் என கடற்படையினால் கட்டளையிடப்பட்டது. அதன்படி மாலையில் அது நயினாதீவு சென்று காலையில் 7 மணிக்கு முன்பாக நெடுந்தீவு மாவலித்துறைக்குச் சென்று திரும்ப பயணிகளுடன் ஊர்காவற்றுறைக்கு திரும்பும் இடர் பயணத்தை மேற்கொண்டது. இதேவேளை நெடுந்தீவு மாவலித்துறை ஈபிடிபி தேச விரோத சக்திகளின் பிடியில் இருந்தது.

இவர்கள் மாவலித்துறையை சூழ தமது நிலைகளை அமைத்திருந்தனர். அதனால் மாவலி இறங்குதுறையை மக்கள் பயன்படுத்த ஈபிடிபியினர் தடைவிதித்தனர்.இதனால் மக்கள் இறங்கு துறைக்குச் செல்லமுடியாமல் இறங்குதுறையின் வெளிப்புறச்சுவரின் வழியாக கரடுமுரடு முருகைக்கல்மதில் மீது ஏறி நடந்து ஆற்றுக்கட்டை எனப்படும் இறங்கு துறை நுழைவாயிலுக்குச் சென்றே குமுதினியில் அல்லது போக்குவரவுப் படகில் ஏறவேண்டும்.ஒரு பக்கம் அலையெறியும் ஆழக்கடல் மறுபக்கம் இறங்குதுறைமுகம்.இதற்கு நடுவிலான சுவரில் ஏறியே மக்கள் படகில் ஏறிப்பயணிக்கவேண்டும்.இந்த இடர்பயணம் ஆண்டுக்கணக்கில் 1996 முதல் மக்களால் அனுபவிக்கப்பட்டது.

இடையில் குமுதினி பழுதடைந்து இறங்குதுறையில் தரித்து நின்றது. அவ்வேளை குமுதினி ஈபிடிபியினரால் பிடிக்கப்படுவோர் அடைத்து வைக்கும் வதைமுகாமாக இருந்தது. இறங்குதுறையில் குமுதினி கடல்நீரின் நடுவில் நின்றது. அதனால் அதனுள் அடைத்துவைக்கப்படுவோர் அதிலிருந்து தப்பமுடியாது. இதனால் அங்கு ஈபிடிபியால் பிடிக்கப்படுவோர் அடைத்து வைக்கப்பட்டனர்.அவர்கள் அதனுள் வதைக்கப்பட்டனர். அவ்வாறு வதைபடுவோர் எழுப்பும் அவல ஒலி குமுதினியையும் தாண்டி மாவலித்துறையிலும் பெரும் கடலிலும் எதிரொலிக்கும்.அப்படி ஒரு வதைமுகாமாகவும் குமுதினி வரலாறில் இயங்கியது. இந்த ஈபிடிபியின் வதைகளுக்கு முற்றுப்புள்ளிவைக்கும் ஒரு நாள் அந்தத் தீவில் வந்தது.

துருவன்

# நாட்டுக்கூத்துத்துறை சற்றுத் தளர்வாக உள்ளது

எமது பாரம்பரிய கலைவடிவங்களான நாட்டுக் கூத்துக் கலையினை பேணி பாதுகாப்பதுடன் தொடர்ந்து செயற்படுத்தி வருபவர்களில் கரையோரக் கிராம மக்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். தொடர்ந்தும் பங்காற்றி வருகின்றனர். ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் வடக்கு திசையாகவுள்ள தம்பாட்டி என்ற கிராமம் தென்மோடி சிந்து நடை கூத்திற்கு தனி இடத்தை பெற்றுள்ளதுடன் பல முன்னணி கலைஞர்களையும் தன்னகத்தே கொண்டது. சிறுவயது முதல் கூத்துக் கலையுடன் ஈடுபட்டு வரும் அண்ணாவியார் நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை மூத்த அண்ணாவிமார்களில்

கூத்துக்களை நெறியாள்கை செய்து எமது கலைஞர்களைக் கொண்டே மேடை யேற்றியுள்ளேன். பண்டாரவன்னியன். இராஜராஜ சோழன், அரியேந்திரன் போன்ற தென் மோடிக் கூத்துக்கள் எம் ஊரிற்கும் கலைஞர்களிற்கும் பெருமை சேர்த்தவை என்றே கூற வேண்டும்.

இக் கூத்துக்கலையை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இராமச்சந்திரன், சுந்தரலிங்கம், சந்திரன், தேவா போன்ற பல கலைஞர்களை உருவாக்கியுள்ளேன். இனி வரும் காலங்களில் இவர்களது

சிந்து நடையுடன் ஒன்றித்து காத்தான் என்றால் அது தம்பாட்டிக் கலைஞர்களது காத்தான் தான் என்ற பெயர் தீவகப் பகுதியிலும் யாழ்ப்பாணத்தில் சில இடங்களிலும் உள்ளது. காத்தவராயன் சிந்து நடைக் கூத்தை நெறியாள்கை செய்து தானும் பாத்திரமேற்று நடித்துவரும் இளம் கலைஞர் தேவா இத்துறையில் ஆளுமையுள்ள கலைஞராகவுள்ளார். இவரது சகோதரர்களும் கூத்துக் கலையில் ஒன்றித்துச் செயற்படுகிறார்கள் என்பதையும் இந்த இடத்தில் கூற வேண்டும்.

சாரும். ஆனால் அண்மைக்காலமாக நாட்டுக் கூத்துத்துறை சற்றுத் தளர்வான போக்கிலேயே உள்ளது. இதற்கு இடப்பெயர்வும் கலைஞர்கள் தொழில் வாய்ப்புகளிற்காக சிதறி வாழும் தன்மையும் காரணமாகலாம் இருந்த போதிலும் இளம் தலைமுறையின் அக்கறையீனமும், வெளிநாட்டு மோகமும் காரணங்களாகவுள்ளன. எங்கட கலையை நாங்கள் தான் வளர்க்கவேணும். இக் கலைவடிவங்களை அழியவிடக் கூடாதென எமது அயல் கிராமக் கலைஞர்களுடன் பலமுறை கதைத்துள்ளேன். எம் அயல்

ஒன்றித்த ஏனைய கிராமங்களும் இக் கலையை அழியவிடாது பேணிப் பாதுகாப்பதுடன் அவற்றை ஆவணமாக்கும் முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் தொடர்ச்சியான ஆற்றுகை களையும் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டுக் கூத்துக் கலை தொடர்பாக அண்ணாவியார். கலாபூசணம் நாகலிங்கம்-தாமோதரம் பிள்ளையிடம் அவரது அனுபவங்களையும், கருத்துக்களையும் பெற்ற நிலையில் செவ்வியை நிறைவு செய்தோம். தாமோதரம்பிள்ளை அண்ணாவியார் தனியே நாட்டுக் கூத்துத் துறையுடன் நின்றுவிட வில்லை. சமூக வளர்ச்சியில்

தற்பொழுதும் இயங்கிக் கொண்டிருப்பவர் தாமோதரம் பிள்ளை.

சமய, சமூக விளையாட்டுத் துறையில் பூரண ஈடுபாடுடைய அண்ணாவிமார் கலாபூசணம் மரபுக் கலைச்சுடர், ஆடல் கலைஞர் என கலைத் துறைக்காற்றிய சேவைக்காகப் பெற்ற விருதாக பெருமையுடன் கூறுகிறார். தென் மோடி நாட்டுக் கூத்திலும், காத்த வராயன் சிந்து நடைக் கூத்திலும், காவடி, கரம் பாரம்பரிய ஆட்ட முறைகளையும் முறையாக பயின்று தமது கிராமத்தவர் களிற்குப் பயிற்றிவித்த பெருமைக் குரியவர்.

மூத்த பாரம்பரிய கலைஞரிடம் நாட்டுக் கூத்துக் கலை தொடர்பாகக் கருத்துக் கேட்டபொழுது எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களிற்காகத் தருகிறோம்.

என்னுடைய நாட்டுக் கூத்துப் பிரவேசம் ஒன்பது வயதில் கட்டியக் காரன் என்ற பாத்திரத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து இப்படியான சிறுசிறு பத்திரங்களில் நடிச்சனான். எங்கட ஊரிலுள்ள மூத்தவர்கள் தொடர்ந்து கூத்துக்களைப் பேண்றதால அவற்றின் இராக, தாளங்களைப் பிடிக்கக் கூடியதாக இருந்தது. கால மாற்றங்களினால் முழுமையான பாத்திரங்களில் நடித்ததுடன் நாட்டுக் கூத்துக்களையும் நெறியாள்கை செய்யத் தொடங்கினேன். இன்று வரை இப் பணியை மேற் கொண்டு வருகிறேன்.

தம்பாட்டி காந்திஜி நாடக மன்றத்தின் ஊடாக பல நாட்டுக்

வழிகாட்டுதல்களில்தான் தம்பாட்டிப் பகுதியில் கூத்துக்கலை முன்னெடுக்கப்படும் என்பது யதார்த்தமான உண்மை. சிறுவர்கள் முதல் அனைவருமே வயது வேறுபாடின்றி கூத்தை பயில்வதிலும், அவற்றை பார்த்து

காந்திஜி நாடக மன்றம் நாட்டுக் கூத்துப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றி பெருவெற்றி கண்டதுடன், சிறந்த கலைஞர்களிற்கான விருதுகளையும் பெற்றுள்ளனர். கல்லஞர்களைப் பொறுத்த

அண்மைக்காலமாக நாட்டுக் கூத்துத்துறை சற்றுத் தளர்வான போக்கிலேயேஉள்ளது. இதற்கு இடப்பெயர்வும் கலைஞர்கள் தொழில் வாய்ப்புகளிற்காக சிதறி வாழும் தன்மையும் காரணமாகலாம் இருந்தபோதிலும் இளம் தலைமுறையின் அக்கறையீனமும, வெளிநாட்டு மோகமும் காரணமாகவுள்ளது. எங்கட கலையை நாங்கள்தான் வளர்க்க வேணும்.



அண்ணாவியார் நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை

மகிழ்வதிலும் முன்னிற்பார்கள். இவர்களது இவ்வாறான ஒத்துழைப்பும் ஆதரவுமே எமது பகுதியில் கூத்துக்கலை வளர்வதற்கும் திறமையான கலைஞர்கள் வளர்வதற்கும் காரணங்களாகவுள்ளன.

காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் எமது பகுதி இளம் கலைஞர்கள் தனிச் சிறப்புப் பெற்றுள்ளனர் என்றே கூற வேண்டும். அந்தளவிற்கு

வரையில் ஒற்றுமையாக இருக்க வேணும் அதே நேரம் பணிவுள்ளவர்களாகவும் நல்ல பழக்கவழக்கமுடையவர்களாகவும் இருக்க வேண்டும். இவற்றை அநேகமான கலைஞர்களிடத்தே காணமுடிவதில்லை. நல்ல ஒழுக்க முடையவர்களாக இருந்தாலே தாமும் வளர்ந்தும் எமது கலையையும் தூய்மையாக வளர்க்கமுடியும்.

கூத்துக் கலையை வளர்த்த பெருமை பெரும்பாலும் கரையோரக் கிராமத்தவர்களையே

கிராமமான நாரந்தனை நாட்டுக் கூத்துக் கலையில் பல அண்ணாவிமார்களையும் திறமையான கலைஞர்களையும் கொண்டமைந்தது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து சென்றதுடன் அவர்களது கலை ஆர்வமும் சிதைக்கப்பட்டுள்ளதென்றே கூற வேண்டும்.

எமது கிராமம் கூத்துக் கலையை தொடர்ந்து பேணிவரும் என்பதில் எனக்கு முழுமையான நம்பிக்கையுண்டு. அதற்கான அடித்தளத்தை இட்டுள்ளேன். எனது வழிகாட்டலில் வளர்ந்த கலைஞர்களும் முழு மனதுடன் இத்துறையில் ஈடுபட்டு வரு கின்றனர். கூத்துக் கலையுடன்

முன் நின்று உழைத்த பெருமைக்குரியவர்.

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம், நாடக மன்றம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் நீண்ட காலமாக தலைமைப் பொறுப்பில் இருந்து அவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். தற்பொழுது நாடகமன்ற போசகராக இருந்து தனது அனுபவ வெளிப்பாடு களினால் மன்றத்தையும் மன்றம் சார்பானவர்களையும் வளர்த்து வருகின்றார் என்பது இந்த இடத்தில் குறிப்பிடப்பட வேண்டியது.

**இரா-வின்**

## பொறுமைகொள் மனமே!

மனிதர்களின் குண இயல்புகளை இலகுவாய் எவராலும் அறிந்துகொள்ள முடிவதில்லை. ஒவ்வொருவரின் மனநிலைகளும் ஒவ்வொரு மாதிரியானவையாகத் தானிருக்கின்றன. எந்தவொரு வார்த்தைகளும் மனத்தில் அஸ்தமித்துத்தான் எம் உதடுகளினூடே பிரசவிக்கப்படுகின்றது. பிரசவிக்கப் படுகின்ற வார்த்தைகளின் வடிவங்களை இருவர் அதனை வடிகட்டுவதன் மூலம் அவரால் நாம் கவரப் படுகின்றோம். எம் மனங்களில் இன்ப துன்பம் எதுவென்றாலும் ஏற்று மனம் கூட அனைவரிடத்திலும் காணமுடிவதில்லை. அதாவது இன்பங்களில் எவ்வாறு மனநிலைமையிலிருக்கிறாரோ அதே மனதில் துன்பம் நிலவுகின்றபோது துவண்டுபோய் விடுவார்கள். மனதில் தைரியமாயிருந்தால்தான் நாம் மனவலிமை யுடன் எதனையும் இலகுபடுத்தமுடியும்.

இவர் தம் எந்தவொரு இக்கட்டான சுமைகளிற்குள் தள்ளப்படுகின்றபோது அதனை பொறுமையோடு ஏற்றுக்கொண்டு இதற்கு அடுத்தபடியாய் என்ன செய்யலாம் எனத் திட்டம் தீட்டிக்கொள்வார்கள். சிலர் எதனையும் சிந்திக்காமல் பொறுமையற்று செயற்பட்டுக்கூட இருக்கின்றார்கள். இவ்வாறு நடப்பது சரியானதல்ல. சின்னப் பிரச்சினைகளிற்குக் கூட நிலைகுலைந்து போய்விடுவதன் மூலம் நிம்மதியைத் தொலைத்தவன் போல் அடுத்த முடிவு எடுக்க முடியாதவர்களாய் போய்விடுவோம். பொறுமையின்றிப் போனால் எவராலும் எமக்கு பெருமை கிடைக்கமுடியாது. நம்மில் பலர் சொல்வதுண்டு இவர் பெருந் தன்மை பிடித்தவர் என. இவ்வாறு மற்றவர்கள் சொல்கின்ற மனநிலையோடு நாம் வாழக்கூடாது. மாறாக இவன் நல்லவன் எனக் கூறும்படியாக நம்மை நாமே மாற்றிக்கொள்ளவேண்டும். நிறுவனம் ஒன்றில் கடமை நிமிர்த்தமாக அமர்த்தப்படுகின்றபோது அங்கோ சின்னச் சின்னப் பிரச்சினைகள் வர நிறைய வாய்ப்புண்டு. இதனால் வேலையைக் கைவிட்டுக் கூட போவதற்கு எம்மனம்தான் தூண்டுவதுண்டு.

இவ்வாறான முடிவுகளை நாம் எடுக்கக் கூடாது. இவ்வாறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றபோது எம்மை தனிமைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இல்லையாயின் ஏனையவர் களுக்கு கூறி அவர்களினூடே உங்கள் மனதினை பொறுமைப்படுத்திக் கொள்ளவேண்டும். இல்லையோ வெறுப்பான பணியாய் தான் காணப்படும் உங்கள் பணி. தேவையற்ற விடயங்களிற்குள் உட்படுத்தப் பட்டுக்கொள்ளாதீர்கள். மனதில் அமைதியின்மையை ஏற்படுத்திக்கொள்ளாதீர்கள். எவராயினும் உங்களை பேசிவிட்டால் பொறுமையற்று எதையும் செய்துவிடாதீர்கள். இப்பிரச்சினைகள் குடும்பங்களுக் கிடையே நிலவுவதுண்டு. இவர் ஏன் இவ்வாறு எம்மைப் பேசினார் என பொறுமையோடு சிந்தித்து முடிவெடுங்கள். பொறுமை கொள்ளும் மனத்தின் பெறுபேறுதான் எம்மைப் பெருமைப்படுத்தும் வெற்றியாகும். எந்த வகையிலும் நாம் பொறு மையோடு வாழவேண்டும். குடும்பப் பிரச்சினைகளில் பொறுமையின்றி பேசிக்கொள்வார்கள் இருவரும் பொறுமையில்லாமல் நடந்துகொள்ளக்கூடாது. பொறு மையை நிறையவே கையாளுங்கள். பொறுமையற்று நடந்துகொள்பவர்களுற்கு பொறுமை கொள்ளக் கூடிய வார்த்தைகளை பகிர்ந்துகொள்ளுங்கள். எனவே பொறுமை கொண்ட மனமே பெருமை கொள்ளப்படுவாய்!

**சி.மதீஸ்**

கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டதும் சுமார் ஒன்றரை மாதங்களாக நடைபெற்று முடிந்ததுமான இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டித்தொடர் இறுதியில் ஒரு வகையில் உப்புச் சப்பற்றதும் சலிப்புற்றதுமாக நிறைவுபெற்றது.

ஆரம்பத்தில் பாகிஸ்தானிய அணியில் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என வர்ணிக்கப்படும் சொகைப் அக்தர் இத்தொடரில் பங்கேற்காமல் விட்டது. இந்தியா பாகிஸ்தானை சுலபமாக வெற்றிபெற்றுவிடும் என்றே கருதப்பட்டது. அது போன்றே மூன்று டெஸ்ட் போட்டிகள் தொடரில் இரண்டு போட்டிகள் நிறைவடைந்தபோது இந்தியா-ஒன்றுக்கு பூச்சியம் என்ற நிலையில் முன்னணி வகித்தது. இதனால் மூன்றாவது போட்டியையும் வென்று டெஸ்ட் தொடரை கைப்பற்றலாம் என இந்திய அணி இறுமாந்திருந்தது. இறுதியில் எவ்வகையிலும் அதனை சமன் செய்யும் குறிக்கோளுடனும் போராட்டகுணத்துடனும் ஆடிய பாகிஸ்தான் இறுதிப்போட்டியை வென்று தொடரை சமன்செய்தது. அந்த வகையில் இந்திய அணியின் இறுமாப்புக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டது.

அடுத்து ஆரம்பமான ஆறு போட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரில் முதல்

# குருதட்சணை வழங்காத சிஷ்யர்கள்



இரண்டு போட்டிகளையும் வென்றதன் மூலம் இந்திய அணி வெற்றிக்களிப்பில் திளைத்தது. அத்துடன் அடுத்து நடக்க இருப்பது என்ன என்பதை மறந்துவிட்டது.

அடுத்து வந்த போட்டிகளில் அடிபட்ட நாகம்போல சீறி எழுந்த பாகிஸ்தானிய அணி இந்திய அணியை தலைநிமிரமுடியாத வகையில் செய்துவிட்டது. இரு மல்யுத்த வீரர்கள் சண்டையிடும்போது இருவரும் மாறி மாறி விழுவதும் இறுதியில் ஒருவர் வெற்றி பெறுவதுமே போட்டியாகும். அது ரசிகர்களையும் பரபரப்பான நிலைக்குள்ளாக்குவதும் போட்டியை ரசிக்கக் கூடிய ஆவலையும் தூண்டும். எனினும் இறுதி நான்கு போட்டிகளிலும் இந்திய அணியை தலை தூக்க முடியாத வகையில் பாகிஸ்தானிய அணி தாக்கியதும் இந்திய அணிக்கென போராட்ட குணம் இன்மையும் மேற்கூறியது போன்று உப்புச்சப்பற்ற தொடராக முடிந்துவிட்டது.

எவ்வாறெனினும் இந்திய அணிக்கு இந்தப் போட்டித்தொடர் தோல்வியை பெற்றுத்தந்ததுமன்றி பெரும் களங்கத்தையும் ஏற்படுத்திவிட்டது. முதலாவது காரணம் அணித்தலைவர் கங்குலிக்கு விதிக்கப்பட்ட தடையாகும். அடுத்த விடயமாவது எல்லாராலும் “மாஸ்டர் பிளாஸ்டர் (Master blaster) என வர்ணிக்கப்படும் சச்சின் டெண்டுல்கரின் துடுப்பாட்டம் எனலாம்.

சுமார் மூன்று வருடகாலமாக அவரின் துடுப்பாட்ட சராசரி சரிவு கண்டுவந்த நிலையில் இந்தத் தொடரிலாவது சாதனை படைப்பார் என்ற எதிர்பார்ப்பை அவர் கானல் நீராக்கிவிட்டார். அத்துடன் சில வேளை இக்காரணத்தால் அவர் ஓய்வை அறிவித்தால் அல்லது அணியை புனரமைப்புச் செய்தால் இந்த கறை அவரை விட்டுவைக்காது.

இந்திய அணி வீரர்களின் நிலை இவ்வாறிருக்க அணியின் பயிற்றுனரும் தரவரிசையில் இரண்டாம் இடத்தை வகிக்கும் நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்தவருமான ஜோன்ரைட்டுக்கும் இது மறக்கவோ மறைக்கவோ முடியாத தொடராகிவிட்டது. காரணம் அவர் இந்தப் போட்டியுடன் பயிற்றுவிப்பாளர் பணியிலிருந்து விலகுவதாகும். அதாவது ஒப்பந்தகாலம் முடிவடைவதாகும்.

1999ஆம் ஆண்டு இந்திய அணியில் பயிற்றுவிப்பாளராக அவர் பதவியேற்ற ஆரம்பத்தில் இந்திய அணி சிறப்பாகவே செயற்பட்டது எனலாம். 2001ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவை டெஸ்ட் தொடரில் வென்றதும் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற மினி உலகக்கிண்ணப் போட்டியிலும் 2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியிலும் இந்திய அணி இறுதிப்போட்டிவரை சென்றமையால் இவரின் பயிற்றுவிப்புப் பணியையும் குறை கூறுவதற்கில்லை அத்துடன் கடந்த வருடம் பாகிஸ்தான் மண்ணில் அவ்வணியை டெஸ்ட் தொடரிலும் ஒருநாள் தொடரிலும் வென்று நாடு திரும்பியதையும் மறுப்பதற்கில்லை.

எனினும் தனது பயிற்றுவிப்பின் மூலம் கிடைக்கப்பெறவிருந்த இறுதி வெற்றியை பெறமுடியாதது அவரின் தவறா அணியின் தவறா என்று கூற முடியாதுள்ளது.

எனவே இந்திய வீரர்கள் தனது குழுவின் எதிர்பார்ப்பையும் சுயகௌரவத்தையும் காப்பாற்றமுடியாமல் போனமை அனைவராலும் வருந்தத்தக்கதே.

எனவே அடுத்துவரும் பயிற்சியாளருக்கு குரு தட்சணை வழங்கும் விதமாக வீரர்கள் செயற்பாடு அமையவேண்டும் அத்தோடு ஆகஸ்டில் சிறிலங்காவில் நடைபெறும் முக்கோணத்தொடரைக் கைப்பற்றுவதற்கு இப்போதிருந்தே கங்கணம் கட்டவேண்டும்.

சம்பத்



லண்டன் ஏப்.20 சர்வதேச கால்பந்து சங்கங்களின் சம்மேளனம் (பி.ஃ.பா) வெளியிட்ட உலக கால்பந்து அணிகளின் தரப் பட்டியலில் உலக சம்பியனில் பிரேசில் முதலிடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

செக். குடியரசு அணி இரண்டாவது இடத்துக்கும் முன்னேறியுள்ளது.



ஆர்ஜெண்டினா மூன்றாவது இடத்தில் அப்படியே உள்ளது. பிரான்ஸ் தடுமாற்றம் கண்டு 4-ஆவது இடத்திற்கு சரிந்துள்ளது.

நெதர்லாந்து 5-ஆவது இடத்துக்கும் இங்கிலாந்து 6-ஆவது இடத்திற்கு முன்னேறி உள்ளன.

அண்மையில் நடைபெற்ற போட்டிகளில் அணிகள் பெற்ற வெற்றி தோல்விகளின் அடிப்படையில் தர வரிசை நிர்ணயிக்கப்படுகின்றது.

# சிக்குப்... புக்கு.. ரயிலில் செக் கால்பந்து அணி

*சர்வதேச விளையாட்டு கருத்தரங்கு ஜெர்மனி தலைநகர் பெர்லினில் நடந்தது. இதில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீடு கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் விளையாட்டுத் துறையில் ஏமாற்றுபவர்களுக்கு 2 வருடம் ஜெயில் தண்டனை அளிக்கவே சட்டத்தில் இடம் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. இது 10 வருடம் அளவுக்கு இருக்கவேண்டும். இங்கிலாந்துச் சட்டத்தில் நல்ல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இதேபோல் மற்ற நாடுகளும் விளையாட்டில் ஏமாற்றுபவர்களை தண்டிக்கச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.*

# தண்டனை உண்டு கவனம்

இந்த ஆண்டு தொடக்கத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இந்தத் தொடரில் பாகிஸ்தான் மிக மோசமாக ஆடி டெஸ்ட் தொடரை3-0என தோற்றது. அப்போது முன்னாள் கப்டன் இம்ரான்கான்; இன்சமாம் கப்டன் பதவிக்கு தகுதி இல்லாதவர் என்று கடும் விமர்சனம் செய்தார்.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்திய சுற்றுப்பயணத்தில் இன்சமாம் தலைமையிலான அணி சிறப்பாக ஆடி ஒருநாள் தொடரை 4-2 என்ற கணக்கில் வென்றது.

இந்திய சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்து நாடு திரும்பிய வீரர்களுக்கு பாகிஸ்தானில் பாராட்டுக்களும் பரிசுத் தொகையும் குவியத் தொடங்கியுள்ளன. அதிபர் முஷாரப் ரூ50இலட்சம் போனசாக வழங்குவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இம்ரான்கான் கப்டன் இன்சமாமை பாராட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது



file

இந்தியாவுக்கு எதிரான தொடரில் இளம் வீரர்களைக் கொண்டு விளையாடி இன்சமாம் வெற்றி பெற்று சாதனை படைத்துவிட்டார். இந்தத் தொடரில் அவர் கப்டன் பதவியில் வளர்ச்சி அடைந்துள்ளார். என்னை பொறுத்தவரையில் இன்சமாம் சிறப்பாக செயல்பட்டார். ஆனால் கங்குலி மோசமாக ஆடினார்.

அவுஸ்திரேலிய

# ஓகோ... பரிசுமழை

தொடரில் இன்சமாம் மோசமாகத்தான் செயல்பட்டார். அப்போது அணியை அவர் சரியாக நடத்தவில்லை. ஆனால் இப்போது இந்தியா தொடரில் கப்டன் பதவியை உணர்ந்து அருமையாகப் பணிபுரிந்தார்.இவ்வாறு அவர் கூறினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. ஒருநாள் தொடரில் அந்த அணி வெற்றிபெற முக்கிய காரணமாக இருந்தவர்களில் வேகப்பந்து வீச்சாளர் ரானாநவீத் உல்-ஹசன். அவர் சிறப்பாக பந்துவீசி இந்தத் தொடரில் 15விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவரது பந்துவீச்சில் சேவாக் நான்கு முறை ஆட்டம் இழந்துள்ளார். கொச்சியில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் டெண்டுல்கர் விக்கெட்டைக் கைப்பற்றினார். இந்த நிலையில் டெண்டுல்கர் விக்கெட்டைக் கைப்பற்றியதே தனது சிறந்த விக்கெட் என ரானா கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது

இந்தியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாகப் பந்து வீசினேன், சேவாக்கை நான்கு முறை ஆட்டமிழக்கச் செய்துள்ளேன். எனினும் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்ததே எனது சிறந்த விக்கெட். அவர் தலைசிறந்த துடுப்பாட்டவீரர் இந்தத்தொடரின் மூலம் அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. எனது பந்துவீச்சை மேலும் பலப்படுத்துவேன் என்கிறார் ரானா



# பொருண்மிய வாசல்

## எங்கள் மண்ணின் மாண்பு

சிதம்பரதிரு

எங்கள் மண்ணின் தனித்துவமான பனைவளம் இராணுவ ஆக்கிரமிப்பாளர்களால் கண்டபடி தறிக்கப்பட்டு வருவது மறைக்க முடியாத உண்மை.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வந்த இந்தச் செயற்பாடு சமாதான காலம் என நிழல்யுத்தம் புரிகின்ற காலத்திலும் கூட நடைபெற்று வருகின்றது.

எங்கள் மக்களும் எங்கள் வளவுகளில் நிற்கும் பனைகளை நாங்கள் தறிப்பதற்கு யார் தடை சொல்வார்கள் என்ற மனப் போக்கில் பனைகளை தறித்து தம் தேவைகளுக்கு பாவித்தனர்.

எனினும் எங்கள் தாயக மண்ணின் தேசிய நலன் கருதி பனைகளை கண்டபடி தறிக்கும் செயற்பாடு ஓரளவு கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரப்பட்டது. எனினும் எங்கள் மக்களில் கணிசமானோர் இது தொடர்பில் அக்கறை அற்று உள்ளமை கவலைக்குரியதே.

இத்தகைய சூழ்நிலையிலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் சி.கரிகாலன் அவர்கள் "பனை வளத்தை அழிவில் இருந்து பாதுகாப்போம்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளார்.

"எமது தேசத்தின் இனத்தின் அடையாளச் சின்னமான பனைவளம் திட்டமிட்ட வகையில் சிறிலங்கா இராணுவத்தினராலும் அதேவேளை தங்களது வீட்டுத் தேவைகளுக்கு என எமது மக்களாலும் கண்மூடித்தனமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களினாலும் இந்த வளம் பெருமளவு அழிவுற்றநிலையில் இந்த வளத்தினை மேலும் அழிவிலிருந்து காப்பாற்றவேண்டியது ஒவ்வொரு தமிழ் குடிமகனது கட்டாய கடமையாகும்" என அதில் கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசிய செல்வமான பனை வளத்தை பாதுகாக்க தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் திட சங்கற்பம் கொள்ளவேண்டும். கொள்வோமா?

## வாழைச்செய்கையாளர் எதிர்நோக்கும் வாழைக்குருமன் நோய்

வாழைச்செய்கையாளர்களை பெரிதும் பாதிக்கின்ற நோய் வாழை குருமன் நோய்.

இந்நோய் வாழையின் எந்த வளர்ச்சிப் பருவத்திலும் தாக்கும். இந்நோய் அநேகமாக ஈர நிலங்களில் நாட்டப் படுகின்ற வாழைகளையே இந்நோய் பாதிக்கின்றது.

வாழைக்குருமன் நோய் வைரசினால் ஏற்படுகின்றது. வாழை இலைகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து சுருங்கி சிறுத்து கொத்தாகக்காணப்படும். இலைக் காம்பு கட்டையாகவும் புதிதாகவும் உருவாகும். இலைகள் மஞ்சள் நிறமாகவோ அல்லது மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவோ மாறும். வளர்ச்சி தடைப்படும். வாழை மரம் கட்டையாக குறுகிக் காணப்படும்.

வளர்ச்சி அடைந்த வாழை மரங்களில் இந்நோய் காணப்படுமாயின் அதன் இலைகள் புதிதாக உருவாகும் போது இலைகள் நேராகக் காணப்படும். இலையின் விளிம்பு மேல் நோக்கிச் சுருளும். புதிய இலைக் காம்புகள் கட்டையாகி விகாரமான தோற்றத்தைக் கொடுக்கும். புதிய இலைகள் மஞ்சள் நிறமாகும்.

தாவரத்தின் பக்க இலைகள் ஒன்றோடொன்று இணைந்து ஒரே இடத்தில் இருந்து உருவாகுவது போல் காணப்படும். குருமன் நோயால் பாதிக்கப்பட்ட இலைகள் கடினமாக இருக்கும். இதனால் இலைகள் இலகுவில் கிழியும். இலை நரம்புகள் தடிப்பாக இருக்கும்.

இலை நரம்புகளுக்கு அருகே கடும் பச்சை மஞ்சள் நிறமான சிறிய கோடுகள் காணப்படும். சில வேளை களில் இச் சிறிய கோடுகள் இலைக்காம்பு மத்திய நரம்பு ஆகியவற்றிலும் தோன்றலாம்.

குலை போடும் வாழையை இந்நோய் தாக்கினால் வாழைப் பொத்தி வெளியே வராது தடைப்பட்டிருக்கும். வளர்ச்சி அடைந்த பின் இந்நோய் தோன்றுமாயின் சில வேளைகளில் குலைபோடும். இந்நோய் ஏற்பட்ட வாழைக் காய்கள் விகாரமடைந்து காணப்படும். இக்குலைகள் விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்படும்.

வாழைக் குருமன் நோய் முக்கியமாக இரண்டு வழிகளில் பரவலாம்.

1.நோயால் பாதிக்கப்பட்ட வாழைகளை நடும்போது ஏற்படும்.

2. வாழை அழுக்கணவன் மூலம் வைரசுகள் பரவுவதால் இலைக் காம்புகள் வாழைத்தண்டுடன் இணையும் இடங்களுக்கருகேயும் தண்டின் அடிப்பகுதியில் உலர் வடைந்த இலைகளிலும் காணப்படும்.

அழுக்கணவன் தாவரச்சாற்றை உறிஞ்சிக்குடிக்கும். நோயால் பாதிக்கப்பட்ட மரத்தின் சாற்றை உறிஞ்சும் போது வைரசுக்கள் இப்பூச்சியின் உடலில் செல்லும். பின்னர் இவை ஆரோக்கியமான மரத்தின் சாற்றை உறிஞ்சும் போது வைரசுக்கள் அத்தாவரத்தில் பரவுகின்றன.

அழுக்கணவனின் உடலினுள் வைரசுக்கள் சென்ற பின்னர் அந்த அழுக்கணவன் வாழ்க்கைக் காலம் முழுவதும் வைரசு நோய்க் காவியாகத் தொழிற் படும்.

நோயால் பாதிக்கப்பட்ட தாவரச் சாற்றின் மூலம் நோய் பரவமாட்டாது.

எனவே நோயால் பாதிக்கப்பட்ட தாவரத்தை வெட்டு வதற்குப் பயன்படுத்திய கத்தி, மண்வெட்டி என்பவற்றில் காணப்படும் தாவரச்சாற்றின் மூலம் ஆரோக்கியமான தாவரத்திற்கு இந்நோய் பரவமாட்டாது.

இந்நோய் தொடர்ந்து வாழைகளை திரும்பத்திரும்ப அதே இடத்தில் நாட்டுவதாலும் இந்நோய் பரவ ஏதுவாகின்றது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதாயின் நோய் அறிகுறி காணப்படும் வாழைமர அடியை முற்றாகப் பிடுங்கி எரித்துவிடவேண்டும். அழுக்கணவன்களும் இதன் மூலம் எரிந்து அழியும் இல்லாவிடின் பிடுங்கி எறியப்படும் தாவரங்களில் காணப்படும் அழுக்கணவன் பறந்து ஏனைய ஆரோக்கிய தாவரங்களிலும் நோய் உண்டாக்கலாம்.

நோயால் பாதிக்கப்பட்ட வாழை மர அடியில் இருந்து பெறப்படும் குட்டிகளை நடுகைக்குப் பயன்படுத்தக்கூடாது. நாகம் அல்லது நைதரசன் குறைபாடு ஏற்படும்போது வாழைக்குருமன் நோயைப் போன்ற அறிகுறிகளை வாழைமரத்தில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். வாழைகளைத் தொற்று நீக்கம் செய்து நடல் அவசியமாகும்.

எவ்வாறாயினும் இந்நோய் அறிகுறிக்கான சரியான காரணத்தைத் தீர்க்கமாக அறிந்துகொள்ளும் வரை இவ்வாறான மரங்களைத் தோட்டத்தில் விட்டுவிடக் கூடாது. பிடுங்கி எரித்துவிட வேண்டும்.

நடுகைக்கு தெரிவு செய்யும்போது வாழைக்குட்டி களை நடுவதற்கு முன்பு பனாமா நோய், குருமன் நோய், நீள்மூஞ்சி வண்டுகள் என்பவற்றால் பாதிக்கப்படாத வாழை மர அடிகளில் இருந்து பெறப்பட்ட வாழைக் குட்டிகளை நடுகைக்குத் தெரிவுசெய்வது சிறந்த வழிமுறையாகும்.

சிவகமலா


மீண்டும் யாழ்ப்பாணத்தில்...

ஈழநாதத்தின் கிளைப்பணிமனை

தொடர்புகளுக்கு:

இல:31,வைமன் வீதி,யாழ்ப்பாணம்.

தொ.பே:021-222 7917



இருபதாவது அகவையைப் பூர்த்திசெய்து தொடர்ந்தும் வீறுநடையுடன்...

கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித 3 மாத காலப் பயிற்சிகள்

| | |
|---|---|
| கேக் ஐசிங் | சகலவிதமான ஐசிங் 22வகையான கேக் அமைப்புக்கள், மாச்சீனி மலர்கள் (suger crafting) என்பன வெகுசிக்கனமான முறையில் செய்தல். |
| கூந்தல் அலங்காரம் | இருபதுக்கும் மேற்பட்ட கொண்டைகள், (Hair styles) போடுதல், |
| FAVRIC PAINTING | கைக்குட்டை, தலையணை உறைகளில் வர்ணந்தீட்டல், EMPOSS PAINTING, pot PAINTING , மண் PAINTING |
| உணவுகள் தயாரித்தல் | மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் சீன உணவுகள், [illegible]ண்டிகள் தயாரித்தல், |
| கைவேலை | கடதாசி அலங்காரம், கழிவுத்துணிவேலை, கிறிஸ்ர[illegible]வலை, முத்துமாலை கோர்த்தல், றிபன்வேலை, |

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இத்துடன், அடிப்படை Faceal அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலையணியும் விதமும் இரண்டுநாள் வகுப்புக்களாக நடைபெறும்.

6மாதகால தையற்பயிற்சி பூவேலை வகுப்புக்கள்.

| | |
|---|---|
| தையல் பயிற்சி | குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல், |
| பூவேலை | கடதாசியினாலும், துணிகளினாலும் இருபதுவகையான மலர்கள் மற்றும் Bouquet செய்தல |

சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம். 24.04.2005

கிழமைநாள் புதியவகுப்புக்கள் ஆரம்பம் 25.04.2005

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப.2.00 மணிவரை அறிந்துகொள்ளலாம்.

இயக்குநர்,

(சி11728)


(13 ஆம் பக்கத்தொடர்ச்சி)

'அப்பா... அப்பா...'

எதுவித அசுமாத்தமும் இல்லை

'பரமலிங்கத்தை ஒருக்கால் கூட்டிக்கொண்டோடியா தம்பி...'

நான் அவசரப்பட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடினேன் என்னு டைய சைக்கிளின் கடகடப்பில் சில நாய்கள் அருண்டு குரைக்கத் தொடங்கின. பதட்டத்தில் தெரு தெரியவில்லை. போகின்ற போக்கில் சித்தப்பாவீட்டு படலையடியில் நின் றேன். பால் கறப்பதற்காக சித்தப்பா வேளையோடு எழுந்துவிடுவார். படலையைத் தள்ளிக்கொண்டு போனேன்.

'ஆரது?'

சித்தப்பா கிணற்றடியில் நின் றார்.

'சித்தப்பா... அப்பா எழுப்ப எழுப்ப பேசாமக்கிடக்கிறார்... நான் பரமலிங் கத்தாரிட்டை போறன்... நீங்கள் ஒருக்கா வீட்ட போங்கோ... அம்மா தனிய...'

'கெதியாப் போ... நான் உடன போறன்....'

நான் மீண்டும் சைக்கிளில் பறந்தேன்.

பரமலிங்கத்தார் வீட்டுக்கேற் பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. வீட்டுக் குப்பக்கதிலிருந்த கடைக்குள் வெளிச்சம் தெரிந்தது.

பரமலிங்கத்தாரின் வளவுக்குள் ஏராளமான மூலிகைகள். யாராவது களவாக மூலிகைகளை பிடுங்கக் கூடாது என்றதுக்காக அவர் ரெண்டு நாய் வளர்த்துவருகிறார். அதுகளை இரவில் அவிழ்த்துத்தான் விடுறவர். அந்த நாய்களின் நினைப்பு வந்ததும் கேற்றடியில் தயங்கினேன். பிறகு மனதைத்திடப்படுத்திக்கொண்டு போனேன்.

'ஐயா.... ஐயா...'

இரண்டு சத்தம் வைத்த பிறகு முன்கதவைத் திறந்து உதவியாள் எட்டிப்பார்த்தான்.

'நான் பெரியவளவு ஏகாம்பரத் தின்ர மகன்... ஐயாக்கு சரியான ஏலா மக் கிடக்கு... உடன பரியாரியாரை கூட்டிக்கொண்டுபோகவேணும்...'

உதவியாள் உள்ளே போனார்.

'போங்கோ... ஐயா வாறாராம்...'

திரும்பி வந்துகொண்டிருந்தபோது விடிந்துவிட்டது. தேநீர்க்கடைகள் களைகட்டிவிட்டன.

வீட்டுக்கதவு திறந்திருந்தது. சித்தப்பா வாசலில் என்னை எதிர் பார்த்தவாறு தான் நின்றுகொண்டிருந் தார் என்பது தெரிந்தது.

நான் சைக்கிளை நிறுத்தியதும் என் தோழிகளைப் பற்றினார்.

'நீ மனம் தளரக்கூடாது சத்தி யன்... அப்பா போய்விட்டார்... நடக்க வேண்டிய காரியங்களை நீதான் தள ராம நிண்டு செய்யோணும்... அக்கா வைக்கும் செய்தி அனுப்பியாச்சு...'

சித்தப்பாவின் கைகளை உதறி விட்டு உள்ளே போனேன் அப்பா வைக் கட்டிலில் நீளமாய் வளர்த்தி இருந்தார்கள். தலைமாட்டில் குத்து விளக்கு எரிந்துகொண்டிருந்தது. என் கண்கள் பனிக்க தொண்டைக் குள் ஏதோ சிக்கியது.

ஒண்டிரெண்டாய் அயல்சனங்கள் எங்கள் முற்றத்தில் கூடத்தொடங் கினார்கள். அம்மாவின் அழுகுரல் ஈனமாய் ஒலிக்கத் துவங்கியது. அம் மாவின் கண்ணீர் என் கண்களையும் பனிக்கச்செய்தது. அம்மாவின் முதல் அழுகை இதுதான்.

நான் வெளியே வந்தேன். அப்பாவின் மண்வெட்டி அநாதர வாய்... அதை எடுத்து மண்ணைத் தட்டிவிட்டு பாதுகாப்பாய் வைத்தேன்.

# வாழுற காலத்தில வழவாக வாழவேணும்..!

'வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடி இருக்கிறீயள்? நானும் ஒரே அலைச்சல் தான். எண்டாலும் விருப்பமான அலைச்சல் தான்.

அண்டைக்கு நெதர்லாந்தில இருந்து வெளிக்கிட்டு பெல்ஜியம் போனோம். ஐயோ அந்த நெடுஞ் சாலையில போகேக்கிள்ளை எனக்கு வந்த ரென்சனுக்கு... என்னண்டு சொல்லவே தெரியேல்லை. எட என்ன மனுசர் மாதிரி கார் ஓடிறாங்கள்!எங்கட நாடு வழியில வாகனத்தில ஏறி இருந்த உடன பெரும்பான்மையான (எல்லாரும் இல்லை) ஆக்கள் ஏதோ தங்கட சீதனவீதியில தாங்கள் மட்டும் தான் திரியினம் எண்டமாதிரி, கர் ! புர் ! எண்டு சளி கண்ட தொண்டை மாதிரி அமத்திக்கொண்டு பறப்பினம். இஞ்சை இவ்வளவு நல்ல ரோட்டுகள் இருந்தாலும், சட்டங்களை மதிச்சு என்னமாதிரி போக்குவரத்துப்பயணாளியாய் எல்லாரும் இருக்கினம்.

சரி அதை விடுங்கோ! பெல்ஜியத்துக்குள்ளை போகேக்கிள்ளை இருட்டீட்டிது. குளிர்காலம் எண்டால் இஞ்சை பின்னேரம் 5,5:30 எண்டாலே இருள் வந்திடும். ஒரு விசயம் மட்டும் எனக்கு இஞ்சை படாரெண்டு தட்டிச்சிது. நெதர்லாந்தில ஊர்மனையள் இருக்கிற தெருக்களுக்கு வெளிச்ச வசதி குடுத்திருக்கு. ஆனால் இஞ்சை நெடுஞ்சாலை நீட்டுக்கும் லைற்போட்டு வைச்சிருக்கிறாங்களே! நாங்கள் அங்கை 45 ஆயிரம் ரூபா குடுத்து சூரியமின்கலத்தில 5 லைற் எரிக்கப்படிற பாட்டுக்கு, உப்பிடி கறண்டை அநியாயமாக்கிறாங்களே!

நெடுஞ்சாலை எண்டால் எப்பிடியும் வாகனங்களின்ரை ஹெட் லைற் வெளிச்சம் இருக்கும்தானே, ஏன் மேலதிகமாய் உதெண்டு கவலைப்பட்டன். அப்பதான் பழைய காயள் எனக்கு விளங்கப்படித்திச்சினம்: 'இவங்கள் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தில 60 வீதத்தை அணுசக்தியில் இருந்து தான் எடுக்கிறாங்கள். அந்த அணு மின்னுற்பத்தி நிலையங்களில பாவிக கப்படுகிற எரிதண்டுகள் தொடர்ச்சியா வெளிப்படுத்திக்கொண்டிருக்கிற வெப்பத்தால நீரைச் சூடேற்றித்தான் மின்சாரம் எடுக்கப்படுகிது. இரவுகளிலை சனம் படுக்கப்போனாப் பிறகு மின்சாரப்பாவனை குறைஞ்சிடும். மற்ற நிலையங்கள் எண்டால் தணிச்சு விடலாம். ஆனால் அணு மின்- நிலையங்களை அப்பிடி போட்டு- நிற்பாட்டேலாது. எங்கையாவது அந்த மின்சாரத்தை பாவனைக்கு விட்டே தான் தீரணும். அதுதான் ஒருகல்லில இரண்டு மாங்காய் போல ரோட்டு நீட்டுக்கு இப்பிடிச்செய்திருக்கினம்'. ம்.. வடிவாய்த்தான் இருக்கிது. அந்த வடிவில ஆழமானதொரு பொருளாதார அக்கறையும் தென்பட்டிச்சிது. பெல்ஜியமும் கிட்டத்தட்ட நெதர்லாந்து அளவுதான். ஆனால், சனத்தொகை 10மில்லியன்தான். மூண்டு மொழி பேசிற மக்கள் ஒருவகை சமஸ்டி ஆட்சியில வாழினம். நெதர்லாந்துப்பக்கமான பெல்ஜியத்தில டச்சு மொழியும், தெற்கில பிரான்ஸ் பக்கம் பிரெஞ்சும், கிழக்கில யேர்மன் (டொச்) மொழியும் பேசப்படுகிது. முக்கியமான விசயம் என்னவெண்டால் மொத்த சனத்தொகையில 1வீதம் மட்டும் இருக்கிற யேர்மனிய டொச் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்கி சந்தோசமாய் இருந்து வருகினம்.

அதாலதானோ என்னவோ ஐரோப்பியக்கூட்டமைப்பின்ரை தலைமைச்செயலகத்தை பெல்ஜியத்தலைநகரான பிறஸல் சில வைச்சிருக்கினம். பொருளாதாரம் எண்டு பார்த்தால் உற்பத்தித்துறையில நல்ல வளர்ச்சி இருக்கிது. பத்தாக்குறைக்கு சுவிஸ் மாதிரி சர்வதேசங்களில இருந்து பணம் வைப்பிலிடும் வசதியளையும் ஏற்படுத்திக்கொண்டு வருகிது. நாங்கள் சின்னனா இருக்கேக்கிள்ளை 'டென்மார்க் பாலையும், நோர்வே மீனையும், நியூசிலாந்து இறைச்சியையும் ஏற்றுமதி செய்கின்றன' எண்டு கிளிப்பிள்ளை மாதிரி படிச்சனாங்களெல்லோ. அதெல்லாம் வெற்றுச்சுரக்காய்! அதுகளைப் பார்த்திட்டு நான் நினைச்சது உதுகளை விற்றுத்தான் உவையளெல் லாம் உவ்வளவு வசதியாய் இருக்கினமெண்டு. ஆனால் பாருங்கோ, அவங்கள் தங்களுக்குத் தேவையான எல்லாத்தையுமே தாங்களே உற்பத்தி செய்துகொள்ளிறாங்கள்.

சிலதுகளை மட்டும் தாங்கள் மினைக்கெடாமல் வேற நாடுகளிட்டை இருந்து வாங்கிக்கொள்ளிறாங்கள். உதாரணத்துக்கு இலங்கையையே பாருங்கோவன். இலங்கையின்ரை மலைநாட்டில் இருக்கிற அதே காலநிலை, மண்வளம் எல்லாம் பிரித்தானியாவிலையும் இருக்கக்கூடியதாக ஏன் தேயிலைக்கண்டைப் போய் கண்டியில நட்டவங்கள் எண்டு நினைக்கிறீயள்? பின்ன, அதை லண்டனில நட்டிட்டு 10 லட்சம் பிரிட்டிஷ் காரர் அதைச்சுத்தி நோண்டிக்கொண்டிருந்தால், தன்ரை உற்பத்தித்திறன் மங்கீடும், கூடவே பவுண்ட்ஸ்ல சம்பளம் குடுத்தால் தேயிலையின்ரை விலையும் பயங்கரமாய் இருக்கும் எண்டுதான். இலங்கையும் அதிசுவை கூடிய தேயிலையின் தாயகம் எண்ட பெருமையோட வெள்ளைக்கார ஐயா நட்டுவைச்ச தேயிலைச் செடிக்கு தண்ணி ஊத்திக்கொண்டு, பிரதான உணவுக்குரிய அரிசியை வேறநாடுகளில இருந்து இறக்குமதி செய்யுது.

ஆ! நாங்கள் பெல்ஜியத்துக்கு திரும்ப வருவம். இஞ்சை எங்கட சனம் பெரிசா இல்லை. ஒரு 300 பேர் வரைக்கும் இருக்கலாம். வட ஆபிரிக்காவில இருந்து வந்த ஆக்களும் ஓரளவுக்கு இஞ்சை இருக்கினம்.

என்னதான் சின்ன நாடாக இருந்தும், உற்பத்தித்துறையில முன்னுக்கு வந்து வசதியாய் இருக்கினம். 1950களிலதானாம் இப்பிடி வளர்ச்சியடையிறதுக்கான அலுவல்கள் நடந்ததாம்! நாட்டில கால்வாசிப்பகுதியில விவசாயம் வேற நடக்கிது. இன்னுமொருவிசயம் பாருங்கோ! 10 மில்லியன் சனத்துக்கும் 30 தினசரிப்பத்திரிகையள் வெளிவந்து கொண்டிருக்கிது. நாங்கள் 3.5 மில்லியன் தமிழரும் ஒரு 5,6 பத்திரிகையளை நட்டத்திலை ஓட்டிக் கொண்டிருக்கிறம். ஏன் சொல்லிறனெண்டால் வாசிப்பு ஆர்வம் வாசகரிட்டையும், ஆர்வத்தை ஏற்படுத்திற வளமும், முயற்சியும் பத்திரிகையளிட்டையும் குறைஞ்சிதெண்டால் ஒட்டுமொத்தமாய் உருப்படிறது கஷ்ரமாய் போய்விடும்.

அப்பிடியே அங்கை இரவிரவாய் சுத்திப்போட்டு ஹொலண்டுக்கு அடுத்தநாள் திரும்பினம். திரும்பேக்கிளை மீன் வாங்கோணுமெண்டு என்ஷேட எண்ட இடத்துக்கும் போனோம். அது யேர்மனியை ஒட்டியிருக்கிற ஹொலண்ட நகரம். இதென்ன கடையில மீன் இல்லாமல் எங்கையோ போயினம் எண்டு முதல் நினைச்ச எனக்கு, அந்த இடத்துக்குப் போனப்பிறகுதான் அதின்ரை ரகசியம் புரிஞ்சிது. அதொரு கடலுணவுக்கடல் பாருங்கோ. வழமையான சந்தையோட சேர்த்து, கடலுணவு வகையளையும் விக்கினம். எல்லைப் பகுதியெண்டதால கனதேசத்துச் சனமும் குவியுது. தமிழாக்களும் இஞ்சை வந்து தொகையா வாங்கிக் கொண்டு போய்வைச்சு சமைக்கினம். மலிவும் கூட ! எனக்கதில பிடிச்ச விசயம் என்னண்டு சொல்றன்:

எங்கட நாட்டில மீன்சந்தைக்கு குடும்பமா ஒருதரும் போறேல்லை. ஓராள் மட்டும் தான் போகும். அங்கை போய் மினைக்கெடவும் நேரம்விடாது, வீட்டில உலை வைக்கோணும். இஞ்சை பாருங்கோ உடன சாப்பிடிறதுக்கெண்டு எக்கச்சக்கம் மீன், றால் உணவு வகையள்! எல்லாரும் குடும்பமா வந்து நல்லா நேரம் எடுத்து, சுத்திப்பார்த்து பம்பலாய் சாமான் வாங்கிட்டு, இடையில விதம்விதமாய் சாப்பிட்டிட்டு நல்ல மாதிரி பொழுதை கழிச்சுக்கொண்டு போயினம். என்னதான் வெள்ளையள் குடும்ப வாழ்க்கையை நிரந்தரமாய் வாழத்தெரியாவிட்டாலும், வாழிற காலத்தை வடிவாய் வாழிதுகள் எண்டு சொல்லலாம். ஏன் சொல்லிறன் எண்டால் எங்கட சமூகத்தில கணவனுக்கெண்டு ஒரு சோலி, மனைவிக்கொரு சோலி, பிள்ளையள் தங்கடபாடு. எல்லாரும் சேர்ந்து வெளியால போறதெண்டால் ஒரு கலியாணம், கோயில், காட்சி நடக்கிற நேரம் மட்டும்தான் ! யோசிச்சுப்பாருங்கோ ! எங்கட ஏதோவொரு கடற்கரைக்கு நீங்கள் கிழமையில ஒருநாள் காலையில குடும்பமாப்போய் அந்தக்கிழமைக்குத் தேவையான சாமானுகளை எல்லாம் வாங்கிக் கொண்டு, அப்பிடியே உப்புக்காத்தை சுவாசிக்கொண்டு அங்கையே சுடச்சுட உங்கட சாப்பாட்டையும் முடிச்சுக் கொண்டு மதியம் வர்றதால, உங்கட குடும்பத்தில இருக்கிற ஒவ்வொருத்தருக்கும் எவ்வளவு நல்லதெண்டு.

சோறு, கறியைச் சாப்பிட்டிட்டு வீட்டில படுக்கிறதைவிட வெளியால இப்பிடி போய்வாறது நல்லதோ, இல்லையோ ? வெறுமனே சமைக்கிறதுக்கான வகைகளை மட்டும் விற்காமல், இப்பிடியான உடனடி உணவுகளை கடற்கரைச் சந்தையளில கிடைக்கச் செய்யிறதால, போற ஆக்களுக்கும் உலை வைக்கிற அவசரம் இருக்காது, ஆறுதலாய் பார்த்து கனக்க வாங்குவினம். வியாபாரம் பெருகும். மற்றது இந்த உடனடி உணவகங்களால அந்தப்பகுதியில வேலைவாய்ப்பும் கிடைச்சமாதிரி இருக்கும். அந்தப் பொரிக்கிற மணமும், சத்தமும் எவ்வளவு பெரிய விளம்பரமும் கூட !




ஏதோ சொல்லிறதை சொல்லிப் போட்டன். அங்கை என்னென்ன ஐற்றம்ஸ் இருந்ததெண்டு பெரிய பட்டியலே வைச்சிருக்கிறன். ஆருக்கன் வேணுமெண்டால் சொல்லுங்கோ, தாறன்! என்னவோ பிள்ளையள், இதொண்டும் பயணக்கட்டுரை இல்லை. ஏதோ எழுதோணும் மாதிரி இருந்த விசயங்களை, ஏக்கங்களை எழுதினனான். இதுகள் தவிர கூடாத விசயங்களும் கனக்க கிடக்கு. ஆனால், எங்கட நாட்டுக்கு, உங்களுக்கு பிரயோசனப் படக்கூடியதை மட்டும்தான் நான் எழுதினனான்.

அவங்கட வளர்ச்சியின்ரை மர்மத்தை அறியோணுமோ இல்லாட்டி எப்பிடி அழிஞ்சு குட்டிச்சுவராய் போறதெண்டிறதோ முக்கியம்! உதாரணத்துக்கு போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்திறதுக்காக குறைஞ்ச அளவில அதின்ரை விற்பனையை பார்-கடையளில அனுமதிச்ச தால, கேளிக்கை விரும்பியளின்ரை கூட்டம் சேர்ற இடமாவும் இது இருக் கிது. அதால தான் எங்களுக்குப் பயன்படக்கூடின விசயங்களை மட்டும் எழுதிறன். இனி வேற ஒருநாட்டில நிற்பன். எங்கையெண்டு மட்டும் சொல்லமாட்டன். அதுதான் 'உலகம் சுற்றும் வயோதிபன்' எண்டிறது. கவனமாய் இருங்கோ எல்லாரும் !



## நெஞ்சு... பொறுக்குதில்லை...!

*என் சொந்தப் பெருமை கூறவரவில்லை. மன்னிக்கவேண்டும்.*

*கிராமத்து வீடு தென்னஞ்சோலையின் நடுவே என் வீடு. அந்த அமைதியான அழகான வீட்டில் அறுநூறுக்கும் மேற்பட்ட புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்தேன்.*

*இடம்பெயர்ந்தோம். இன்னல்பட்டோம், ஓடினோம். ஒதுங்கினோம். உயிரைக் காப்பாற்றினோம். திரும்பிவந்தோம். சொந்த வீடு சோகமாய் துகிலுரியப்பட்டு-அதாவது கூரைத் தகடுகள் பல கழற்றுப் பட்டு காட்சியளித்தது. வெட்டிய வேலிகள் தறித்த மரங்கள் தவித்துப் போய் வீட்டுக்குள் புகுந்து பார்த்தோம். எங்கள் புத்தகங்கள் (பொது நூலகத்தை எரித்தவர்களுக்கு இது அற்பம் தான்) ஆங்கிலப் புத்தகங்கள் தவிர மற்றையவை முழுவதும் ஒன்று தவறாமல் ஒரு அறையின் மத்தியில் கிழித்து குவித்திருந்தார்கள். அவ்வளவு புத்தகங்களையும் கிழிக்க எவ்வளவு நேரம் தேவைப்பட்டிருக்கும் இருவர் உட்கார்ந்து கிழித்ததற்கான அடையாளங்கள் தெரிந்தன. இப்படிப்பட்ட கொடுமை இவர்களுக்கு ஏன் இவ்வளவு குரூரம். வெட்டுவது, சுடுவது திடீர் திடீர் என செய்யும் செயல்கள்.*

*இப்படி ஆறுதலாக புத்தகங்களை கிழித்துப் பார் உன் தமிழை என்று செய்தார்களா? மோதி மிதித்து விடு பாப்பா. முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா என்றாரே பாரதியார். அப்படி ஏதாவது செய்ய வேண்டும் என பதறியது மனம். கிழிந்த புத்தகங்களின் குவியலைப் பார்த்துப் பார்த்து அழுதோம். காலம் மாறும். நல்வழி காட்ட நம் தலைவன் இருக்கிறார் அல்லவா என்றோ ஒருநாள் விடிவு முழுதாக வரும் அன்று வாழ நாம் இருக்காவிட்டாலும் நம் பரம்பரை இருக்கும்.*

\- சுந்தரி



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 08**

**பகுதி -44**

"டிப்ஸிடம் சில இயலுமைகள் இருப்பதை காட்டுற பல விஷயங்கள நான் அவதானித்திருக்கிறன். ஆனா, வீட்டில அவன் தன்னை அதிகமதிகம் வெளிப்படுத்துறவேளைகளில மிகவும் துக்கமாக இருப்பதுபோல் தோன்றுகிறது. இப்போது அவன் அந்த பொறுமையிழந்த வெறியாட்டங்களை செய்யிறயில்லை. வீட்டிலும் இல்லை. பள்ளிக்கூடத்திலையும் இல்லை. நேற்றைக்கு நடந்தது ஒரு வெறியாட்டமில்லை. தன்னைப்பற்றி தகப்பன் கூறியவற்றால் தனக்கு ஏற்பட்டதாக அவன் உணர்ந்திருக்கக் கூடிய அவமானத்துக்கெதிரான ஆட்சேபனைதான் அது. முன்பு மாதிரி எந்த நேரமும் அவன் விரல் சூப்புறயில்லை. வீட்டில் அதிகமதிகம் கதைக்கிறான். ஆனா தனக்குத்தானேதான் கதைத்துக்கொள்கிறான். எங்களோடு அல்ல. தகப்பனுக்கு கத்தினது ஒரு விதிவிலக்குத்தான். அவன் மாறிக்கொண்டு வாறான். அவனுடைய நிலை முன்னையவிட சீராக்கிக்கொண்டிருக்கிறது. அவன் சுகமாகிவிட வேணுமெண்டு கடவுளிட்ட பிரார்த்திக்க மட்டும்தான் என்னால முடியும்" மிகுந்த ஆர்வத்தோடு அவள் சொன்னாள்.

"நானும் அப்படித்தான் பிரார்த்திக்கிறேன்" என்றேன். நீண்ட அமைதி தொடர்ந்தது. இறுதியாக தனது கைப்பையிலிருந்து ஒப்பனை பெட்டியை எடுத்து முகத்தில் பவுடரை ஒற்றிக்கொண்டாள்.

இப்பிடி வேற எப்ப அழுதனான் எண்டு எனக்கே நினைவில்ல என்று சொன்னவள், மேசையில் இருந்த ரிசுத்தாள் பெட்டியைக் காட்டிக்கொண்டே "நீங்கள் ஆயத்தமாத்தான் இருக்கிறியள் அல்லவா... ஆனா இங்க உங்கட தோளில தலைசாய்த்து அழுகிறது நான் மட்டும்தான் என்றில்லை அல்லவா?"

"ஓம் இந்த விஷயத்தில் உங்களுக்கு கூட்டாளிகள் கனபேர் இருக்கினம்"

அவளின் முகத்தில் புன்னகை இழையோடியது. அவளுக்கும் டிப்சுக்குமிடையே சில பொதுவான சிறு சிறு தனித்துவமான பாங்குகள் பல காணப்பட்டன.

"இதை எந்தளவுக்கு நான் மதிக்கிறன் என்கிறத சொல்ல என்னால ஏலாது. ஒரு மணித்தியாலம் முடிந்துவிட்டதென்பது சாத்தியமான விஷயம் போல தோன்றயில்ல. ஆனா மணிகள் ஒலிக்கிறது எனக்கு கேட்குது. பதினொரு மணியாயிற்றுது" என்றாள். இந்தக் கட்டத்தில அவள் வீட்ட போக விரும்பவில்லை என்று கூறியிருந்தாலும் நான் அதிகம் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டேன். "இங்க சில வேளைகளில நேரம் எங்கட்ட இருந்து பிச்சுக்கொண்டு ஓடிவிட்டது போலத் தோன்றும்"

"ஓம்" அவள் எழுந்து நின்றாள். கோட்டைப் போட்டுக்கொண்டாள். "எல்லாவற்றுக்கும் நன்றி" என்றாள் போய்விட்டாள்.

இந்த வகையான உணர்ச்சி வெளிப்பாட்டை நாங்கள் எத்தனை தரம் கேட்கிறோம் என்கிறதுக்கு அப்பால (அடிக்கடி இது நடக்கும்) மனித செயல் தூண்டுதல் மற்றும் நடத்தைகள் மீண்டும் மீண்டும் நிகழ்த்திக்காட்டப்படும். பதில் வினைக் கோலங்களை உருவாக்கி விடுகின்ற தனியொரு அனுபவம் உணர்வு அல்லது என்று எதுவும் இல்லை ஒரு நபருக்கு செயல் நோக்கமளிப்பதும் அந்த நபருடைய பதில் வினைகளை நிர்ணயிப்பதுமான மிகவும் அந்தரங்கமான உணர்வுகள், அவரது இலக்குகள், விழுமியங்கள் முதலியவற்றோடு பின்னிப்பிணைந்திருக்கிற அனுபவங்களின் திரட்சி எப்போதுமே காணப்படும். தன்னுடைய கதைக்கு முன்னோடியாக அவள் என்ன சொன்னாள் என்று நினைவு படுத்திப்பார்த்தேன். "சொல்லக்கனக்க இருக்கு... சொல்லாமல் விடவும் கனக்க இருக்கு சிலதுகளை சொல்லாம விடுறதே நல்லது... ஆனா சொல்லாம விடுற கன விஷயங்கள் சுமையாக



ஆகிவிடும்" தனது மனச்சாட்சியின் மீது சுமையாக கனக்கும் அடிப்படை விடயங்கள் பற்றி அவள் புரிந்துகொண்டிருந்தாள். அநேகமாக தான் சொல்லாமல் விட விரும்பிய விடயங்கள் பற்றி அதிகப் புரிந்துணர்வை அவள் கொண்டிருக்கக்கூடும். தங்கள் இரகசியத்தை காக்க தொடர்ச்சியாக விழிப்புணர்வை பேணுவதாலேயே அவை பற்றி அவள் அதிக புரிந்துணர்வை பெற்றிருக்கக்கூடும். அநேகமாக அவளும் அவள் கணவனும் தங்கள் வாழ்க்கையின் முன் கூறுகளிலேயே தங்களைச் சுற்றி தங்கள் புத்திசாலித்தனங்களை அரண்களைப் போல் உயர்த்திவிட முடியும் என்பதையும் தாங்கள் ஒருபோதுமே புரிந்துகொள்ளக் கற்றுக் கொள்ளாத ஆக்கபூர்வமாகப் பயன் படுத்தக் கற்றுக்கொள்ளாத உணர்வுகளில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திவிடக்கூடும் என்பதையும் அறிந்துகொண்டிருக்கக்கூடும்.

டிப்சும் இதை அறிந்துகொண்டிருந்தான். கண்ணில் பட்டதையெல்லாம் வாசிப்பது, அசௌகரியமான உணர்வு ரீதியான பதில் வினைகளை எதிர்கொள்ளும்போது அந்தத்திறனைக் காட்சிப்படுத்துதல் உணர்வொன்றை நேரடியாக எதிர்கொள்வதை தவிர்த்தல் என்றவாறாக அவனது நடத்தை




கள் இருந்தன. பாதுகாக்கும் தன்மையானதான நடத்தையாக அது இருந்தது.

அவனுடைய தாயும் தந்தையும் தங்களுடைய சுய புரிந்துகொள்ளுதல் இல்லாமை மற்றும் உணர்வு ரீதியான முதிர்ச்சியின்மை முதலியவற்றுக்கு பலியானவர்களாக இன்னமும் இருந்தார்கள். உணர்ச்சி சார்ந்த முறையில் டிப்சுடன் உறவுகொள்ள தங்களுக்கு இருக்கும் இயலாமையை அவர்கள் கூர்மையாக உணர்ந்தார்கள். டொறத்தியோடும் அவர்கள் இப்படி உணர்ந்திருக்கக்கூடும். தங்களின் போதாத தன்மை, பாதுகாப்பின்மை உணர்வு முதலியவற்றின் ஆழத்தில் அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்தார்கள்.

டிப்ஸ் உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்று நான் நினைக்கிறேனா என்று டிப்ஸ்சின் தாயார் கேட்டபொழுது, அவன் உளரீதியாக பாதிக்கப்படவில்லை என்பதை வலுவாக வலியுறுத்திச் சொல்லியிருக்கலாம் அல்லது அதற்கு அப்பாலும் போய், மேலாண்மையான புத்திசாலித்தனம் கொண்ட குழந்தை அவன் என்று கூறியிருக்கலாம். இருந்தும் இந்த வேளையிலே அப்படி ஒரு மதிப்பீட்டை வெளியிடுவதென்பது அவ்வாறான மதிப்பீட்டின் சிறந்த நோக்கம் ஒன்றை முறியடிப்பதாக ஆகியி ருக்கும். முந்திய தினம் டிப்ஸ்சுக்கும் அவனது தந்தைக்குமிடையே இடம் பெற்றதாக அவள் விவரித்த நிகழ்வுகள் மற்றும் அவை தொடர்பாக அவளுக்குள் ஏற்பட்டிருந்த உணர்வலைகள் முதலியவை ஏற்படுத்தியிருந்த குற்ற உணர்வு இன்னும் கூர்மையானதாக ஆகிப்போயிருக்கும். அவ்வாறாக நான் செய்யும் மதிப்பீட்டை டிப்ஸ்ஸின் பெற்றோர் ஏற்றுக் கொண்டால டிப்ஸ் பெற்றிருந்த அறிவுத் திறன் என்ற கொடையை அவனது மேம்பாட்டினுடைய மையப்புள்ளியாக ஆக்குவதில் கவனம் செலுத்தியிருப்பார்கள். டிப்ஸ் தன் அறிவுத் திறனை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தான். அவனது ஒட்டு மொத்த அபிவிருத்தியில் காணப்பட்ட சமநிலையற்ற தன்மையே பிரச்சினையை உருவாக்கி விட்டிருந்தது, சில வேளை அவர்கள் தங்களது உணர்வு ரீதியானதும் சமூகரீதியானதுமான போதாத தன்மைகளின் முனைப்புப் படுத்தப் பட்ட உருவகமாக அவனை பார்ப்பதற்கு பதிலாக, தங்களையறியாமலே டிப்ஸை உளரீதியாக பாதிக்கப்பட்ட பிள்ளையாகக் காண்பதை தெரிவு செய்திருக்கக்கூடும். இவை எல்லாமே ஒரு வகையில் ஊகக் குறிப்புகள்தான்.

அவர்களுடைய நடத்தைகளுக்கு பின்னால் உள்ள காரணங்கள் பற்றி அறிவு பூர்வமாக ஆராய்வதென்பதை தனிப்பட்ட அபிவிருத்தியின் அடிப்படையாக இருக்கும் சித்தாந்தக் கூறாக பலர் ஏற்றுக்கொண்டிருந்தாலும், இங்கே பிரச்சினையின் உயிர்க் கூறாக அது இருக்கவில்லை. குறிப்பிட்ட சில வழிகளில் ஏன் விடயங்களைச் செய்கிறீர்கள், ஏன் உணருகிறீர்கள் என்று புரிந்துகொண்டால் நீங்கள் உங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள முடியும் என்று பலரும் நம்புகிறார்கள். பலசந்தர்ப்பங்களில் நானும் இப்படி நினைப்பதுண்டு. ஆனால், இவ்வாறான புரிந்துணர்வு காரணமாக ஏற்படுகின்ற பெரிய மாற்றங்கள், வழமையாகவே வெளிப்படையான நடத்தைகளில் ஏற்படுபவையாகவே இருக்கும். இது செயல் நோக்கங்களிலும் உணர்வுகளிலும் படிப்படியாக மாற்றங்களை கொண்டுவரும். இந்த வகையான மாற்றங்கள் நிகழ்வதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்று நான் நினைக்கிறேன். அத்தோடு, சில வேளைகளிலே இதற்கு சுயத்தின் மீதான முனைப்பான முன்னீடுபாடு தேவைப்படுவது போல் தோன்றலாம். இது ஏனையவர்களுடன் ஒரு தனிநபர் கொண்டிருக்கும் உறவில் அந்நபர் கொண்டிருக்கும் இடத்துக்கு இசைவுப் பொருத்தமற்றதாக அந்நபர் செலுத்தும் கவனத்தை ஆக்கிவிடலாம். அதாவது அவருடைய உலகம் அதிகளவில் தன் மையம் கொண்டதாகவே இருக்கும். அவரது வெளிப்படையான செயற்பாடுகள் அப்படியில்லை என்று காட்ட முயன்றாலும் அதுதான் உண்மையாகவிருக்கும்.

ஆளுமைக்கட்டமைப்புக்கள், மற்றும் சிகிச்சை தொடர்பான பல்வேறுபட்ட கோட்பாட்டு ரீதியான உருவாக்கங்கள் உள்ளன. உளவியல் சிகிச்சையில் கைக்கொள்ளப்படும் பல்வேறு முறைகள் இருப்பது ஏன் என்பதை இது விளக்குகிறது.

(தொடரும்)

---

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

எகிப்தியர் பயன்படுத்தினர்.

3. கூச்மரப்பட்டை- வட இந்தியர்
4. ஓலைச்சுவடிகள்- இந்தியர். இலங்கையர் பயன்படுத்தினர்.
5. ரலிப்பொட் இலை- தென் இலங்கையில் பயன்படுத்தினர்.
6. டிச் என்ற ஒருவகை மரப்பட்டை- அமெரிக்கா, ரஷ்யா
7. போச்மன்(செம்மறி, வெள்ளாட்டுத் தோல்) பரவலாக.
8. வெல்லம் (Vellum) (கன்று தோல்) - பரவலான பயன்பாடு.
9. பட்டு-சீனர்.
10. கடதாசி - தற்போது பயன்பாட்டிலுள்ளது. இதை சீன தேசத்து "இசைலன்" (Isailun) என்பவர் கண்டுபிடித்தார்.
11. அச்சு இயந்திர வருகை- ஜேர்மன் நாட்டவரான "கூட்டன்போர்க்"

ஆரம்பத்தில் தகவல் பற்றி ஆராயும் சிந்தனை மனிதனிடம் இருக்கவில்லை. ஏனெனில் அதற்கான தேவையும் இல்லை. விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி, அச்சு இயந்திர வருகை, இலவசக் கல்வி அறிமுகம் நூல்கள் பெருக வழி வகுத்தன. இன்று நூல்கள் நாளுக்கு நாள் பெருகிய வண்ணமே உள்ளன. இதற்குக் காரணம் "தகவல் வெடிப்பு" (Information explosion) ஆகும். நூல்கள் என்பவை மனிதனது கருத்துக்களை தாங்கி எதிர்கால மனித சமுதாயத்துக்குரிய தகவல் வளமாக விளங்குபவை ஆகும்.

இவ்வாறு நாளுக்கு நாள் அதிகரிக்கும் நூல்களை ஏதோவொரு அடிப்படையைப் பின்பற்றி நூல்களை ஒழுங்குபடுத்தி இலகுவான அணுகுமுறையில் "சரியான தகவல் உரிய வாசகனுக்கு உரிய நேரத்தில் சென்றடைய வழிவகுத்துக் கொடுக்குமிடமே நூலகம்" ஆகும்.

"நூலகம்" என்ற பதம் "லிபர்" (Liber) என்ற இலத்தின் சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டது. இது அரச ஆவணங்களை பாதுகாத்து வைக்கும் இடமென பொருள்படும். இதிலிருந்தே "லைபிரரி" (Library) என்ற சொல் தோன்றியது.

ஆனால் தற்காலத்தில் நூலகம் என்ற பதம் நூல், நூலுருவற்ற சாதனங்களை (CD, ஒலி நாடா, ஒளிநாடா, DVD கொண்ட ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவுக் களஞ்சியமே நூலகம் ஆகும். இவ் நூலகங்கள் வெறுமனே பொழுது போக்கிற்கு உரியது அன்று வாசகர் நன்மை கருதி தொடர்ச்சியாக வளர்ந்து வரும் நிறுவனம் ஆகும். இதற்கு வாசகர்கள், அங்கத்தவர்கள் காட்டும் அக்கறை, ஆர்வமே துணை நிற்கிறது.

நூலகங்கள் ஆரம்பத்தில் நூல்கள் சுவடிகளை ஒளித்து வைக்கும் இடமாகவே விளங்கின. சீன மொழியில் [illegible]லகம் என்ற பதத்திற்கு ஒளித்து [illegible]த்தல் என பொருள்பட ஓவிய எழுத்தால் குறிப்பிடப் பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

பின்பு நூலகங்கள் பாதுகாக்கும் இடமாகயிருந்து இன்று நிறுவனமயப்பட்டு இரவல் வழங்கும் நிலையமாக பரிணமித்துள்ளது. ஆரம்பத்தில் நூல்களை பாதுகாப்பதே நோக்கமாக இருந்தது. இன்று போல் அன்று இரவல் வழங்கும் சிந்தனை வளரவில்லை.

ஏனெனில், அக்காலத்தில் குறித்த வகுப்பினர் கல்விமான்களாக காணப்பட ஏனையோர் கல்வி அறிவு அற்றவர்களாகக் காணப்பட்டனர். மதத்தலைவர்கள், அரசர்கள், பிரபுக்கள் போன்ற வகுப்பினரே தமது சொந்தத் தேவை, நோக்கத்திற்காக நூல்களை சேகரித்து பாதுகாத்து வந்தனர். அக்காலப் பகுதியில் நூல்கள் புத்தக அலுமாரிகளுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன.

இன்று நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக நூல்களும், நூலுருவற்ற சாதனங்களும் நாளுக்கு நாள் பல்கிப் பெருகிய வண்ணம் உள்ளன. நூலக தகவல் (நூல்கள்) சாதனங்கள் என்று குறிப்பிடும் போது "களிமண் பதிவு முதல் கணனிப்பதிவு" வரை ஆகும். நூலகங்களின் பிரதான நோக்கம் சொற்களுக்கான அர்த்தம் தேடல் ஆகும்.

அந்த வகையில் உலகம் பூராக பல்வேறு வகையான நூலகங்கள் உள்ளன. அவையாவன,


1. பொதுசன நூலகம்
2. பாடசாலை நூலகம்
3. பல்கலைக்கழக நூலகம்
4. விசேட நூலகம்
5. தேசிய நூலகம்

இதில் பாடசாலை நூலகங்கள் மனிதனுக்கு நூலக பயனபாட்டை ஆரம்பித்து வைக்கும் முதல் நிறுவனமாக செயல்படுகிறது. அடுத்தபடியாக பொதுசன நூலகங்கள் ஆகும். அதற்கும் அடுத்ததாக ஏனைய நூலகங்கள் விளங்குகின்றன.

இந்த நூலகங்கள் மனித அறிவின் திறவுகோல்களாக விளங்குகின்றன. மனித அறிவின் தேடலுக்குரிய இடமாக திகழ்கிறது. தேடலுக்குரிய அடிப்படை நல்ல வாசிப்புப் பழக்கம் ஆகும். வாசிப்பு முதலில் மெல்ல வாசிப்பு (Light Reading) தொடர்ந்து மேலெழுந்த வாசிப்புக்கு (Bird eye View) இட்டுச் செல்லும். தகவல் தேடுதலுக்கு (Literature sear ching) ஆக ஆழமான வாசிப்புக்கு (Heavy Reading) இட்டுச் செல்லும். நல்ல வாசிப்பு ஒரு மனிதனை பூரண மனிதனாக மாற்றும். பல தரப்பட்ட நூல்கள் தகவல் சாதனங்களை தன்னகத்தே கொண்ட நூல் நிலையங்கள் மனித அறிவின் "திறவு கோல்கள்"ஆகும்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




*பாவலா!*

*நீர் ஒரு அரசியல் வாதியாக வந்தால் தமிழர்களுக்கு என்ன செய்வீர்?*

*துஷி,*
*புளியங்குளம்.*

வாக்குறுதிகளை அள்ளி வழங்கி வாக்குகளை அள்ளிக் கொள்வேன்..! (அப்படியென்றால் தான் என்னை அரசியல்வாதியென மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.)

*பாவலா!*

*இன்றைய விஞ்ஞான உலகில் இல்லாதது எது?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

மெஞ்ஞானம் மட்டுமே!

*பாவலா!*

*தமிழீழ அரசியல் குழுவின் ஐரோப்பிய பயணமும் தென்னிலங்கை நிலைமை பற்றியும் ஒருவரி கூறும்?*

*சுதன்,*
*கிளிநொச்சி.*

தமிழர்கள் பற்றியும் தமிழீழம் பற்றியும் உலகம் உணரும் காலம் இது. தென்னிலங்கைப் பேரின வாதம் மட்டும் உண்மையை உணரமறுக்கிறது.

*பாவலா!*

*விளையாட்டுகளுக்குள அரசியல் புகுந்து விளையாடுகிறதே இவற்றை நிறுத்த இயலாதா?*

*கருணாகரன்,*
*உருத்திரபுரம்.*

விளையாட்டுத்தனமான அரசியல்வாதிகளால் விளையாட்டிலும் ஊழல் மோசடி அதிகரித்து விட்டது.

*பாவலா!*

*திருடர்களை திருத்துவதற்கு ஒருவழி சொல்லும்?*

*மயூரன்,*
*திருவையாறு,*

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சொன்ன வரிகள்தான் நினைவுக்கு வருகிறது.

''திருடனைய் பார்த்து திருந்தாவிட்டால்
திருட்டை ஒழிக்கமுடியாது...''

*பாவலா1*

*அறிவாளி எப்போது முட்டாள் ஆகிறான்.?*

*கோகுலன்,*
*பரந்தன்.*

முட்டாள்களை அரசியல் வழிகாட்டிகளாக ஏற்கும்போது....

*பாவலா!*

*யுத்தம் என்று ஒன்று தொடங்கினால் அது எதில் போய் முடியும்?*

*கேதீஸ்வரன்,*
*மல்லாவி.*

நீதிவென்றதாலும் கூட, எல்லா யுத்தமும் மனிதத்தின் தோல்வியில்தான் முடிகின்றன.

*பாவலா!*

*கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற போராளிகள் மீதான படுகொலைகளை விசாரிக்க சனாதிபதியால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*அஜந்தன்,*
*முள்ளிவாய்க்கால்.*

இத்தகைய விசாரணைக் குழுக்கள் குறித்து நினைப்பதற்கு எதுவுமேயில்லை. காலத்தை கடத்தி மக்களை மடையர்களாக்கும் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே இது வாகும்.

*பாவலா!*

*தென்றல் வானொலியில் ஒலிபரப்புகின்ற இதயவீணையின் அறிவிப்பாளர்கள் மாரித்தவளைகளை போன்று கத்துகிறார்கள் இந்தத் தவளைகளின் சத்தம் எதுவரை தொடரும்?*

*மயூதரன்,*
*சிறுப்பிட்டி.*

மாரி அடங்க ஒடுங்கிவிடும்.

*பாவலா!*

*எரிபொருள் விலை ஏற்றத்தின் பின் சில கடைக்காரர்கள் தங்கள் அளவு கோலை அடித்து உள்பக்கமாக ஒடுக்கி வைத்திருக்கிறார்கள் இவர்களை என்ன செய்யலாம்?*

*விஜயகுமார்,*
*விசுவமடு*

இவர்களும் ஒருவகை சமூக விரோதிகள்தான். எரிபொருள் பிரச்சினை எரியும் பிரச்சினையாக இருக்கும்போது மக்களின் எரிச்சலைக் கட்டிக்கொள்பவர்கள்...

*பாவலா!*

*தமிழீழத்துப் பெண்கள் பற்றிய உங்கள் கருத்து.*

*மனோ-கிஷாலினி,*
*புதுக்குடியிருப்பு.*

களம் சென்று பகை வென்று வரலாறு படைத்தவர்கள் ஆணியல் பெண்ணியல் என்பவற்றிற் கப்பால் "மனிதனியம" பற்றிச் சிந்தித்து எழுச்சி கொள்ளவேண்டியவர்கள்.

*பாவலா!*

*இதயவீணை நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள் தமிழர்கள் என்பது எண்டு சந்தேகமாக இருக்கிறது உமக்கு என்ன தோன்றுகிறது?*

*தெய்.சதீஸ்பாபு*
*கைதடி.*

பச்சோந்தித் தமிழர்கள் செந்தமிழருக்கான அடையாளத்தை தொலைத்து விட்டவர்கள்.

*பாவலா!*

*சந்திரிகாவின் யுத்தகால அரசியலுக்கும் சமாதான கால அரசியலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?*

*பத்மசுதந்திரா,*
*உடையார்கட்டு.*

அது சமாதானத்திற்கான யுத்த அரசியல்.
இது யுத்தத்திற்கான சமாதான அரசியல்.




"யாழ்ப்பாணம் ( )வாறன்- எங்க இஞ்சால -நானும் யாழ்ப்பாணம் போயிற்றுத்தான் வந்தனான். மூண்டு நாலுநாளா ஒழுங்கான தண்ணி வெந்நியில்ல. நல்லொரு தேத்தண்ணி குடிப்பமெண்டு வந்தால் நீரும் ரீக்கடைக்க... கஹ

-என்ர கெதிதான்போல என்னப்பா-வரியப் பிறப்போட ஒருக்கா சொந்தபந்தங்களப் பாப்பமெண்டு போனன். என்ன மனிசரப்பா? ஒரு வீட்டிலுந் தேத்தண்ணியொழுங்கில்லப் பாரன்.

-பின்ன என்னப்பா... ஆரப்பார் ஆக்களக் கண்டவுடன எழும்பிவந்துதன்னும் ஆர்வங் காட்டுதுகளே-உடன பிறிச்சத் திறக்கிறது. சோடாவை ஊத்திக் கொணந்து தந்திட்டு, நாடக இடைவெளிக்க விளம்பரம் போகத்தான் எப்ப மாமா வந்தியள் எண்டு துவங்குதுகள்.

-இதே கதைதான் என்ர பாடும். தேத்தண்ணி அடுப்பில வைக்கிறேல்ல சலோலயிட் ஜொக்கில கீட்டரப் போட்டு ஒரு சுவைக்குதவாத தண்ணி அதுகும் காலமமட்டுந்தான்.

- நீ உதைச் சொல்லுற என்ர அக்கா ரெண்டுநாளாச் சமைக்கேல்ல- என்னப்பா... கொட்டல் சாப்பாடே...

- ச்சா மனிசி வரியத்துக்கு நாளுக்கு அடுப்பு மூட்டினவயாம் கையோட நாலு கிலோ இறைச்சியையும் அதுக்கேற்ற மரக்கறிகளையும் சமைச்சு பிறிச்சில வைச்சிட்டுது. அப்பப்ப காஸில வச்சு சூடாக்கிப்போட்டு இப்ப மூண்டுநாளாத் தின்னுதுகள்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –116




நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினை வுப் பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள்–116

............................................................
............................................................
............................................................
............................................................

பெயர் : ............................................ **ஈழநாதம்**
முகவரி : ............................................ யாழ்சாலை,
............................................ கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –115



**ரா.சுஜந்தன்,**
**பரவிப்பாஞ்சான்.**

### பரிசுக்குரிய வரிகள்

*அநாதைகள் என்ற பெயரில்லை*
*சாதி மத பேதங்களும் இல்லை*
*துயர் மறந்து சிறார்கள் நாம் வாழும் தேசம்*
*மாவீரர்களின் வரலாறு பேசும் தமிழீழம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கூடிக்குலவி அமர்ந்து உணவை பகிர்ந்து*
*வற்றாத ஊற்றாய் அன்பை பெற்று, நற்பண்பை பேணி*
*முத்தமிழ் வளர்த்து, தலைவர் மாமா எண்ணம் போல்*
*தரணியிலே தமிழீழம் பெற்றிடுவோம்*

சு.செல்வி,
பரந்தன்.

*சுனாமிப் பேரலையால் சொந்தங்களைப் பிரிந்து*
*அநாதையாய் அல்லல்பட்டோம் இப்போது*
*அன்புச் சோலையின் அரவணைப்பில்*
*துன்பங்கள் மறந்து சுவைக்கின்றோம் உணவை.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*தமிழீழத்தின் பெரும் சொத்துக்களே தந்தை தாய் பிரிந்த*
*சோகம் இனியும் வேண்டாம்- உமை செழிக்க வைக்க*
*மனிதநேயம் கொண்ட பெற்றோர் நாம் உள்ளோம்*
*உவகையோடு வயிறார உண்ணுங்கள் உணவை.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*தமிழீழத்தில் வாழும் அநாதைகள் அல்ல*
*தலைவன் வழியில் தமிழீழம் காக்க*
*பல தாயின் கருவில் உருவான*
*சிறுவர்களே நாங்கள்.*

க.கவாஸ்கர்,
கிளிநொச்சி.

## வாசகர் கவனத்திற்கு

இப்பகுதியில் வெளியாகும் படத்திற்கு மெருகூட்டுங்கள் கவிதை வரிக்கான பரிசுக்குரியவர்களுக்கான நினைவுப்பரிசினை பெறுவதற்கான கடிதங்கள் இதுவரை கிடைக்காதவர்கள் எமது கிளிநொச்சி பணிமனையிலும் புதுக்குடியிருப்பு பணிமனையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு







கிளி நகரில் அன்னைபூபதி நினைவாக நடைபெற்ற நிகழ்வில் பதிவான இரு காட்சிகள்

















இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது